உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் பிரசுரமாகும்
## ஒரு தமிழ்ப்பத்திரிகை.

எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்—திருவள்ளுவர்.

தொகுதி-ச.] விசுவாவசுஹ மாசிமீ [பகுதி-ச.

## உள்ளுறை.

காலஞ்சென்ற ஸ்ரீகனகசபைப்பிள்ளையவர்களும் அவர் தமிழாராய்ச்சியும்.— பத்திராசிரியர் கஙங
கருவூர்த்தேவர்.—ஸ்ரீமத்-மு. ரா. அருணாசலக்கவிராயர் கசக
கொழுவூர்த்துன்னூசியும—ஸ்ரீமத்-ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை கசரு
பெரியபுராண அரும்பத விளக்கம்.— ஸ்ரீமத்-ஜி. சதாசிவம்பிள்ளை கசஎ
பரிமேலழகருரைப்பாயிரம்.—பத்திராசிரியர் கருச
பாலமுது.—ஸ்ரீமத்-செ. வீ. இராஜகோபாலாசாரியர் கருகூ
பிரதமவித்தியாப்பியாசப் பிரகடனம்:— ஸ்ரீமத்-சேஷம்பாடி. இராஜகோபாலாசாரியர் கசா0
பொன்னெறும்புகள்.—ஸ்ரீமத்-ஸ்ரீவத்ஸாசாரி கசாகூ
மகாபாரதச்செய்யுட் பாடாந்தரம்.— ஸ்ரீமத்-சேற்றூர்-சுப்பிரமணியக்கவிராயர் கஎரு
தனிச்செய்யுட்கோவை.—ஸ்ரீமத்-சேற்றூர்-இராமசாமிக்கவிராயர் கஎகூ
தொல்காப்பியஞ்செய்யுளியல் நச்சினார்க்கினியம்.— ஸ்ரீமத்-ரா. இராகவையங்கார் கஅரு
இயற்கைப்பொருட்பாடம்.—ஸ்ரீமத்-செ. வீ. இராஜகோபாலாசாரியர் சக
மதுரைத் தமிழ்ச்சங்கத்துத் தனித்தமிழ்ப் பரிக்ஷைகளிற் றேறினோர் குறிப்பு.—

மதுரை:
தமிழ்ச்சங்க முத்திராசாலைப்
பதிப்பு.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] 1906. [தனிப்பிரதி அணா 8.

உ

## திருச்சிற்றம்பலம்.

நம் மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் "பாண்டியன் புத்தகசாலை"க்கு அடியிற்குறித்த அபிமான சிலர்கள் அச்சுப்பிரதிகள் உதவினமைக்குப் பெரிதும் நன்றிகூறுகின்றேன்.

### அச்சுப்பிரதிகள்.

1. 1907 பி. ஏ. தமிழ் டெக்ஸ்டு உரையுடன்
2. ,, எப். ஏ. தமிழ்டெக்ஸ்டு உரையுடன்
3. 1906 மெட்ரிக் தமிழ்டெக்ஸ்டு உரையுடன்

} ஸ்ரீமத்-வை. மு. சடகோபராமாநுஜாசாரியர், தமிழ்ப்பண்டிதர், கவர்ன்மெண்டு காலேஜ், கும்பகோணம்.

4. பராபவவருஷத்துத் திருக்கணித பஞ்சாங்கம்
5. கவுளிநூல்விளக்கம் மூலமும் உரையும்

} ஸ்ரீமத்-ஹோ. கார்த்திகேய ஐயர், யாழ்ப்பாணம்.

6. விசித்திரவினாவிடை, வடிவேலவவெண்பா } ஸ்ரீமத்-சதுரை. அ. சிவசிதம்பரம் பிள்ளை, சென்னை.
7. கிறிஸ்தவஞான முகாந்திரம்.— } ஸ்ரீமத்-எ. எஸ். அப்பாசாமிபிள்ளை, வக்கீல், பாளையங்கோட்டை.
8. இராமபாணம்.—ஸ்ரீமத்-ஆ. சுப்பிரமணியபிள்ளை, வண்ணார்பண்ணை.
9. கதிர்காமம் மாணிக்கப்பிள்ளையார் திருவருட்பா } ஸ்ரீமத்-தி. சிவசிதம்பரம்பிள்ளை, பிரசித்தநொத்தாரிஸ், சிலோன்.

பொ. பாண்டித்துரை.

அக்கிராசனாதிபதி.

# ஒரு பெருந்துக்கம்.

சென்னைத் தபாலிலாகா சூப்பெரின்டன்டனாக விளங்கியவரும் தமிழாராய்ச்சியையே தம்மின்பவிளையாடலாகக் கொண்டிருந்தோருமாகிய **ஸ்ரீமத்-வி. கனகசபைப் பிள்ளை**யவர்கள், பீ. ஏ., பீ. எல். நிகழும் மாசிமீ 21உ காஞ்சியில் திடீரெனச் சிவபதமடைந்தசெய்தி கேட்டு ஆறாப்பெருந்துயரம் அடைகின்றோம். பிள்ளையவர்கள், யாழ்ப்பாணத்து மல்லாகத்திலே வித்துவபரம்பரையொன்றில் உதித்தவர்கள். அன்பு அருள் ஒப்புரவு கண்ணோட்டமுதலிய அருங்குணங்களெல்லாம் ஒருங்கமைந்தவர்கள். ஆங்கிலபாஷா நிபுணராயும் அரசாங்கத்தில் உயர்நிலைமை வகித்தவராயும் விளங்கிய இவர்கட்குத் தமிழ்ப்பாஷையிலிருந்த ஆராய்ச்சிவன்மையும் அபிமானமும் அளவிடத்தக்கனவல்ல. "1800-வருஷங்கட்கு முந்திய தமிழர்" என்னும் பெயரிட்டு ஆங்கிலத்தில் அவர்களால்வெளியிடப்பட்டுள்ள நூலொன்றே கனகசபையவர்களது அருமைபெருமைகளை வெள்ளிடைபோல விளக்கத்தக்கது. அகக்கருவி புறக்கருவிகளைக் கொண்டு தமிழ்ச்சரித்திரங்களை அதிநுட்பமாக அவர்கள் ஆராய்ந்திருத்தல் அறிஞரெல்லாம் அறிந்து வியந்ததொன்றாம். இவையன்றி, நம் தமிழ்ச்சங்கத்தில் பிள்ளையவர்கள் வைத்திருந்த அபிமானமோ அளவற்றது. சென்ற ஆண்டுநிகழ்ந்த சங்கவருஷோற்சவகாலத்தில் அக்கிராசனம் வகித்துத் தம்மினிய பிரசங்கத்தாலும் அமைதிக்குணங்களாலும் கேட்டவர்கண்டவர் மனங்களைப் பிணித்தார்கள். 'செந்தமிழ்'க்கு "சோழசக்கரவர்த்திகள்" "தமிழ்ப்பெருமை" என்ற வியாசங்கள் எழுதிப் பெருமைப்படுத்தினார்கள். தமக்கிருந்த வேலைமிகுதிக்கிடையே, தந்தாய்மொழியின்பொருட்டு இடையீடின்றியுழைத்துச் சிறப்பித்த இவர்கள், ஒருவரும் எதிர்பாராதிருக்கு நிலையில் திடீரென அகாலமரணத்துக்காளானமை, இத்தமிழகத்துக்கும் முக்கியமாக இச்சங்கத்துக்கும் ஆறாப்பெருந்துயரத்தை அளித்துநின்றன. கல்வியறிவொழுக்கங்களான் நிரம்பிய பிள்ளையவர்கட்கு ஆயுள் நிரம்பாமைக்குக் காரணம்,

"பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் வீயவுங்
கல்லாதார் வாழ்வ தறிதிரேற்—கல்லாதார்
சேதன மென்னுமச் சேறகத் தின்மையாற்
கோதென்று கொள்ளாதாங் கூற்று."

என்னும் நியாயம்போலும்! அந்தோ!!

# கண்காட்சி விளம்பரம்.

மதுரை விவசாய கைத்தொழில் கண்காட்சி மதுரையில் நிகழும் 1906ஆம் மேமீ 3உ முதல் 10உ முடிய விவசாயக் கைத்தொழில் கண்காட்சியும் கால்நடைக்காட்சியும் வைப்பதாய் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. காட்சிப்பொருள்களை கண்காட்சிக்கு அனுப்பப் பிரியமுள்ளவர்கள், கடைசியாக 1906ஆம் ஏப்பிரல் மாசம், 20உக்குள் காட்சிப்பொருள் ஜாப்தாவை காரியதரிசிகளுக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். கண்காட்சி சம்பந்தமான விதிகள், பாரங்கள், காட்சிப்பொருளட்டவணை முதலியவை வேண்டியிருந்தால் காரியதரிசிகளுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். ரெயில் மார்க்கமாய் காட்சிப்பொருள்களை அனுப்பவும் திருப்பி வாபஸ்பெற்றுக்கொள்ளவும் ரெயில்வேகம்பெனியார் மிகவும் குறைந்தவிதமான ரேட்டு ஏற்பாடுசெய்திருக்கிறார்கள். இவ்வேற்பாடு, 1906ஆம் ஏப்பிரல்மீ 20உமுதல், மேமீ 31உ வரையில் ஊர்ஜிதத்திலிருக்கும்.

ஸி. ஸ்ரீநிவாச ராவ்,
பி. சுப்பராய அய்யர்,
எல். கே. துளசிராம்,
ஆனரரி செக்ரிடேரிகள்.

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௪.] விசுவாவசு௵ மாசி௴ [பகுதி-௪.

### காலஞ்சென்ற

## ஸ்ரீமத்-கனகசபைப்பிள்ளையவர்களும் அவர் தமிழாராய்ச்சியும்.

தமிழரின் பண்டை நாகரிகச்சிறப்புக்களை, தமிழ் நூல்களையும் புற நூல்களையுந் துணைக்கொண்டு, நவீனமுறைக்கேற்ப ஆராய்ச்சி செய்த ஆங்கிலம்வல்ல அறிஞருள்ளே, சமீபகாலத்தில் தமிழகம்வருந்தக்காலஞ்சென்ற ஸ்ரீமத்-கனகசபைப்பிள்ளையவர்களை முதல்வராகச்சொல்லுதல் புனைந்துரையாகாது. இந்நூற்றாண்டில், ஆங்கிலத்தினும் தமிழினும் அதிமேதையராய்விளங்கிய தமிழ்மக்கள்சிலரும் உளராயினும், தமிழின் பழைமைபெருமைகளை, நுண்ணறிவாலும் ஆராய்ச்சிவன்மையாலும் நூன்முகமாகவெளியிட்டுத் தம்புகழ்நிறுவிய தன்மையில் பிள்ளையவர்களையடுத்தே அவர்கள் நிற்றற்குரியர். கனகசபையவர்கள் ஆங்கிலத்தில் வெளியிட்ட "1800-வருஷத்துக்கு முந்திய தமிழர்" (The Tamils 1800-years ago) என்னும் அரும்பெறனூலே, அவர்களது ஆராய்ச்சித் திறனையும் நுண்ணறிவையுங் காட்டவல்ல சாஸனமென்னலாம். கடைச்சங்க நாளிலிருந்த தமிழ்நாட்டினியல்களையும், யவனர் முதலிய அந்நியர்க்கும் தமிழர்க்கும் அக்காலத்துநிகழ்ந்த தொடர்புகளையும், தமிழரது சாதிகுலங்களையும், தமிழ்ப்பேரரசர் சிற்றரசர் வரலாறுகளையும், தமிழர் வழக்க ஒழுக்கங்களையும், பண்டை நூலாசிரியர் சரிதங்களையும், தமிழர் மதக்கொள்கைகளையும், பிறவற்றையும்பற்றி அரிய பெரிய நுணுக்கங்காட்டிப்

பிள்ளையவர்கள் எழுதிப்போந்த விஷயங்கள், தமிழினும் ஆங்கிலத்தினும் பயிற்சியுடைய ஒவ்வொருவர் உள்ளத்தையும் கவரத்தக்கன வென்பதில் ஐயமில்லை. நாகரீகமும் அறிவாற்றல்களும், தமிழர்பால் முற்காலத்தே புகழத்தக்கவாறு அமைந்திருந்த தன்மையை, அகக் கருவிபுறக்கருவிகள் கொண்டு, இனிய நடையிற் பிள்ளையவர்கள் எழுதிச்செல்லும் திறமை பெரிதும் வியப்புறுத்தவல்லது. அவர்களுடைய நூலை நீளப்படித்துவந்தால், அதன்கணுள்ள வாக்கியங்கள் பெரும்பாலும் ஒவ்வோராதாரத்தைக்கொண்டு எழுதப்பட்டிருத்தல் காணலாம். பிள்ளையவர்கள், தமிழ்க்குரிய சரிதத்தை அந்நியபாஷையில் எழுதிச்சென்றது ஒருகுறையென்று சிலர்கருதக்கூடுமாயினும், ஆராய்ச்சியில்லாதே தமிழின் பழைமைபெருமைகளைக் குறைக்கிப் போகும் ஆங்கில பண்டிதரை அறிவுறுத்தற்கு அப்பாஷை வேண்டப்படுவதேயாம். அன்றியும் தாமெடுத்துக்கொண்ட சரித்திர சம்பந்தமான விஷயங்கள் அமைதற்கு ஆங்கிலம் ஏற்றதென்பது பிள்ளையவர்கள் கருத்தாகவிருத்தலுங் கூடும். கனகசபைபவர்கள் ஆங்கில பாஷையிற்காட்டும் அற்புத நடைபோலவே, தமிழிலும் எழுதவல்லவர்களென்பதைச் செந்தமிழில் முன்பு அவர்கள் எழுதிப்போந்த 'தமிழ்ப்பெருமை' என்னும் வியாசமே நன்கு விளக்கவல்லது.

பிள்ளையவர்கள், மேற்குறித்த நூலையன்றி, அவ்வக்காலங்களிற் பத்திரங்களுக்கு எழுதிய அரியவிஷயங்களும் பல உண்டு. அவர்கள் ஆராய்ச்சிகளில் வெளிவந்த தமிழ்ச்சரித்திர நுட்பங்களும் எண்ணிறந்தனவாம். அவையெல்லாவற்றையும் இங்கு எடுத்துக் கூறுதற்குப்போதிய விடமும் அவகாசமுமில்லையேனும், அவற்றுட் சிலவற்றைச் செந்தமிழபிமானிகளும் படித்துமகிழுமாறு கீழே வரைகின்றேன்.

நூற்றுவர்கன்னர் :—சிலப்பதிகாரத்திலே, செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயிலெடுப்பித்து விழாக்கொண்டாடிய காலத்தே, இலங்கையரசனாகிய கயவாகு என்பானும் உடனிருந்தனனென்று கூறப்பட்டுள்ளது. இலங்கைப் பழைய சரித்திரநூல்களாகிய மகாவம்சம், தீபவம்சம் முதலியவற்றிற்கண்ட அத்தீவஅரசர் வரிசையில், கயவாகு என்னும் பெயருடையார் இருவர் காணப்படுகின்ற

னர். அவருள் பிந்தியவன் மிகவும் பிற்காலத்தவனாதலின், முதற் கயவாகுவே சிலப்பதிகாரத்துக்கேற்றவனென்று கொள்ளத்தக்கது. இவ்வேந்தன், இற்றைக்கு 1750-வருஷத்துக்கு முன்பிருந்தவ னென்பது அவ்விலங்கா பாலமியங்களாற் பிரசித்தமாம். ஆகவே அக்கயவாகுவுடன் விழாக்கொண்டாடிய சேரன் செங்குட்டுவனும் அவனைச் சார்ந்தோரும் இற்றைக்கு 18-நூற்றாண்டிக்கு முன்பு விள ங்கியவரென்பதாயிற்று. இக்கொள்கையைக் கனகசபையவர்கள் தம் நூனுகிய ஆராய்ச்சியால் மற்றோராதாரங்காட்டி நிறுவியிருத்த ல் புகழத்தக்கது. சிலப்பதிகாரத்திலே, செங்குட்டுவன் வடக்கேசெ ன்றிருந்தகாலத்துக் கங்கையாற்றை நூற்றுவர்கன்னர் கொணர் ந்த படகுகளாற் கண்டிச்சென்றனென்றுசொல்லப்படுகின்றது. இ ந்நூற்றுவர்கன்னரென்போர் வடமொழியிற் ‘சதகர்ணி’ என்றழை க்கப்பெறுவர் என்றும், இவர் மகதநாடாண்ட ஆந்திரவரசரென்றும், இவ்வரசர் இற்றைக்கு 1750-வருஷத்துக்கு முன் விளங்கியவரென் றும் விஷ்ணுமற்சபுராணங்களைக்கொண்டு பிள்ளையவர்கள் காட்டியி ருக்கின்றார்கள். இவ்வரிய விஷயம், இளங்கோவடிகள் உடன்பிறந் தாளுகிய செங்குட்டுவன், 1750-வருஷத்துக்கு முன்னிருந்த இலங் கை வேந்தனுகிய கயவாகு காலத்தவனென்று முற்கூறியதனோடு பெரிதும் ஒற்றுமைப்பட்டு, கடைச்சங்ககாலத்தைக் கரதலாமலகமா க்குதல் காண்க. இவ்வரியசரித்திர நுட்பத்தை வெளியிட்டவருடைய ஆராய்ச்சி வியக்கத்தக்கதன்றோ?

தமிழகம்:—நம் தமிழ்நாட்டுக்கு முற்காலத்திலே வழங்கிய பெ யர் “தமிழகம்” என்பது. இஃது, ‘இமிழ்கடல் வரைப்பிற் றமிழக மறிய” எனச் சிலப்பதிகாரத்தும், “சம்புத் தீவினுட் டமிழக மருங் கில்” என மணிமேகலையினும், “இமிழ்கடல் வேலித் தமிழகம் வி ளங்க” எனப் பதிற்றுப்பத்துப்பதிகத்தினும் வருதலால் இனிது தெ ளியப்படும். இத்தமிழகம் என்ற பெயர், 1750-வருஷத்துக்கு முந் திய டாலமி முதலிய யவனபண்டிதர் குறிப்புக்களில் “லிமிரிக்” என வும், 1600-வருஷத்துக்குமுன் வரையப்பட்டதென்று கருதப்ப டும் “பியூடிஞ்சர்” பட்டத்தில் “டமிரிக்” எனவும் திரித்து வழ ங்கப்பட்டுள்ளது. இவற்றால் கடைச்சங்கநாளில் நந்நாடு தமிழக

மென்னும் பெயரால் வழங்கப்பெற்றதென்பது விளக்கமாம். நம் தமிழ் நாட்டின் ஆதிப்பெயர் இஃதென்று தம் ஆராய்ச்சியால் விளங்க வைத்தவர் பிள்ளையவர்களே.

குமரியாற்றினழிவு:—சிலப்பதிகாரம், கலித்தொகை முதலிய நூல்களிற் கூறப்பட்ட குமரியாறு கடல்கொள்ளப்பட்டது, இற்றைக்கு 2100-வருஷங்கட்கு முன் நிகழ்ந்ததென்று மகாவமிச முதலிய நூல்கள் கொண்டு பிள்ளையவர்கள் வரையறுத்துள்ளார்கள். இக்கொள்கையே முடிபாகுமென்பதை, மற்றொருகாரணத்தாலும் நிறுவல் கூடும். இற்றைக்கு 2300-ஆண்டுகட்குமுன் சந்திரகுப்தசக்கரவர்த்தியால் யவனதேசாதிபதி விடுத்த தூதராய் இத்தேசத்திற்கு வந்துசென்ற மெகாஸ்தனிஸ் என்பார், இலங்காதிபத்தைப் பற்றிய தங்குறிப்பிலே "இத்தீவம் இந்தியாவினின்று ஒருநதியால் பிரிக்கப்படுகின்றது" என்னும்பொருள்பட எழுதியுள்ளார்.* இஃது அத்தூதர் காலத்தில், பரதகண்டத்தின் தென்னெல்லையாகநின்றது ஒருநதி யென்பதை நன்குகாட்டும். மெகாஸ்தனிஸுக்கு நானூற்றாண்டுக்குப்பின்பு இந்நாடுவந்துசென்ற "பிளினி" முதலிய யவனபண்டிதர் நாளிலே இந்நதி மறைந்தொழிந்ததென்பது அவர்குறிப்புக்களாற் புலனாம். இவ்வாறு 2300-ஆண்டுக்குமுன் பரதகண்டத்தின் தென்னெல்லையாய்விளங்கிப் பின்பு இல்லையானதென்று அந்நியரெழுத்துக்களால் அறியப்பட்ட நதியானது, தமிழ்நூல்களிற் சொல்லப்பட்டபடி, இத்தேயத்தின் தென்னெல்லையாய்ப் பின்னர்க் கடல்கொண்டொழிந்த குமரியாறாகவேயிருத்தல் வேண்டுமென்று நாம் கருதவிடமுண்டன்றோ? இங்ஙனம் கருதற்கேற்ப, மெகாஸ்தனிஸுக்குப் பின்னும், பிளினி முதலியோருக்கு முன்னுமான காலத்தே—அஃதாவது இற்றைக்கு 2100-ஆண்டுக்கு முன்னே, திஸ்ஸ அரசன் ஆட்சியில், இலங்கையையடுத்து ஒரு பெருங்கடல்கோள் நிகழ்ந்ததென்று மகாவமிசம் 21-ஆம் அத்தியாயத்துக் கூறப்படுகின்றது. இதனையே குமரியாற்றினழிவுக்குக் காரணமான கடல்கோளென்று மு

* "Megasthenes says that the island (Ceylon) was separated from the mainland (India) by a river"—Dutt's Civilisation in Ancient India. Part 1, page 219.

ற்கூறிவந்த காரணத்தாற் றுணியலாம். இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் நின்ற குமரியாறுனது, இப்போதுள்ள பாம்பனாறு போன்ற ஒருபெருங் கடற்கழியாதல் வேண்டும். இவற்றால், கனகசபையவர்கள் குமரியாற்றினழிவு நிகழ்ந்தது இற்றைக்கு 2100-ஆண்டுக்கு முன்பென்று கூறியது பொருந்தியதாதல் காண்க. குமரியாற்றினழிவுபற்றிய தமிழ்வழக்குத்தெரியாது, ஆங்கில பண்டிதர் சிலர், மெகாஸ்தனிஸ் எழுத்திற்கு வேறுபொருள்கொண்டனர்.

யவனர்:—முன்னாளில் கிரேக்க தேசத்தார்க்கும் தமிழர்க்குமிருந்த தொடர்பை முன்னூல் பலவற்றையும் ஆராய்ந்து பிள்ளையவர்கள் எழுதியிருப்பன அடியில்வருமாறு:—"தமிழகத்திற் றங்கிய மேற்றிசை வியாபாரிகள் யவனர் எனப்படுவர். யவனர் என்னும் பதம் கிரேக்கரைக்குறித்தற்கு அவர்மொழியில்வழங்கும் "ஐயோனிஸ்" என்பதன் சிதைவு. வடநூல்களில் கிரேக்கரைக் குறிக்க யவன பதம் வழங்குகின்றது. அவ்வாறே பழைய தமிழ் நூல்களிலும், கிரேக்கரையும் உரோமரையுங்குறிக்க யவனர் என்றசொல் வழங்கப்படுகின்றது. பாண்டியன் நன்மாறனை நக்கீரர் பின்வருமாறு விளிக்கின்றார்.

"யவனர், நன்கலந் தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனைகலத் தேந்தி நாளும்
ஒண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்
தாங்கினி தொழுகுமதி யோங்குவாண் மாற!"

(புறம்-டிஙு)

இப்புலவராற் குறிக்கப்பட்ட யவனர் எகிப்து தேயத்தினின்று வந்த கிரேக்கரேயாவர். ஏனெனில், பேரிப்ளஸ் கூறியவாறு, இவ்வெகிப்துவர்த்தகரே, முசிரி வேய்கரை முதலிய துறைமுகங்களில், சாராயம், பித்தளை, ஈயம், கண்ணடி—இவைகளை விற்று மிளகு, வெற்றிலை, தந்தம், முத்து, துமடி முதலிய பொருள்களை வாங்கிச் சென்றவர். இவர்கள் ஜூலைமாசம் புறப்பட்டு 40-ஆம் நாளில் முசிரி வந்து சேருவதும், மலைநாடுகளில் மூன்று மாதந்தங்கி டிஸம்பர் ஜனவரி மாதங்களில் தங்கள் தேசநோக்கிச்செல்வதும் பெருவழக்கமாயிருந்தன. இவ்வாறு மலைநாட்டில் அலைந்து திரியுங்கால், இக்கிரே

க்கர் தம் நாகரிகங்களைத் தமிழர்க்குப் புகட்டியிருக்கலாம். இந்து மகா சமுத்திரத்திலே கப்பற்கொள்ளைக்கூட்டத்தார் மிகுதியாதலால், கிரேக்கர் தங்கப்பலுடன் விற்படையும் உடன்கொணருவர். அந்நாளில் எகிப்துதேசம் உரோமரின் ஆட்சிக்குட்பட்டிருந்தமையால், அவ்விற்படைவீரர் உரோமராயிருத்தல் வேண்டும். அவ்வீரருடைய சிறந்தபடைகளும் ஒழுக்கமுறைகளும், அவருடன் நன்றுறவாடி அவர்நாகரிகத்தை அடையவேண்டுமென்ற அவாவைத் தமிழர்க்கு உண்டாக்காமலிரா. பாண்டியர்தாம் உரோமரின் கூட்டுறவுப் பயனை முதன்முதல் உணர்ந்தவர். இப்பாண்டியரில் ஒருவன் உரோமவேந்தனது நட்புவேண்டி, அகஸ்டஸ் சீஸரு (Augustus Caesar) க்கு இருமுறை தூதனுப்பினான். இவற்றில் ஒருதௌத்தியம் அவ்வகஸ்டஸ் "டெரகோனு" என்னுமிடத்தில் இருக்கும்போது, சீஸரிறந்த 18-ஆம் வருஷம் (கி. மு. 26) நிகழ்ந்தது. மற்றது, அந்நிகழ்ச்சிக்கு ஆறுவருஷத்திற்குப் பின்பு அவ்வரசன் "சாமாஸ்" என்னுமிடத்திலிருந்தபோது நடந்தது. உரோமவீரர் பாண்டியரிடத்தும் மற்றத் தமிழரசரிடத்தும் அமர்ந்திருந்தனர்; பாண்டியன் ஆரியப்படை தந்த நெடுஞ்செழியன்காலத்தே மதுரைக்கோட்டைவாயிலைக் காத்தற்கு இவ்வீரர் நியமிக்கப்பட்டிருந்தனர் (சிலப்-காதை-கச, அடி-சுசு சுஎ). இக்காலத்திருந்த நப்பூதனார் என்னும் புலவர், பாசறையிற் கூடாரத்திலிருந்த தமிழ் வேந்தனொருவனை அடியில் வருமாறு வருணிக்கிறார்.

"மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை
மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்
புலித்தொடர் விட்ட புனைமா ணல்லிற்
றிருமணி விளக்கங் காட்டித் திண்ஞா
ணெழினி வாங்கிய வீரறைப் பள்ளியு
ளுடம்பி னுரைக்கு முரையா நாவிற்
படம்புகு மிலேச்ச ருழைய ராக" (முல்லைப்பாட்டு, ருகூ-சுசு)

இதனால், யவனரும் மிலேச்சரும் தமிழரசருக்கு மெய்காப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தமை வெளியாம். யவனருடைய கலங்களும், ஓதிமவிளக்குகளும் (பெரும்பாண்-ஙகசு, ஙகஎ), பாவை விளக்குகளும்

(நெடுநல்-௪௦௧), தமிழகத்தில் மிகுதியாக வுபயோகிக்கப்பட்டனவாகத் தெரிகின்றது. கீழ்த்திசையிற் பெரிய துறைமுகமாகிய காவிரிப் பூம்பட்டினத்தே யவனவியாபாரிகளுடைய குடியிருப்பொன்று உண்டு (சிலப், காதை-௫, அடி-௧-௪௦). உரோமருடைய வர்த்தகம் தமிழகத்தினும் இந்தியாவின் ஏனைப்பாகங்களினும் அதிகமாகவே நிகழ்ந்தது. பிளினி சொல்லுமாறு, இந்தியா ஆண்டுதோறும் உரோம ராஜ்யத்தினின்று 986,979-பௌன்கவர்தற்குரிய பண்டங்களை "ஏற்றுமதி" செய்துவர, அப்பண்டங்கள் அவ்விந்திய நாடுகளில் 100 மடங்கு அதிக விலைக்கு விற்கப்பட்டன. முன்னைவில் உரோமருடைய தங்கநாணயங்கள் அதிகமாக இங்கு வழங்கலாயின என்பதற்கு அறிகுறியாக, அகஸ்டஸ் காலமுதல் ஸீனோகாலம் வரை (கி. மு. 27 —கி. பி. 491) யுள்ள உரோம நாணயங்கள் தமிழகத்தின் பலபகுதிகளிலும் வெட்டியெடுக்கப்படுகின்றன. கி. பி. 226-ல் எழுதப்பட்ட "பியூடிஞ்சர்" படத்தின்படி, உரோமர், பிற்காலத்தும் தம் வியாபாரத்தைக் காத்தற்கு 840—1200-வரைகொண்ட விற்படை வீரரை முசிறியில் வைத்திருந்தனர். இதே யிடத்தில் அகஸ்டஸுக்கு ஒரு கோயிலும் எடுப்பித்தனர் (Malabar Manual, vol I, p. 199)" என்பது. இவை பலரும் அறிந்து மகிழத்தக்க விஷயங்களாம்.

திரையர்:—சங்க நூல்களிலே, சோழரில் ஒருபிரிவினராய்த் தொண்டைநாடாண்டவரென்று சொல்லப்படும் திரையரைப்பற்றிப் பிள்ளையவர்கள் எழுதியவை அறிந்து மகிழத்தக்கன. இவ்வரசர் கடலினின்று வந்து இந்நாடாண்டமைபற்றித் "திரையர்" எனப் பெயர்பெற்றார். சங்ககாலத்தே காஞ்சியிலிருந்து ஆட்சிபுரிந்த தொண்டைமானிளந்திரையனைப்பற்றிய பெரும்பாணாற்றுப் படையில், "திரைதரு மரபி னுரவோ னும்பல்" எனவருதலாலும்,

> "சங்குலு நண்பகலுந் துஞ்சா வியல்பிற்றாய்
> மங்குல்சூழ் மாக்கட லார்ப்பதூஉம்—வெம்சினவேற்
> கான்பயந்த கண்ணிக் கடுமான் றிரையனை
> யான்பயந்தே னென்னுஞ் செருக்கு.

என்னும் இனிய வெண்பாவாலும் இதனை அறிக. இத்திரையர் சோழர்க்கு, நாக கன்னிகை யொருத்தியிடந் தோன்றியவரெ

ன்பது, மேற்கூறியவடிக்கு நச்சினார்க்கினியரெழுதிய விசேடவுரையாலும், "தொண்டைமான்கள் சரிதை" என்னும் நூலாலும் விளங்குகின்றது. இக்கதையும் பிறவும், திரையரென்பார் அந்நியநாட்டினின்றுவந்து தமிழ்ச்சம்பந்தம் பெற்றவரென்பதை நன்குவிளக்கும். இவர்கள் தமிழ் நாட்டுக்குரியவரல்லரென்பதைப் பிள்ளையவர்கள் தொண்டைமண்டலப்பட்டயத்திலே இவர்களைப்பற்றிக் கூறியவற்றைத் தக்க சான்றாகக் காட்டியிருக்கிறார்கள். அப்பட்டயத்தில், பங்காளத்திரையர், சீனத்திரையர், கடாரத்திரையர், சிங்களத்திரையர், பல்லவத்திரையர் எனத் திரையரிற் பலவகுப்பினரிருந்ததாகக் கூறப்படுகின்றது. இவற்றுள் கடாரமென்பது இப்போது "பர்மா" என்றழைக்கப்பெறும் தேசமாகும். (இவ்வுண்மையைப் பலதக்ககாரணங்களுடன் வெளியிட்டவரும் கனகசபையவர்களே) இத்திரையர் பகுப்புக்களால் அவர் பிறநாடுகளினின்று கடல்வழியாகத் தென்னாடடைந்து ஆட்சிபுரிந்தவரென்பது கரதலாமலகமாகும்.

தமிழர்:—இவர் வடக்கினின்றே தென்னாடுவந்தவராதல்வேண்டுமென்பது பிள்ளையவர்கள் கொள்கை. இக்கொள்கைக்குப் பல சிறந்த காரணங்காட்டி அவர்கள் "செந்தமிழில்" எழுதிப்போந்த 'தமிழ்ப்பெருமை" என்னும் வியாசத்தே விளக்கியிருத்தலால், அவற்றை இங்கே கூறுதல் மிகையாம்.

இன்னும் தமிழரது பண்டை வழக்கவொழுக்கங்களைப்பற்றிப் பிள்ளையவர்களெழுதியுள்ள பாகம் பெரிதும் மதிக்கத்தக்கது. சங்க நூல்களையும் பிறவற்றையும் கடைந்துதுருவி அவர்கள் அவ்விஷயம் எழுதியுள்ளார்களென்பதை, அதைப்படிக்குமவர் நன்கறிவர்.

இவ்வாறே, கனகசபையவர்களது ஆராய்ச்சிகளிற் காணும் சரித்திரநுட்பங்களையெல்லாம் எடுத்துரைப்பின் விரியுமென்று நிறுத்துகிறேன். பிள்ளையவர்களது சரித்திரவாராய்ச்சிமுடிபுகளிற் சிற்சில, பிற்கிடைத்தவேறுகருவிகள் சிலவற்றால் மாறுபடக்கூடியனவாயிருப்பினும், அக்கருவிகளில்லாத காலத்தே ஆராய்ந்த அவர்கள் பெருமையை, அம்மாறுபாடு ஊறுபடுத்தவல்லனவல்ல. 'குணநாடிக் குற்றமுநாடி யவற்றுள் மிகைநாடி மிக்ககொள்' ளுதல் நல்லறிஞர் மரபன்றோ!

'தபாலிலாகா'வில் உயர்ந்த நிலைமை வகித்த பிள்ளையவர்கள் தம் வேலை மிகுதிக்கிடையே, அறிஞர் வியக்கும்வண்ணம் இவ்வாறு தமிழாராய்ச்சியையும் விடாது புரிந்துவந்தமை வியக்கத்தக்கதாம். இத்தகைய பேரறிவாளர் தமிழகம்வருந்தத் திடீரெனச் சின்னாண் முன்னர்க் காலஞ்சென்றது தமிழ்மக்கட்குப் பெருந்துக்கம் விளைக்குமென்பதில் ஐயமில்லை.

பத்திராசிரியர்.

---

உ

திருச்சிற்றம்பலம்.

# கருவூர்த்தேவர்.

திருவிசைப்பா அருளிச்செய்த நாயன்மா ரொன்பதின் மருளொருவர் ஆகிய இவர் சோழநாட்டிலுள்ள திவ்யக்ஷேத்திரமாகிய கருவூரிலே உத்தமமான பிராமணர்குலத்திலே திருவவதாரஞ் செய்து, சைவசமயமே சற்சமயமென்றறிந்து அதன்வழியொழுகுவோராய் வேதசிவாகமமென்னும் முதனூல்களை ஐயந்திரிபறியாமையறக்கற்று வல்லுநராய் வைதிகசைவந்தழைத்தோங்கச் சிவஸ்தலந்தோறுஞ்சென்று சிவபிரானைத் தரிசித்துத் திருவிசைப்பாப்பதிகம் பாடிவருவராயினர். அப்பதிகங்கள் பத்துப்பாடலாலும் பதினொருபாடலாலும் பன்னிருபாடலாலும்விளங்குவன. அவற்றுள், கோயில் திருக்களந்தையாதித்தேச்சுரம் திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம் திருமுகத்தலை திரைலோக்கியசுந்தரம் கங்கைகொண்டசோழேச்சுரம் திருப்பூவணம் திருச்சாட்டியக்குடி தஞ்சையிராசராசேச்சுரம் திருவிடைமருதூர் ஆகிய இப்பத்துத்தலங்களைக் குறித்தபத்துப்பதிகங்களே இக்காலத்து அச்சுப்பிரதிகளிலும் ஏட்டுப்பிரதிகளிலுங் காணப்படுகின்றன. ஏனையபதிகங்களெல்லா மெவ்வெக்காலத்தெங்கெங்குமறைந்தனவோ தெரியேம். இவர் சிவயோகங்கைவந்தவொருபெரியசித்தரென்பது பின்வருஞ் சரிதங்களாற் புலப்படுகின்றது.

*

இவரது சித்தின்றிறத்தை யுணராதபிராமணர் சிலர் திரண்டு நெருங்கிவந்து கள்ளுமாமிசமும் புசிக்கும் வாமமார்க்கத்தின ரென்று இவரை யிகழ்ந்தார்கள். அவர்களைத்தெருட்டுதற்காக அவர் காண மழைவருஷிக்கச்செய்தல் ஆறுபெருகிவரச்செய்தல் பூதங்கள் குடைபிடித்துவரச்செய்தல் முதலிய பலவற்புதங்களைச்செய்து மலைகளிலுங் காடுகளிலும் வசித்து வந்தனராய், சிவதரிசனஞ் செய்யக்கருதிப் பற்பலநாடுகளெங்குஞ் சஞ்சரித்துப் பாண்டிநாட்டையடைந்து மதுரைமுதலிய தலங்களை வணங்கித் திருவிசைப்பாப்பாடியருளித் தாம்பிரபருணிநதிதீரத்திலே குருகூரென்னும் வைணவாலயத்தையடைந்தனர். அதன் முன்னரே விஷ்ணுபிரானனவர் தமதடியார் சொப்பனத்திற்றோன்றிக் கருவூர்ச்சித்தரிங்குவருகின்றார் அவர்க்கெதிர்சென்று உபசரியுங்களென்று கூறியருள, அவ்வாறே யடியார்கள் சென்று சித்தராலாசிர்வதிக்கப்பெற்றுத் திரும்புதலும், சித்தர் இவ்வூரிலுள்ள நாயுஞ்சுவர்க்கமடையக்கடவதென்றாசிர்வதித்துப் பின்னர்த் திருச்செந்தூர் கன்னியாகுமரிசென்று மீண்டு திருநெல்வேலி க்ஷேத்திரத்தை யடைந்து நெல்லையப்பரை வெளியே யழைத்தனர். அவர் சித்தரது பெருமையையாவர்க்குந்தெளிவிக்குமாறு வாராது காலந்தாழ்த்தனர்.

சித்தர், ஈசனிங்கில்லையோ நல்லோர் குறைந்து நகரம் எருக்குமுளைக்கக்கடவதென்று சபித்து அத்தலத்தின் மேற்றிசையிலே யிரண்டுகூப்பிடுதூரஞ் சென்று ஒரு சிவலிங்கந்தாபித்துப் பூசித்துச் சிவலிங்கங் குழையுமாறு தழுவி மனமகிழ்ச்சியுற்றிருந்தனர். அதன் பின்னர் நெல்லையப்பர் அடியார்களைக் கருவூர்ச்சித்தரிடத்துத் திரண்டுவரும்படி செய்து இடபாரூடராயெழுந்து சித்தருக்குத் தரிசனங்கொடுத்தருளினர். இத்தரிசனம் வருடந்தோறும் நெல்லையப்பர் மகோற்சவகாலத்தி லொருதினமாங்குச்சென்று அடியார்களுக்குக் கட்டளையிட்டருளிவருவதை இக்காலத்துங்காணலாம். சித்தராற்றாபித்துப் பூசிக்கப்பட்ட சிவலிங்கப்பெருமானுக்கு நாடோறும் பூசை சிறப்பாக இன்றும் நடந்து வருகின்றது. சித்தருந் திருவிசைப்பாப்பாடித் தரிசித்துச் சிவனடியார் வேண்டுகோளுக்காக முன்னரிட்ட சாபத்தைமாற்றிவிட்டுச் சின்னாளங்கிருந்து திருப்புடைமரு

துறையடைந்து சிவபிரானை யெழுந்தருளித் தமதிருப்பிடத்துக்கு வரவழைத்துத் திருவிசைப்பாப்பாடிப்பணிந்து மீண்டு கஜேந்திர மோக்ஷமென்னும் க்ஷேத்திரத்திற்குப் போயப்பாற் பொதியமலைக் கட்சென்று அகத்தியமாமுனிவரைத் தரிசித்து அம்முனிவருடன் வசித்திருந்தனர்.

இங்ஙனமிருக்குநாளிலே சோழநாட்டிலே தஞ்சாவூரிலொரு பெரியசிவாலயஞ் சோழராசனாற் செய்விக்கப்பட்டு அதிலே சிவலிங்கப்பிரதிட்டைசெய்யப் பலவாறு முயன்றும் மருந்திளகிப் பந்தனமாகாதிருத்தல் கண்டு அவ்வரசன் வருத்தமுற்றனன். அப்போது கருவூர்ச்சித்தர் வந்தாலன்றிப் பந்தனமாகாதென்று ஆகாசத்திலொரு அசரீரிவாக்குப் புறப்பட்டது. அது கேட்டு அங்கிருந்தபெரியோர்களிலுருவமாறி வந்திருந்த யோகநாதரென்பவரொருவர் ஒரு பாசுரமெழுதிக் காக்கையின்காலிலே கட்டியனுப்பச் சித்தர்கண்டு பொதியமலையைவிட்டுத் தஞ்சை நகரத்துக்கு வந்து கோயிலுட்புகுந்து சிவலிங்கப்பெருமானையும் ஆவுடையாரையுமொன்று சேர்த்துத்தமது காயசித்தியினாலே மருந்திளகப்பந்தனஞ்செய்வித்தருளினர். உடனே தேவர்கள் புட்பவருஷம் பொழிந்தனர்; அரசனுமாங்குள்ளாருஞ் சித்தர்செய்கையையுந் திருவருளையும் வியந்து பரவசராயினர். அதன்மேற்சித்தர் திருவானைக்காவிற் சென்று வணங்கித் திருவரங்கத்தையடைந்தனர். அங்கே சித்தரது பெருவனப்பை நோக்கிய ஒரு பொதுமாது தன்னுடைய அபிப்பிராயத்தைச் சித்தருக்குத் தெரிவித்தனள். அவர் அவள் கருத்தை நிறைவேற்றும் பொருட்டு அவள் இருகத்தி லிரண்டுநாளிருந்து "எந்தொழிலைச் செய்தாலு மேதவத்தைப் பட்டாலு முத்தர் மனமிருக்கு மோனத்தே" என்றபடி காமவின்பத்தை நுகராது நுகர்ந்திருந்தனர். இரண்டாநாளிரவிலே சித்தர் ஸ்ரீ அரங்கநாயகரிடஞ் சென்று வணங்கி அவர் மார்பிலணிந்திருந்த விலையுயர்ந்த மாணிக்கமாலையை அவர்தரப்பெற்று வாங்கிவந்து பொதுமாதுக்குக் கொடுத்து நீ நம்மை நினைத்தபோதிங்குவருவோமென்று சொல்லி நிறுத்திவிட்டுத் திருப்பராய்த்துறை முதலிய திவ்யக்ஷேத்திரங்களிற்சென்று திருவிசைப்பாப்பாடிக் கருவூரையடைந்திருந்தனர்.

இவரிங்ஙனமிருக்கத் திருவரங்கத்திருக்கோயிலிலே திருப்பள்ளியுணர்த்தும் அடியார்கள் விடியற்காலத்திற்சென்று திருமால்மார்பகத்திருந்த ரத்நாபரணத்தைக்காணுமல் மதிமயங்கிக் கோயிலதிகாரிகளுக்கறிவித்தலும் அவர்களொருங்குகுழீஇயிருந்து திருடினவன்யாரென்று ஆராய்ச்சிசெய்யும்போது இரத்தினமாலையைப்பெற்றுக்தரித்திருக்கின்ற பொதுமாது அவ்வழியே நடந்துபோதரக்கண்டு அவளைப் பிடித்துவரச்சொல்லி விசாரிக்குங்கால், நிகழ்ந்தவற்றை அவள் கோயிலதிகாரிகளுக்குக்கூறி மாலைகொடுத்த பெரியவரின்றுமென்வீட்டுக்கு வருவாரென்று சொல்லினள். அப்படியாகுற் பார்ப்போமென்று அவளைப்போகவிட்டு அன்றிராத்திரி அவள் வீட்டுக்கு வருபவனைப்பிடித்துவரும்படி காவலாளிகளுக்கு உத்தரவு செய்தனர். பொதுமாதாகிய தாசியன்றிரவு சித்தரை நினைத்தனள். அவர் அதுதெரிந்து அவள் வீட்டுக்கு வெளியேவந்து நிற்கையிலே காவலாளிகள் அவரையுந் தாசியையும் பிடித்துக்கொண்டுபோய்க்கோயிலதிகாரிகளுக்குமுன்புவிடுத்தனர். அவ்வதிகாரிகள்சித்தரைநோக்கி இந்த அரதனமாலையை இவளுக்குக்கொடுத்தவர் நீர்தாமோ? என்றுவினவினர். சித்தர் ஆமென்றார். அதிகாரிகள் உமக்கிந்த மாலையைத்தந்தவர் யாவரென்றார்; சித்தர் திருவரங்கேசரென்றார். அதுகேட்டு அதிகாரிகள் சிரித்து இம்மாலையை உமக்குத் திருவரங்கேசரருளிச்செய்ததுமெய்ம்மையாகுல் எங்கள் முன்புக்கு அவரைவரவழைத்துச்சொல்லுவித்தல் வேண்டுமென்றனர்.

சித்தராகியதேவர் அங்ஙனஞ் செய்கின்றேனெனச்சம்மதித்துத் திருவரங்கேசரைச் சபைக்கெழுந்தருளும்படி பிரார்த்தித்தனர். திருவரங்கேசர் சித்தர் பிரார்த்தனைக்கிரங்கி ஆகாயத்திலேதோன்றியெல்லாருங்கேட்க இந்த ரத்நாவளியைக் கருவூர்த்தேவருக்கு நாமேகொடுத்தனமென்றருளிச்செய்து மறைந்தனர். கோயிலதிகாரிகள் முதலிய வெல்லாருமதுகேட்டவுடனானந்தபரவசராய்ச் சித்தரை வணங்கி அபராதத்தைக்க்ஷமித்தருள்க வென்று பலவாறு வேண்டிக்கொள்ளக் கருவூர்ச்சித்தர் அவ்வாறே யநுக்கிரகஞ்செய்து மீண்டு கருவூரையடைந்திருந்து தம்மை யவமதித்த சிற்சில பிராமணர்கள் காணப்பற்பல அற்புதங்களைச்செய்து சிலநாட் சென்றபின் ஆம்பராவதி

நதிக்கரையிற்சென்று திருவாயிலைக் கோயிலையடைந்து பசுபதீச்சுரரைத் திருவிசைப்பாப்பாடிப்பணிந்து அவரது திருவடியி லிரண்டறக்கலந்திருந்தனர்.

இச்சரித்திரத்தின் விரிவை, இற்றைக்கு இருநூற்றுத்தொண்ணூறுவருஷங்கட்கு முற்பட்டதென்று பாயிரத்தாலறியப்பட்ட கருவூர்ப்புராணத்தினும், பிறவற்றினும் கண்டுகொள்க.

இங்ஙனம்,
சேற்றூர்ச்சம்ஸ்தானவித்துவான்,
மு. ரா. அருணாசலக்கவிராயர்.

---

௨

# கொழுவுந் துன்னூசியும்.

"கொழுச்சென்றவழித் துன்னூசி யினிதுசெல்லுமாறுபோலப் பருப்பொருட்டாகிய பாயிரங்கேட்டார்க்கு நுண்பொருட்டாகிய நூலினிதுவிளங்கும்" என்பதற்கு, ஸ்ரீமத்-சண்முகம்பிள்ளை யவர்கள் கொண்ட பொருளை ஸ்ரீமத்-கோவிந்தசாமிச் சோழகர் சென்ற ஜனவரி மாசத்துத் தமிழகத்திலே மறுத்துத் தாமொருபொருணிறுத்துவாராயினர்.

பிள்ளையவர்கள், கொழுவென்பது ஊசியின்றலைக்குமேலுள்ள கோற்பாகமென்றார், ஊசியென்பது ஊசிக்காதென்றும் பொருள் கொண்டாரென்பது சோழகர் அநுவாதத்தால் விளங்குகின்றது.

சோழகர், கொழுவென்பது கலப்பைக்கொழு (உழவுத்தொழிற் கருவி) என்றும், துன்னூசி என்பது தையலூசி என்றும் பொருள்கொண்டனர். இருவருங்கொண்ட பொருள் பொருளல்லவென்பது மேற்காட்டுதும். பாயிரம் நூற்குப் புறத்தேயுள்ளதாயினும், நூலையோதுமுறையும் நூனுதல்பொருளும் உரைப்பதாதலின் அதனுணர்ச்சி நூலுணர்ச்சிக்கு உபகாரமாகுமென்பது நோக்கியே அது கேட்டல்வேண்டுமென்பதாயிற்று. அதுபற்றியே பாயிரம் பருப்

பொருட்டென்றும், நூல் நுண்பொருட்டென்றுங் கூறப்பட்டனவாம். பாயிரங்கேளாது நூல் கேட்கப்புகும் விவேகமானது எளிதிலே நூலைத் துருவிச்செல்லமாட்டாது வருத்தமுறும்; பாயிரங்கேட்டு நூலைக்கேட்கப்புகுமிடத்து அதனை வருத்தமின்றி இனிது துருவியுணரும். இக்கருத்துக்கொண்டே நச்சினார்க்கினியர், "நூல்கேட்கின்றான் புறவுரை கேட்கிற் கொழூச்சென்றவழித் துன்னூசியினிது செல்லுமாறுபோல வந்நூலினிது விளங்குதலிற் புறவுரைகேட்டல் வேண்டும்" எனக்கூறினார்.

இங்கே கொழூவென்றது பாயிரத்தையுந், துன்னூசி யென்றது நூல்கேட்கின்றானையுங் குறித்துநிற்கு முவமங்களாம். கொழூவென்பது கொழுப்பு. துன்னூசி யென்பது தோற்றுன்னூசி. தோற்றுன்னர் தைக்கும்போது கொழூப்புத்தொட்டே தைப்பர். கொழூப்பில்வழி அவ்வூசி இனிது செல்லாதிடர்ப்படுதல் யாண்டும் பிரத்தியக்ஷமாம்.

கொழூவென்பது கொழுப்பென்னும் பொருளில், "குடருங் கொழூவுங்குருதியுமென்பும்" என்னு நாலடிச்செய்யுட்கண் வருதல் காண்க. ஆதலின், துன்னூசியானது கொழூப்பிற் றோய்ந்தவிடத்து இனிதுசென்று தைப்பதுபோல நூல்கேட்கின்றானும் பாயிரத்திற் றோய்ந்து பின்னர் நூல்கேட்குமிடத்து இனிதுணருமென்றவாறு.

இவ்வாறு கொள்ளாது கொழூவென்பதைக் கலப்பைக்கொழூ (காறு) எனக்கொள்ளின், கலப்பைக்கொழூ நிலத்தையுழுதற்கருவியன்றி ஊசிபோல ஒன்றைத் துளைத்துருவுங் கருவியன்று. அதுவுமன்றிக் கலப்பைக்கொழூப் போழ்ந்த வழியில் ஊசிசெல்லுதலும் மரபன்று. ஆதலின் அஃதசம்பாவிதமாமென்க.

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

திருச்சிற்றம்பலம்.

# பெரியபுராண அரும்பதவிளக்கம்.

(கூகூ-ம் பக்கத் தொடர்ச்சி.)

## முதற்காண்டம் திருமலைச்சருக்கம். திருமலைச்சிறப்பு.

(சு) ஆராயப்படுகின்ற ஐம்பெரும்பூதங்களையும் நாட்டுவனவாகிய.

(எ) சிவபெருமானுடைய பாதங்களைச் சேவைசெய்ய இயைந்தகாலமல்லாமையால் மீண்டுவந்த பிரமன் சுத்தமாகிய கைலையங்கிரியின் வெள்ளொளியில் அமிழ்ந்தி அவ்வொளியோடொன்றாய அன்னத்தையுங்காணுமற் சந்தேக முறுவன்.

(அ) கலுழனானவன், திருச்செவியில் வெள்ளியசங்கக்குண்டலத்தை யணிந்த சிவபெருமானுடைய பாதங்களை வணங்க விட்டு காலம்பார்த்திருக்கின்றமையையுமறியாதவனாய், வெள்ளொளி பொருந்திய கைலையங்கிரியின் தாழ்ந்த அடிச்சாரலிலுள்ள முழைஞ்சில் விநாயகக்கடவுளுடைய வாகனமாகிய ஆகுவைக்கண்டு மேலே யெழுந்த பழைய செஞ்சோதியானது இன்றைக்கு வெண்சோதியாயதென்றும் அம்மலையின் கீழ் நமது தலைவன் பன்றியாய்க்கிடக்கின்றானென்றுங் கருதி அவ்வாகுவைச் சமீபிக்கும். ஆகு பன்றியைப் போறலின் அணைதரும் என்றார்.

(கூ) அந்த அழகிய மலையின்புறம், அரம்பையர்களுடைய நாடகமுழவோடு பக்கத்துஅருவிகள் எதிரே முழங்க வரத்தைப் பெறவேண்டுமென்னும் விருப்பத்தையுடைய மனத்தோடு தேன் பொருந்திய ஐந்தருமலர்களை இருகைகளினுந்தாங்கி நாடோறும் நெருங்கிய மாளிகையின்மேலுள்ள கற்படியின் நெடிய உயர்ந்த வழியால் ஏறி இந்திரன்முதலிய தேவர்துதிக்கப் பொலிவது.

(கo) பூதங்கள் வேதாளங்களாகிய பெரியகணங்களுக்குத் தலைவர்கள் தோத்திரஞ்செய்யக் கனகசபையினின்று திருநடஞ்செ

ய்தருளுகின்ற தலைவரும் ஆதிகடவுளுமாகிய சிவபெருமானுடைய கோயிலைக்காத்தற்கதிபராகிய திருநந்திதேவர், வேதங்களை யறிந்த பிரமவிட்டுணு இந்திரன் முதலியதேவர்கள், ஒழிந்த அளவிறந்தோர் விருப்பத்தோடுநெருங்கிய பெருமை பொருந்திய முதற்றடையாகிய ஒளியையுடைய இரத்தினங்களழுத்திய கோபுரத்துள்ளார்.

(கக) அந்தப்பெரிய கைலாசகிரியானது, நெற்றிநாட்டத்தை யுடையவரும், பெரிய நான்குபுயங்களையுடையவரும், விபூதியையணிந்த திருமேனியை யுடையவருமாகிய சிவசாரூபத்தைப் பெற்றவர் அநேகரும், இடபாரூடராகிய சிவனடியாரும், சிவனுடைய அருளைப் பெறுபவருமாகிய அன்பர்களுக்கெல்லா முதன்மையாகிய திருத்தொண்டையும் தாமரைமலர்போன்ற திருக்கரத்தில் உடைவாளையும் பிரம்பையும் கூட்டமாகிய நெடிய சடையையுமுடைய சிவபெருமானது திருவருளாற் பெற்ற திருநந்திதேவராற் காக்கப்படுவது.

(கஉ) சோழன்மேற் சேல்லுங்கால் சத்தியத்தின் பிரடை யெனக்கொள்க.

(கச) துவாரகாபதியாகிய யதுகுலத்திற் பிறந்த கிருஷ்ணனுடைய முடிமேல் திருவடிவைத்தவன், பூதநாதராகிய சிவபெருமானுடைய திருத்தொண்டினுக்கு முதன்மையை அழியாமற் பொருந்தினவன்.

(கஎ) தென்றிசையில்வந்த நாவலர்கோனாகிய வன்றொண்டர்.

(கசூ) தமிழ்இயவராகிய நம்பியாரூரர்.

(உ0) ஒளியுடைய பொருள்களையெல்லாம் வென்ற நம்பியாரூரர் இயம்புவாராய் உரைசெய்தருளென்றலும் எனமுடிக்க.

(உரு) அழிவற்ற அழகையுடைய அனிந்திதை, ஆராயப்பட்ட கூந்தலில் மாலையையுடைய கமலினிஎன்பவர்கள் பூங்கொத்துகள் கொண்ட அழகியமலரைக்கொய்யும் பொழுது, மகத்துவம் பொருந்திய தவத்தைச்செய்த தென்றிசைவாழவும், திருத்தொண்டத்தொகைதரவும் போபவராய் சுந்தரமூர்த்தி நாயனார் சிவபெருமானுடைய அருளைப்போல வந்து அவர்கள்மேன் மனம்போக்க, விருப்பத்

தையுடைய அப்பெண்களும் பார்வையால் விரும்பினார்கள். வந்து மனம் போக்கிட என முடிக்க.

(உசு) கூட்டமாகிய முகைகளாக இருந்து அன்றலர்ந்த மலர்களில் — என்னையடிமைகொண்ட சிவபெருமானுக் கினியவனவாகிய பலமலர்களைக்கொய்து.

(உஎ) கலந்து - அனுபவித்து; அணைவாய் - வருவாய்.

(உஅ) கலங்கினான் வினையாலணையும் பெயர்.

(௩0) பாசபந்தத்தையுடைய மானுடப்பகுதி பொருந்தியதென்றிசை.

(௩க) உவமையற்ற வியாக்கிரபாதனும் எனது பிதாவாகிய அரியமுனி நடேசபெருமானை அருச்சிக்கப்பெற்றுள்ளது: பெருமை பொருந்திய பெரும்பற்றப்புலியூரென்று மன ஒருப்பாட்டையுடையோரது இருப்பிடமாகிய ஒரு க்ஷேத்திரம் விளங்கும்.

(௩உ) நாடோறும் பொன்னம்பலத்திலே திருநடனஞ்செய்கின்ற அத்தன்மையைப் பெறுந்திசை எந்தத்திசை.

(௩௩) சகல ஆன்மாக்களினிருதயங்களி லலர்கின்ற பூவில் வெளிப்படல்போல வேதவித்தாகிய சிவபெருமான் வெளிப்படுகின்ற பூமியாகிய விருப்பத்தையுடைய பெண்ணினது இருதயகமலமாகிய பார்வதிபாகருடைய திருவாரூர் மலர்ந்தது. இருதயகமலத்திலே தோன்றுமாறுபோல் வேதவித்து வெளிப்படுகின்ற ஆரூர் என முடிக்க. பூதம் - ஆன்மா.

(௩௫) கங்கை சடையில் மலர, அக்கினிமலர்கின்ற திருக்கரத்தையுடைய சிவபெருமான் வீற்றிருக்கின்ற திருவையாறுவிளங்குவது.

(௩௬) தென்றிசையில், தோணிபுரம் - சீர்காழி, இடம்பலவுள்ளன. ஆதலால், கூறிற் பிறதிசை அத்திசையை ஒவ்வா.

(௩எ) தொகைவிரி - தொகையினது விரியைச் சொன்னபடியே இயம்புவேன்.

(௩அ) பதிகம்—பாயிரம்.

*

(நக) வகை - வகையாப்பினால்.
(சo) நம்பியாரூரர் - சுந்தரமூர்த்திநாயனர்.

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாட்டுச் சிறப்பு.

(க) புகழையுடைய இயற்றமிழ்ப் பாஷை வழங்கும் நிலங்களுள் சிகரங்களுயர்ந்த இமயமலையினுச்சியில் நீட்டிய வளர்கின்ற புலிக்கொடியையுடைய சோழர்களது காவிரிநாட்டினணியை யான்சொல்லத்தொடங்கினேன்.

(உ) பூதம் — சுத்தம். மாதர் - அழகு. ஓதநீர்நித்திலம் - கடல்முத்து.

(ந) ... ... சையகிரியிற் றோன்றுந் தலைமை மிக்கது. செவிலி - வளர்த்த தாதி.

(ச) பெருமைபொருந்திய நீர்ச்சுழியின்மேல் மலர்வருஞ்சார்பினாலும், பல உயிர்களை உண்டாக்குகின்ற மாண்பாலும், அழகிய நல்ல கமண்டலத்தால் தாங்கப்படுந்தகைமையாலும் காவிரி நான்முகனைப்போன்றது. இனி நான்முகன்மேற் செல்லுங்கால், விட்டுணுவினுடைய உந்தியங்கமலத்தின்மீது தோன்றினமையாலும், பல உயிர்களைச் சிருட்டிக்குங் குணத்தாலும், அழகிய நல்ல குண்டிகையைத்தாங்குங் கொள்கையாலுமென்க.

(ரு) காவிரியாகிய அழியாத தீர்த்தம் சந்திரனைச்சூடிய சிகரத்தையுடைய சையகிரியினுச்சியிற்பொலிவாகிய வெள்ளிடத்தில் நுரைபொருதுபோதலாற் சிவபிரானது முடியினின்றிழிகின்ற கங்கைபோன்றது. இனிக் கங்கைக்கியையக் கூறுங்கால், சந்திரனையணிந்த சடாமுடியின் சிகரத்தினுச்சியில் பொலிந்த வெள்ளிய பிரமகபாலத்தை நுரைபொருதுசெல்லுதலாலென்க.

(சு) வாசனை பரந்தமலர்கள் செறிந்தநீரால் வழிபட்டு (ஒழுகி) மாற்றுயர்ந்த பொற்பொடிகள் செறிந்த கரையிலுள்ள அளவிறந்த சிவாலயங்களிலெழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானை வணங்கலாற் காவிரிநதி சிவனடியார்களை நிகர்க்கும்.

(அ) தெண்டிரையாற்றின்மீதிழிந்தது.

(கூ) மா - வண்டு. விரைத்து - விரைந்து. வாவியிற் பொலி - வாவியாற் பொலிகின்ற; வாவிகளாற் பொலிகின்ற நாடு தானேவளந் தருமென்பது கருத்து.

(கU) குரைத்தல் - தட்டுதல்; காரியங்காரணத்தை புணர்த்திற்று.

(கக) மாதர் - அழகு; பெண்களெனப் பொருள்கொள்ளல் இங்கேயியையாது. முடி - நாற்றுமுடி. ஓதை - ஓசை. காட்சி - காட்சியாக.

(கஉ) உழுத சாலில் நீர் மிக ஊறுதலாற் றெளிந்த சேறு வழுங்குகின்ற வயலுள்.

(கங) நெருங்கிய நீர்பரந்த வயலிலுள்ள வளர்கின்ற நெல்லின் சுருள் விரியக்கண்டு மள்ளர்கள் களையகழுதற்கியைந்த காலமிதுவெனக்காட்ட, களைகளைப்பிடுங்குகின்ற மள்ளஸ்திரீகள் குளிர்ந்த முத்துக்களைச் சொரிகின்ற சங்குகள் இடறுதலினால் இடைதளர்ந்தசைவாராய் வண்டுகள் வீழ்கின்ற கூந்தலையை மடநடையால் வரம்படையணைவார்.

(கச) செங்குவளைகளைப் பிடுங்கிச் சூடுவர், கரியகூந்தலின்மேலுள்ள சிறைகளையுடைய வண்டுகளை அழகிய கையாகிய தாமரை மலர்களைக்கொண்டு துரத்திப் பின்பு பக்கத்துள்ள வண்டுகளையும் வர அழைப்பார், சந்திரன்போன்ற நெற்றியானது வெயர்வையரும்பப் புன்முறுவலானது முல்லையரும்பையினைப் பொலிந்த தாமரை மலரிலுள்ள தேனை வாயிற்பெய்து சோகிப்பர்.

(கரு) நெற்பயிரின் வளர்ச்சியைக் கண்டோர் இவைகள் கரும்பல்ல நெற்களே யென்று கூற, கரும்பின் வளர்ச்சியைக் கண்டோர் இவைகள் கமுகல்ல கரும்புகளே யென்றுகூற, வண்டுகள் அகவிதழைக் குடைதலாலுண்டாகிய நீலத்துகள்கள் பகற்காலங்களிலெல்லாம் அல்லின்றன்மையைச் செய்வன. அல் - இரா. அல்ல - அஃறிணைப் பன்மைப்பெயர். பண்படியிற் பிறந்த குறிப்புவினையாகக் கொள்ளினும் பொருந்தும். முலைகளைக்கண்டோர் இவை அரும்பல்

ல முலைகளேயென்று கூற, மொழிகளைக் கேட்டோர் இவை அமுதல்ல மொழிகளே யென்று கூறவரும் பல்லாயிரங்கடைசியர்கள் வயல்களினெல்லாமுளர்: என இச்செய்யுள் இருமுடிபு. இனிக் கரும்பென்னப் (பொருந்தும்) வயலெல்லாம் பகலெல்லாம்வரும் பல்லாயிரங் கடைசி மடந்தையர்களே உளர் என ஒருமுடிபாக வைத்துரைத்தலுமொன்று; எப்படிப்பட்ட பகலெனின் கரும்பு அல்லியைக் குடைதலாலுண்டாகின்ற நிலத்துகளாலாகிய இராக்காலத்தையுடைய பகலென்க.

(கசா) கயன்மற்சங்கள் பாய்கின்ற பசியதடாகத்துள்ள தசை நீங்கிய சீங்காகிய சொன்றிக்குழிசியில் அகன்ற வாயையுடைய வெண்மையாகிய சங்கங்களீன்ற முத்துக்களாகிய அரிசியைப் பூந்தேன் பெய்த உலையிலிட்டுப் பக்கத்துள்ள ஆமைகளாகிய அடுப்பிலேற்றிச் செவ்வாம்பற்பூவாகிய நெருப்பையூதுகின்ற மள்ளஸ்திரீகள் பெற்ற சிறுமியர்களுடைய விளையாட்டே வரம்புகளினெல்லாமுள.

(கஎ) காடுகளினெல்லாம் நாணற்கரும்பு, சோலைகளினெல்லாம் தளிர்கின்ற அரும்புகள், பக்கங்களினெல்லாம் கருங்குவளைகள், வயல்களினெல்லா நெருங்குகின்ற சங்குகள், தடாகங்களினெல்லாம் இளமையையுடைய அன்னப்பேட்கள், குளங்களெல்லாங் கடலைப்போல்வன, ஆகலான், அந்நாடுகளெல்லாம் எல்லா நலங்களாலும் சோழநாட்டை யொவ்வா.

(கஅ) பாய்ப்பவர் என்னும் பிறவினை பாய்பவர் எனத்தன்வினையாய்நின்றது. (கக) பாய்வன - தொழிற்பெயர்.

(உக) நெற்பயிர்கள் நெடியவயல்களினுயர்ந்து தமக்கு நிகரின்றி மேற்பட்டுச் சுத்தமாகிய வெண்மை நிறத்தையுடையகருவினாலாகின்ற வளத்தையுடையனவாய்ச் சூன்முதிர்தலாற் பசப்பு நிறம் பொருந்திச் சருளை விரித்துச் சிவனடியார்களது நெகிழ்ந்த மனத்தைநப்போலக் கதிர்களை யெல்லாம் ஈன்றன.

(உஉ) (நடம் வரி) கூட்டமான நீண்ட வரிசையோடு பால் முதிர்தலால் தலையைவளைத்து. இனிச்சிவனடியாருக் கியையக்கூறுங்கால், கூட்டமான மிக்க அன்பினின்பத்தாலென்க. வித்தகர்தன்மையைபோல-வித்தகர்களிடத்தே சிவஞானம் விளைதல்போல.

(௨௩) விரிந்தபுஷ்பக்கூட்டத்தாலாகிய தேன்சொரிந்து பாய்கின்ற மலையைவைப்பார்கள்.

(௨௪) நெல்லின் கூட்டமாகிய நெருங்கிய விசாலித்த மலையின் முகட்டைச்சாய்த்துக் காலையுடைய பெரிய எருமையும், செலுத்தப்படுகின்ற பெரிய எருதுக்கூட்டமும், இயங்குகின்ற அரியமுகிற் கூட்டங்கள் மலையின் கொடுமுடியையுடைய சாரலில் வலமாகச்சூழுகின்ற தோற்றத்தைப்போலமிக்கன.

(௨௫) வைதெரிந்தகற்றியாற்றி - வைக்கோலைத் தெரிந்தாற்றிக்கட்டியகற்றி. அகற்றியாற்றியென்பதற்கு அகற்றலைச் செய்தென்பாருமுளர். தாமரைகள் பொருந்திய தடாகங்களையுடைய மருதநிலம் கூட்டமாகிய மலைகளையுடைய குறிஞ்சிநிலம் போலும்.

(௨௮) நாளிகேரம் - தென்னை. கோளி - அரசு. சாலம் ஆச்சா. போந்து - பனை.

(௨௯) வகுளம் - மகிழ்.

(௩௦) விபஞ்சி - வீணை. இருக்கு - வேதம்.

(௩௩) வண்டுகள் பூவின் எவ்விடங்களினும் பாடுகின்ற அழகிய இல்லங்களையெங்கும். துணைவர்சூழ்கின்றமாலையே எவ்விடங்களினும்.

(௩௪) வீதிகளிலே விழாவிறைவாரமும், விரும்பினரது விருந்திறைவாரமுமேயாம். தனயரும் அனையிற்றப்பார். புட்களும் விலங்குகளும் நீதியையுடையன. இலக்குமியும் அந்நிலத்திருத்தலை விரும்புவள். வரைப்பின் இங்கு - எல்லையுள் இவ்விடத்து.

திருச்சிற்றம்பலம்.

(இன்னும் வரும்.)

ஜி. சதாசிவம்பிள்ளை,
நாகைநீலலோசனி’ப் பத்திராதிபர்.

# பரிமேலழகர் உரைப்பாயிரம்.

சென்னைக் காட்சிச் சாலையைச் சார்ந்துள்ள இராசாங்கக் கையெழுத்துப் புத்தகசாலைக்கண்ணே, திருக்குறள் பரிமேலழகருரையேட்டுப்பிரதி யொன்றை யான்பார்க்க நேர்ந்தபோது, அவ்வுரையாளரது உரைப்பாயிரமாக ஓர் ஆசிரியப்பாவும், ஒரு கட்டளைக்கலித்துறையுங் காணப்பட்டன. அவை அடியில் வருவன :—

[ஆசிரியப்பா.]*

"திருந்திய தமிழிற் றெய்வப் புலமை
யருந்திறல் வள்ளுவ னாய்ந்துதன் வாக்கா
லறம்பொரு ளின்பம் வீடென நான்கின்
றிறந்தெரிந் துரைத்த செவ்விமுப் பாலுக்
கோருரை யின்றி யொன்பது சென்று
மையுற வாக வையுறு காலை
வள்ளுவன் மீளவும் வந்துதித் துலகோர்க்
குள்ளிய† பொருளை யுரைத்தன னென்ன
வெழுத்து முதல விலக்கண வகையும்
வழுக்கில்வே தாகம வகையதன் பயனுந்
தங்கிய குறட்பாத் தமிழ்மனு நூலிற்
கிதுவே யுரையென் றியாவரும் வியப்பப்
பொழிப்பக லத்தொடு நுட்ப மெச்ச
விழுப்பொருட் டோன்ற விரித்தினி துரைத்தனன்
வடநூற் றுறையுந் தென்றிசைத் தமிழும்
விதிமுறை பயின்ற நெறியறி புலவ
னன்பரு ளொழுக்கப் புரவுகண் ணோட்ட
நன்றறி வாய்மை நற்றவ முடையோ
னித்தகை யன்றி யீசன தருளா
லுய்த்துணர் வுடையவோ ருண்மை யாளன்
பரிமே லழக னெனப்பெயர் படைத்துத்
தரைமே லுதித்த தலைமை யோனே."

---

* இவ்வகவல் இச்சங்கத்துப்பிரதிகளிலுங் காணப்படுகிறது.

† "ஒள்ளிய" எனவும் பிரதிபேதம்.

[கட்டளைக் கலித்துறை.]

“விரைத்தா ரலங்கற் றிருவள் ளுவர்முன்னம் வெண்குறட்பா
நிரைத்தார் மிகுபொரு ளொன்கும் விளங்க நெறிப்புலவ
ருரைத்தார் பலரு மதற்குரை தன்னை யுலகறியக்
கருத்தான் வகுத்தமைத் தான்கலை தேரொக்கை காவலனே.”

இவற்றுள்ளே, முன்னதாகிய அகவலில், பரிமேலழகரது கல்விப்பெருமையும் உரைச்சிறப்புங் கூறப்பட்டிருத்தலோடு, “இத்தகை யன்றி விசேட தருளார், லுய்த்துணர் வுடையவோ ருண்மை யாளன்” என அவ்வாசிரியரது நுணுக்கவறிவும் வியக்கப்படுகின்றமை காண்க. அடுத்துள்ள கலித்துறையில், ‘திருக்குறளுக்குப் புலவர்பலரும் உரைசெய்தபின், அவையெல்லாவற்றினும் சிறந்ததோருரை ஒக்கைகாவலனாற் செய்யப்பட்டது’ என்று, உரையாளர் பெயர்குறியாது ஊரைக்குறித்துள்ளது. பரிமேலழகருரைப் பிரதியிலே, அவர் பாயிரமாகிய மேற்கண்ட அகவலையடுத்து இது நிற்றலாலும், பலருடைய உரைக்கும் பின்பெழுந்தது என்று இதிற் கூறப்படுதலாலும், இக்கட்டளைக்கலித்துறை பரிமேலழகரைப் பற்றியதென்றே துணியப்படும். இதனால், பரிமேலழகரூர் “ஒக்கை” என்பது வெளியாம். ஒக்கை, ஒக்கூர் என்பதன் மரூஉப்போலும். இப்பெயர்பெற்ற ஊர்கள், மதுரை ‘ஜில்லா’ விலும், தஞ்சை ‘ஜில்லா’ விலும் உண்டு. பரிமேலழகரை “ஒக்கைகாவலன்” என்றது, அடியார்க்குநல்லாரை “நிரம்பையர்காவலன்” எனவும், புத்தமித்திரனை “பொன்பற்றிகாவலன்” எனவும் கூறியதுபோல, அரசியலாலன்றிச் சிறப்பியல்பற்றிக் கூறியதாகக்கொள்க.

இனி, இச்சங்கத்துள்ள தூன்படச்கிகோட்டைத் திருக்குறளுரைப் பிரதியிலே,

“முன்னுரைத்த தேவர்குறள்......................
நின்னதிது வென்றுரைக்க வெய்தினேன்—முன்னூற்
புரிமே ழைகியகோப் போற்றுதமிழ்க் கூடற்
பரிமே லழகியனென் பான்.

என ஒரு வெண்பாக் காணப்படுகின்றது. இதனுள், பரிமேலழகர் மதுரைக்குரியவராகக் கூறப்படுகின்றார். முன்கூறிய “ஒக்கை” பா

ண்டிநாட்டுள்ள ஒக்கூராயின், அது பரிமேலழகரது உரிமையூரெனவும், மதுரை அவர் வாழ்ந்த நகரெனவும் கருதவிடமுண்டு. ஆனல் காஞ்சியிலும் இவர் வசித்தவரென்பது தொண்டைமண்டலசதகத்தாற் றெரிகின்றது. எனவே, பரிமேலழகருர் இதுதான் என்று கூறல் அரிதாயினும், ஒக்கை, மதுரை, காஞ்சி—இம்மூன்றிடங்களிலும் அவர் வசித்தவரென்பதை மேற்காட்டிய பாயிரச்செய்யுட்களும் பிறவுங் காட்டத்தக்கன.

பத்திராசிரியர்.

---

# பாலமுது

(கஙக-ம் பக்கத் தொடர்ச்சி.)

மேற்கண்ட விவரங்களைத் தேர்ந்து பரிசோதித்துப் பச்சைப் பாலினின்றும் இருவகை இரசங்களைப் பிரிக்கின்றனர். வெண்ணெயைக் கடையும்போது மத்தை அதாவது கடைகோலைச் சுழற்றுவதற்குக் காரணமென்னவெனில், பாலின்கணுள்ள ஊனத்தைக் கலக்குவதற்கும், அவ்வூனமிலேசானதால் கடையும்பொருளை யணுகி மேலே மிதக்கவிடவுந்தான். அவ்வாறே ஓர் வகை யந்திரத்தில் அமைக்கப்பட்டுள்ள கனமடைந்ததோர் நீண்ட சக்கரத்தை வெகு விரைவுடன் சுழற்றுவதால் பாலின் வெண்ணெயானது மேலெழும்பி ஓர் குழாய்மூலமாக வெகுவளவுகனத்துப் பாயுமியல்புடையது. இதை இங்கிலீஷில் க்ரீம் (Cream) என்பர்; ஆதலாற்ருன் இவ் யந்திரத்திற்கு இவ்விரசத்தைப் பேதித்து நீக்குவதென்று பொருள்படும் (Cream separator) என்று சொல்லுவர். இவ்வகை க்ரீமில் ஊனமதிகப்பட்டுத் தர்க்கியசம், நீர் முதலியவை குறைந்துள்ளன. இதினின்றும் பச்சை வெண்ணெயைக் கடைவார்கள். இவ்வெண்ணெயைக் கடையவும், கடைந்த வெண்ணெயினின்றும் நீரை வெளிப்படுத்தவும் தகுந்த உபகரணங்களமைத்திருக்கின்றனர். மேற்சொல்லிய யந்திரத்தின் மற்றோர் குழாயின் மூலமாக வெண்ணெய் வெகு மட்டுப்பட்டுத் தர்க்கியசமும் (அதாவது தயிராம் பொருள்) நீரும் வெகுவளவில் கலந்துள்ள மற்றோர் இரசம் வெளிவரும். அதனுள்

தர்க்கியசம் (casein) வெகுவாயுள்ளது. இவ்விரசத்தை விலக்கிய பாலென்று பொருள்படுமாறு (Skimmed milk) என்பர். இவ்விரண்டினுள் க்ரீம் என்பதை உத்தமமாகக் கண்டு வெண்ணெயெடுப்பதற்குபயோகிப்பர்; மற்றதைச் சிறந்த பாலாகக் கொள்ளமாட்டார்கள். ஆதலின் அதன்விலை குறைந்துள்ளது.

க்ரீம் என்பதைச் சிலகாலம் முதிரவைத்தபின் அதை வெண்ணெயெடுக்க உபயோகிப்பர்.

இதனின்றும்பெறவல்ல வெண்ணெய் பச்சைவெண்ணெயாகும். இவ்வெண்ணெய்க்கு ஓர்விதப் பசுமைநிறங்கொடுப்பர். இந்நிறத்தை ஜாப்ரா விதையினின்றும் பெறலாகும்.

பாலினியல்பு :—பால் வெகு மெதுவடைந்த பொருள். அதை வெகு ஜாக்கிரதையுடன் பாதுகாக்கவேண்டும். அசுத்தங்களருகிலிருப்பின் துர்நாற்றத்தை ஆக்ரமிக்குங் குணம் பாலிற்குள்ளது. ஆதலாற் பாலைக்கறக்கும்போது பசுமுதலியவற்றின் பால்வாயை (teats) நீரினால் சுத்தப்படுத்தி, கறப்பதன்முன் கையை நன்றாகக் கழுவிப் பாலை அசுத்தங்கள் நீங்கப்பெற்ற இடத்தில் தெளிவான பாத்திரங்களில் கறக்கவேண்டும். பாலின் வெண்ணிறத்திற்கு யாதாயினுமோர் பங்கம் நேரிடில் அப்பால் அசுத்தமென்றறிந்து நீக்குதல்வேண்டும். பாலிற்குச் சுபாவத்தில் சற்றுப் பசுமைநிறமும் பொருந்தியுள்ளது. சிலகாலங்களில் பாலினின்றும் மேலெழும்பவல்ல ஊனம் உருளை வடிவம் பெற்று எண்ணெய் மிதப்பதுபோலுள்ளது. அதன் நிறம் பசுமையாயுள்ளது. ஆதலின் பாலினது இயற்கையாயுள்ள வெண்ணிறத்தில் ஏற்றத்தாழ்வின்றி சற்றுப் பசுமைநிறமுங்கொண்டு விளங்கினால் அப்பாலைச் சிறந்ததாகக்கொள்ளத்தகும். பாலிற்குத் தக்க கனமு மேற்பட்டுள்ளது. உருசியினும் பாலைப் பகுத்தறிதல்கூடும். இவையாவற்றையும் பழக்கத்தினாலறிந்து தெளியவேண்டும்.

பாலைப் பாதுகாக்கும் முறை.—கறந்த பாலைத் தெளிவான பாத்திரத்திற் கொட்டி பாத்திரத்தை நன்றாகமூடிப் பத்திரப்படுத்தவேண்டும். பாலைத் திறந்துவைப்பின் அதைச் சுற்றியுள்ள பொருள்களினின்றும் வாயுவினின்றும் துர்நாற்றத்தை உட்கொள்ளுவதுடன்

*

வாயுவினின்றுஞ் சிறுகிருமிகள் பாலிலுள்ள சர்க்கரையைத் தாக்கிப் பாலில் புளிப்பை உண்டாக்கி அதன் தர்க்கியசத்தை இறுக்குவதால் பால் சக்கையுந் தண்ணீருமாகப் பிரியுந்தன்மையுடையது. அவ்வகைப்பாலை உபயோகித்தல் சுகவழிக்கு விரோதமாம். இவ்வாறே அன்னம், உப்பு முதலான அன்னியபதார்த்தங்கள் பாலுடன் கலப்பின் பால் பிரியக்கூடியது. பிரிந்தபாலுடன் சர்க்கரையைச்சேர்த்துத் திரட்டிச் சிறுகாலம் உஷ்ணத்திற் றங்கவைத்துத் திரட்டுப்பாலென்றுவழங்கும் இனிய பதார்த்தமொன்றை உண்பண்டமாகச் சேகரிப்பர். இப்பண்டம் சுத்த தர்க்கியசமே (கேஸீயின்) யல்லது வேறல்ல. அதனுடன் சிற்றளவில் ஊனங்கலந்திருக்குமாகையால் திரட்டுப்பாலில் சிறிது நெய்யும் கலந்திருக்கப் பார்க்கலாம். திரட்டுப்பால் செய்வதற்கு சுத்தப்பாலைச் சுத்தமான உப்பு அல்லது புளிமுதலானதைச் சேர்த்துக் கட்டச்செய்வது சிறக்கும்.

பால் அல்லது பாலைச்சேர்த்துப் பெறவல்ல காபி, டீ முதலான பானகங்களை அசுத்தம் நீங்கப்பெற்ற துணியைக் கொண்டு வடிகட்டுவதற்குக் காரணம் எளிதில் விளங்கத்தக்கது.

பாலினுபயோகம்:—மேற்கூறி வந்தவழி பாலினின்றும் பெறவல்ல முக்கிய பதார்த்தங்களைக் கண்டு பாலின் பெருமையை வரையறுத்துச்சொல்லுதல் வைத்திய சாஸ்திரத்திற்குப் பொருந்தும். நமது தேகவுலர்ச்சிக்கு ஊனத்தின்குறைவே காரணமாம். அவ்வூனத்தைப்பெருக்க வெண்ணெயும் நெய்யுமுதவுகின்றன. உடலிளைப்பிற்குத் தர்க்கியசத்தின் குறைவு காரணமாகும். உடலிளைத்தால் பலங்குறையும். ஆதலால் தேகபலத்திற் காதாரமாகிய பொருள் தர்க்கியசம். ஆதலால் தர்க்கியசத்தைத் திரளாகக்கொண்டுள்ள தயிர் உதவுகின்றது. இவை நிற்க, பாலின்கண் கலந்துள்ள மூலதாதுப்பொருள்களாகிய உப்புக்கள் இரத்த சுத்தி முதலியவற்றிற் குதவுவனவாம். மேற்சொல்லிய உணவுப்பொருள்கள் நீரிற் கரைந்து இரத்தக்குழாய்களின் மூலமாகச் செல்லவேண்டிப் பாலில் அதிக நீருள்ளது. நமது தேகம் சுகித்து வளர்ச்சிபெற இருவகை உணவுப்பொருள்கள் வேண்டுகின்றன. அவை முறையே (1) சத்து வுணவுப்பொருள் (Essential food-stuff), (2) உதவி உணவுப்பொருள்

(Accessory food-stuff) என்பர். அவற்றுள் சத்துவுணவுப்பொரு ளாவது இல்லாமல்முடியாதது. அதாவது தர்க்கியசம். இதை இங் கிலீஷில் ப்ரோடீயிட் (Proteids) என்பர். உதவியுணவுப்பொரு ளாவது சத்துவுணவுப்பொருளை தேகத்தில் நிலைநிறுத்துவது. அதா வது ஊனம், சர்க்கரை முதலியன. இவற்றை இங்கிலீஷில் (carbo-hydrates) என்பர். இவ்விருவகை உணவுப்பொருள்களும் வேண்டு மளவில் நமது உடலிற் றங்க அன்னத்துடன் பருப்புக்களையும் நெய், தயிர் முதலியவற்றையுங் கலக்கின்றோம். மற்றும் உப்பு முதலியன தேகத்தில் ஜீரணத்திற்காகப் பலவித இரசங்களைச் சுரக்கச்செய்வது மன்றி இரத்தத்திற்குச் சுத்தியையு முண்டாக்கும். உருசிக்கும் இவையே ஆதாரமாகும். ஓர் உருசிப் பதார்த்தத்தையுண்ணுங்கால் நமது வாயிடத்துண்டாம் இரசம் (Saliva) ஜீரணத்தின் பொருட்டு மிகுதியாக உதவுகின்றது. ஆதலாற்றான் அன்னம் புசித்தபின்னும் வாயினின்று ஊறும் ரசத்தை மற்றுஞ்சுரக்கச்செய்து அன்னத்தைச் சேரத்தாம்பூலமுபயோகிக்கின்றோம். மேற்சொல்லிய இருவகையா காரங்களும் உபகரணங்களுடன் கரைந்து உட்செல்லும் பொருட்டு வெகுவளவில் நீரையும் குடிக்கவேண்டுகிறோம். ஆதலின் நாமுண்டு வரும் ஆகாரத்திலுள்ள இரு வகை உணவுகளும் தக்க உபகரணங்க ளும் பாலிலிருப்பின் பாலை முடிவுபெற்றதோர் ஆகாரமாக (Perfect food) க்கருதி அதைச்சிறந்த உணவாகக் கொள்ளத்தகும். இத ன்முன் பார்த்துவந்த பாலின் பலவிதப்பாகங்களைக் கொண்டு பாலை முடிவுபெற்றதோராகாரமாக நிச்சயிக்கவல்லோம். ஆதலின் இன்று பிறந்த குழந்தைக்கும் பாலே ஆகாரமாகின்றது. மற்றும் ஜீரணக் குறைவுள்ளவர்கட்கும் ஆகாரஞ் சிறிதுஞ்செல்லாத தேகஸ்திதி யடைந்த நோயாளிகளுக்கும் தாராளமாகப் பாலையுபயோகிக்கக் காண் கிறோம். ஆதலின் பாலை அமுதமென்றே பாவித்தல் எல்லாவிதத் திலும் பொருந்தும். இப்பாலை நமக்கு மிகுதியாகக் கொடுக்கும் பசு வின் தன்மையை எவ்வாறு புகழலாம்! பாலும் பழமும் ஆகாரமாய் வருகின்ற ஆன்றோர்களுக்கு ஆவே பிரதான தெய்வமாகும்.

முற்றிற்று.

செ. வீ. இராஜகோபாலாசாரியர்.

ஸ்ரீ:

# பிரதமவித்தியாப்பியாசப் பிரகடனம்.

நாலாவது வருஷத்தில் இந்தியா கவர்ன்மெண்டு வரவு செலவு விஷயங்களை ஆலோசிப்பதற்காகக் கூடிய பார்லிமெண்டு மஹாசபையிலே இந்துதேசத்திலே கல்விப்பயிற்சி இப்போது இருக்கிற ஸ்திதியை

## 1. ஷ்வான்துரையவர்கள் எடுத்துப்பேசியது.

“இந்தியாவின் ஜனத்தொகை இப்போது 24,50,00,000 (இருபத்துநாலுகோடி ஐம்பது லக்ஷம்).

அதிலே பாடசாலைகளில் படிக்கிறவர்கள் 45,00,000 (நாற்பத்தைந்து லக்ஷம்); அந்தப்படிப்புக்காகச் செலவழியும் தொகை 13,00,000 (பதின்மூன்றுலக்ஷம்) பவுண்டு. அதாவது சுமார் இரண்டுகோடி ரூபாய்.

இந்தியாவிலே படிப்பை அபிவிருத்திசெய்யவேண்டுமானால், அதற்குப் பணம் இன்னும் விசேஷமாகச் செலவுசெய்யவேண்டுவது அவசியம்” என்பதாம். இதற்குப் பிரதியுத்தரமாக இந்தியா கவுன்ஸில் காரியதரிசி,

## 2. பிராடரிக்துரையவர்கள் சொன்னது.

“அடிப்படைப் படிப்பைமேலோங்கச்செய்வது மிகவும் அவசியமென்பதை இந்தியா கவர்ன்மெண்டாரே அங்கீகரித்திருக்கிறார்கள்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1870-ம் வருஷத்திலிருந்த பாடசாலைகள் | | 16,400 ; | அவற்றில் படித்தபிள்ளைகள் | | 61,700. |
| 1881 | ,, | ,, | 83.000 ; | ,, | ,, | 20,61,000. |
| 1891 | ,, | ,, | 83,950 ; | ,, | ,, | 32,68,000. |

இதனால் 1881-ம் வருஷத்திற்குப் பிறகு அபிவிருத்தி அத்தனை அதிகமாய் உண்டாகவில்லையென்று விளங்கும்.

ஆனால் அப்போது 1,80,00,000 பிள்ளைகள் பாடசாலையில் படிக்கத்தக்கவயதில் இருந்ததாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

1891-92-ல் பிரதமவித்யாப்யாஸத்திற்குச் செலவழித்ததொகை 49½ லக்ஷம் ரூபாய்.
1901-1902-ல் ,, ,, 63 லக்ஷம் ரூபாய்.

அதற்குப்பிறகு சென்ற 3-வருஷங்களில் அந்தத்தொகையோடு 35-லக்ஷம் சேர்த்து 98-லக்ஷம் செலவு செய்துவருகிறார்கள்.

பெண்பிள்ளைகளில் 1000-க்கு, 7-பேரே படிப்பிக்கப்படுகிறார்கள்; படிப்புக்கு இதைவிடப் பரிதாபமான நிலை வேறென்ன வேண்டும்? இவ்விதமான குறைகளை நிவர்த்திசெய்ய ராஜாங்கத்தார் முக்கியமான இடங்களில் பெண்பிள்ளைப் பாடசாலைகளையும் போதனாப்பியாஸ பாடசாலைகளையும் ஸ்தாபிக்க உத்தேசித்திருக்கிறார்கள்" என்பதாம்.

இப்படி நமது தேசத்துப் பிள்ளைகளுக்குப் படிப்பில்லாத குறையைப்பார்த்து 7000-மைல் தூரத்திற்கப்பாலிருக்கும் இந்துதேசாபிமானிகள் சிலர் துயரப்படுகிறார்களே! அவர்கள் அப்படிப் பரிதாபப்படும்படி இத்தேசத்தவர்கள் தங்கள் சிறுவர்களது படிப்பை விருத்திசெய்யவேண்டிய தமது கடமையை யேன்கைவிட்டிருக்கவேண்டும்?

### 3. ஜப்பான் சக்கரவர்த்தி சொன்னது.

தற்காலம் நமதுதேசத்திலிருப்பதுபோல் பூர்வத்தில் ஜப்பான் தேசத்திலே கல்விப்பயிற்சி மிகவும் சொற்பமாயிருந்தது. பௌத்தசமயாசாரியர்கள் ஆதியில் கற்பித்தபோதனையே 1872-ம் வருஷம் வரையில் அத்தேசத்தில் ஒருவாறுவழங்கிவந்தது. அத்தேசத்தில் நாகரிகத்தேர்ச்சியுண்டாகத் தொடங்கிய 1872-ம் வருஷத்தில் ஜப்பான் சக்கரவர்த்தி வித்தியாபிவிருத்தி விஷயமாய் ஒரு பத்திரிகை பிரசுரம்செய்தார். அதில் "தோட்டிமுதல் தொண்டைமான்வரையிலுமுள்ள உத்தியோகஸ்தர்கள், பயிர்த்தொழிலாளிகள், சிற்பிகள், கைத்தொழிலாளிகள், வைத்தியர்கள்முதலானயாவருக்கும் அவரவர் செய்யும் வேலைக்குவேண்டிய கல்வித்தேர்ச்சி உண்டாவது படிப்பினாலேதான்; ஆகையால், இன்றுதொட்டு, கல்விப்பயிற்சியில்லாத ஒரு குடும்பமேனுமுள்ள கிராமமும், கல்விப்பயிற்சியில்லாத ஒருவரேனுமுள்ள குடும்பமும் ஒன்றுகூட இந்நாட்டிலில்லாதபடி கல்விப்பயிற்சி எங்கும் பரவச்செய்யவேண்டும்" என்பதே.

### 4. அதன்மேல் ஜப்பான் தேசத்தார் மேற்கொண்ட முயற்சி.

தங்கள் சக்கரவர்த்தி இவ்விதமாகப் பிரசுரம்செய்ததைக்கண்டு அத்தேசத்துப் பிரஜைகள் தாமும் வித்தியாபிவிருத்திசெய்வதில்

அதிகமான உற்சாகமுள்ளவர்களாய் இராஜாங்கத்தாரோடு கூடித்தாமும் வேண்டியதிரவிய ஸஹாயஞ்செய்து தம்மாலானவளவு பாடுபட்டுவந்தார்கள். 1896-ம் வருஷத்தில் பாடசாலைமூலதனத்திற்காக அவர்கள் தாமே வேண்டிக்கொடுத்த நன்கொடை 1,56,000-பவுண்டு; அதனோடு 36,77,000—ஏகரா நிலமும், 14,000-புஸ்தகங்களும், 16,000 தொழில் பயிலும் கருவிகளும் கொடுக்கப்பட்டன.

1892-ம் வருஷத்தில், படிக்கத்தக்கவயதுவந்த 79,25,966 பிள்ளைகளில் 40,62,418-பிள்ளைகள் மேனாட்டு மாதிரியாக ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலைகளிற் கற்பிக்கப்பட்டார்கள். ஆண்பிள்ளைகளை மாத்திரம் கணக்கிட்டால் 100-க்கு 82-பேர் கற்பிக்கப்படுவதாயேற்படுகிறது. 30-வருஷத்திற்கு முன் நாகரிகமில்லாதிருந்த ஜப்பான்தேசம் அதிசீக்கிரத்தில் இப்படிப்பட்ட மேலானநிலைமையை அடைந்திருக்க, நெடுநாளாக நாகரிகத்தேர்ச்சியடைந்த தேசமென்று பிரசித்திபெற்றிருக்கும் நமது இந்துதேசம் இப்படிப்பட்ட ஈனஸ்திதியை அடைந்திருப்பது நமக்குள் முயற்சியும் ஐகமத்யமும் இல்லாத குறையினாலன்றோ?

5. கர்ஸன்பிரபு அவர்கள் சொல்லியது.

இந்துதேசத்து இராஜப்பிரதிநிதியாய் 'இந்தியா என்கிற நான்கெழுத்துப்பெயர் எமக்குக் கடமை என்கிறமூன்றெழுத்துப்பெயராயிற்று' என்றுகூறி எவ்விதமான பரிசிரமத்தையும் பாராமல், இந்தியாவுக்கு நன்மைசெய்வதன் பொருட்டே ஐந்துவருஷத்தோடு பின்னும் இரண்டுவருஷம் பாடுபட வந்திருக்கிற கர்ஸன் பிரபு அவர்கள் வித்தியாபிவிருத்தி விஷயமாய் அனேகம் நூதனமான ஏற்பாடுகள் செய்திருக்கிறார். சகலகலாசாலைப்படிப்பு விஷயமாகப் பல ஏற்பாடுகளும் செய்து முடிக்கப்பட்டன.

இத்தேசத்தில் கல்விப்பயிற்சி மிகவும் ஈனஸ்திதியிலிருப்பதைப் பார்த்துப் பரிதபித்து 1904-வரு மார்ச்சுமீ 11உ ஒரு விளம்பரம் பிரசுரம்செய்திருக்கிறார். அதில்இந்தியாவிலே 5-ல், 4-கிராமங்களில் பாடசாலையே இல்லையென்றும், 4-ல், மூன்றுபிள்ளைகள் வித்தியாப்யாஸ மில்லாமலே வளர்கிறார்களென்றும், 40-ல், ஒரு பெண்ணே

பாடசாலையில் சேர்ந்திருக்கிறாள் என்றும் சொல்லியிருக்கிறார். இப்படிப்பட்ட ஈனஸ்திதியையுணர்ந்து இத்தேசத்துக்கல்விப்பயிற்சியை அபிவிருத்தி செய்யவேண்டியதற்காகவும், மேலான படிப்புமுறைகளைத்தெரிந்துபடிப்பிக்கும்படி உபாத்தியாயர்களைஉற்சாகப்படுத்துவதற்காகவும் வித்யாப்யாஸ விஷயமாய் இராஜாங்கத்தார் இத்தேசத்தில் இதுவரையில் செய்துவந்ததையும், இப்பொழுது செய்துவருவதையும் எடுத்துக்காட்டியிருக்கிறார். மேலும் இராஜாங்கத்தார் ஆரம்பித்த காரியத்தைப் பிரஜைகளுடைய உதவியின்றிப்பூர்த்திசெய்யமுடியாதாகையால், வித்தியாபிவிருத்திசெய்வதாகிய பெரியகாரியத்தைத்தலைக்கட்டும்படி இத்தேசத்துப் பிரமுகர்களையும், வித்தியாபிவிருத்தி விஷயத்தில் பாடுபடுகிற மற்றும் பலரையும் கேட்டுக்கொண்டிருக்கிறார். இதை அநுஸரித்து சென்னைச் சுதேசவித்யாபிவிருத்தி சங்கத்தார் இந்தவிஷயத்தில் முயற்சிகொண்டு பல பாடசாலைகளின் தலைமை உபாத்தியாயர்களையும் பண்டிதர்களையும் வித்தியாபிவிருத்தி விஷயமாக அபிப்பிராயம் கேட்டதில், 70-பேர் சற்றேறக்குறைய ஒரேமுகமாய் அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார்கள்.

பிரதமசிக்ஷையும் த்விதீயசிக்ஷையும் லக்ஷக்கணக்கான பிரஜைகளுக்குக் கண்திறக்கவேண்டிய காரியமானதுபற்றி, இதைக்குறித்து இராஜாங்கத்தார் எவ்வளவு பரிசிரமமெடுத்துக்கொண்டாலும், அவர்களோடு சேர்ந்து நம்மிலொவ்வொருவரும் பாடுபட்டுத் தமது கடமையைச்செலுத்தாதிருக்கிறவரையில் இந்தப் பெரிய காரியம் பூர்த்தியாகாதென்று உறுதியாய்ச்சொல்லலாம்.

'ஸங்கேசக்தி: கலௌயுகே'.

'இந்தக்கலியுகத்தில் கூட்டத்திலேதான் சக்தியிருக்கிறது' என்று சொல்லியபடி பலபேர் சேர்ந்தாலொழிய நல்லதீர்மானம் ஏற்படாதாகையால், இந்த நல்லகாரியத்தில் எல்லாருக்கும் உற்சாகமுண்டாகச் செய்யும்பொருட்டுக் கூடிய சீக்கிரத்தில் பிரபுக்கள் பண்டிதர்கள் பிரதம உபாத்தியாயர்கள் ஆகிய பலரையும் ஸபை கூட்டுவதாக சுதேச வித்தியாபிவிருத்திச் சங்கத்தார் நிச்சயித்திருக்கிறார்கள்.

## 6. இங்கிலாந்திலும் இதரதேசங்களிலும் பிள்ளைகளுக்கு வேதனம்வாங்காமலே செய்விக்கும் பிரதமசிக்ஷை.

இந்தவிஷயத்தைப்பற்றி முன்னிருந்த டைரெக்டர் அவ் பப்ளிக் இன்ஸ்ட்ரெக்ஷனாகிய ஜி. எச். ஸ்டூவர்ட் துரையவர்கள் சொன்னதாவது:—

"இங்கிலாந்திலும் மற்றும் நாகரிகம்பெற்ற நாடுகளிலும் அந்தந்த் துரைத்தனத்தார் தேசத்துப் பிள்ளைகளுக்கு வேதனமில்லாமல் பிரதமசிக்ஷைசெய்விக்கப் பாடசாலைகள் ஸ்தாபித்திருக்கிறார்கள். பிள்ளைகளைப் படிப்பிக்க இஷ்டமுள்ளவரெவரும் அந்தப்பாடசாலைகளுக்குத் தங்கள்பிள்ளைகளை அனுப்பலாம். தேசத்திலுள்ள சிறுவர்களும் சிறுமியர்களும் படித்துத் தேறுவது தேசத்திற்கே நன்மையாகையால், அந்தப்படிப்புக்கு வேண்டியசெலவைத்தேசத்தார் பொதுவாயேற்றுக்கொள்ளவேண்டுமேயொழிய, ஒவ்வொரு பிள்ளையினுடைய பெற்றோரும் ஏற்றுக்கொள்ளலாகாதென்பது பொதுவான கொள்கை. தாய் தகப்பன்மாரைத் தன்பிள்ளைகளைப் பாடசாலைக்கு அவசியம் அனுப்பவேண்டுமென்று அத்தேசங்களில் நிர்ப்பந்திப்பார்கள்.

த்விதீய சிக்ஷைக்குப் பிரதமசிக்ஷையைவிடப் பணச்செலவு அதிகமாகையாலும், அதிற்பயிலும் திறமை எல்லாப்பிள்ளைகளுக்கும் அமைந்திருப்பதில்லையாகையாலும், அதற்குச் சம்பளமில்லாமல் பாடசாலைகள் ஸ்தாபிக்கவில்லை. ஆனால், தெய்வபக்தியிலும் அறிவிலும் முதிர்ந்தவர்களான அத்தேசத்து முன்னோர்கள் உத்தமபாடசாலைகளிலும் கலாசாலைகளிலும் வித்யார்த்தி வேதனம் விசேஷமாக ஏற்படுத்தியிருக்கிறார்கள்; மேலான படிப்புப்படிக்கப் போதுமான யோக்கியதையுள்ள வித்யார்த்திகளுக்கெல்லாம் கலாசாலையில் படிப்பதற்கு அனுகூலமாய் இந்த வேதனம் வெகுவாகக் கிடைத்துப்போகிறது. மேற்சொன்ன வேதனமில்லாதபடிப்பு, நிர்ப்பந்தப்படிப்பு ஆகிய இரண்டிற்கும் இத்தேசத்திற்கும் வெகுதூரம். அப்படிப்பட்ட படிப்பு இங்கே என்றைக்காவது ஒருகாலத்தில் உண்டாகுமோ உண்டாகாதோ ஸந்தேகமே." என்பதாம்.

இத்தேசத்தில் பிரதம சிக்ஷையாவது த்விதீய சிக்ஷையாவது செய்விக்க, வேதனமில்லாத பாடசாலைகளும் ஸ்தாபிக்கவேண்டிய அவசியமில்லை. இராஜாங்கத்தாருடைய பாடசாலைகளும் அவசியமில்லை; இராஜாங்கத்தார் பாடசாலைகளின்போஷணத்திற்காகக் கொஞ்சம் திரவிய ஸஹாயம் செய்தால், அதுபோதுமானது.

## 7. மோகலாய சக்கரவர்த்திகளின் அரசாட்சி செழித்தோங்கிய காலத்தில் பிரதம சிக்ஷை இருந்தநிலை.

இந்து தேசத்து வித்யாப்யாஸத்தைப்பற்றி ஸர். அலெக்ஸாண்டர் ஜான்ஸ்ட்டன்துரை, ஸி. க்ராண்டு துரையவர்களுக்கு எழுதிய கடிதத்தின் ஒருபாகம்:—

"மொகலாயகாலத்தில் இந்துக்கள் ஒவ்வொரு கிராமத்திலும் இராஜாஞ்ஞையினால் வித்தியாப்யாஸம் செய்துவந்தார்கள்; யாவருக்குமே அறிவு உண்டாக்கப்பட்டது. இக்காலத்தில் எழுதப்படிக்கத் தெரிந்தவன் எவ்வளவு அருமையோ, அவ்வளவு அக்காலத்தில் எழுதப்படிக்கத்தெரியாதவன் அருமை. நன்றாய் ஆலோசிக்குமிடத்தில் இத்தேசத்து நிலை இப்போது தலைகீழாகிவிட்டது." என்பதாம்.

இப்படி முற்காலத்தில் இருந்திருக்குமா என்று சிலர் சங்கிக்கலாம். அப்படி, சங்கிக்கலாகாது. நாளைக்கும் ஒவ்வொரு கிராமத்திலும் வாத்தியார் மானியமென்று மானியமும் ஏற்பட்டிருப்பதால் மொகலாய சக்கரவர்த்திகள் மானியமும்விட்டு வித்தியாப்பியாஸம் செய்வித்துவந்தார்களென்பது உறுதியாய் ஏற்படுகிறது.

## 8. ஹிந்துராஜாக்கள் காலத்தில் பிரதமசிக்ஷை இருந்த நிலை.

[பின் சொல்வதும் மேற்குறித்த கடிதத்தின் ஒருபாகம்.]

"இந்துதேசத்தில் இந்துராஜாக்களுடைய சரித்திரம் தெரியத் தொடங்கின காலம்முதல் அந்தராஜாக்கள் ராஜ்யபரிபாலனத்தோடு பிரஜைகளுக்கு வித்தியாப்யாஸம் செய்விப்பதிலும் எப்பொழுதும் அதிகமான ஆஸ்தையும் விசாரமும் உள்ளவர்களாயிருந்தார்கள். ஒழுங்காக நடத்தப்பட்ட ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பொதுப் பாடசாலையும் ஒரு பொது வாத்தியாரும் இருந்தனர். இப்பாடசாலைக

ளில் வித்யாப்யாஸமுறை காரியகரமாயும் சுலபமாயும் சொற்பச்செலவுள்ளதாயுமிருந்ததுபற்றி, அந்தமுறையைச் சென்னையிலிருந்து தெரிந்து சில ஆண்டுகளுக்கு முன்னே இங்கிலாந்தில் ஆசரிக்கத்தொடங்கினர்கள். பிறகு அங்கிருந்து அந்தமுறையை ஐரோப்பாவில் மற்றத்தேசத்தவர்களும் வழங்கலானார்கள். இந்தியாவில் ஒவ்வொரு தகப்பனும் தன் பிள்ளைக்கு வித்யாப்பியாசஞ் செய்விப்பது தன் பிரதான தருமங்களில் ஒன்றாகக்கொண்டிருந்தான். அது கடவுளுக்கும் தன் தேசத்திற்கும் தான் செய்யவேண்டிய கடமைகளிலொன்றெனக்கொண்டு ஐந்தாவது வயதில் தகப்பன் பிள்ளையைப் பாடசாலைக்கு அனுப்புவது வழக்கமாயிற்று" என்பதாம்.

அப்படியே நாளைக்கும் இத்தேசத்தில் 5-ம் பிராயத்தில் பிள்ளைக்கு அக்ஷராப்பியாசம் செய்வித்துப்பள்ளிக்கூடத்தில் விடுகிறார்கள்.

## 9. இத்தேசத்தில் தற்காலத்திய வித்தியாப்பியாஸத்தின் நிலை.

கடைசியாக ராஜாங்கத்தார் எடுத்த ஜனத்தொகைக் கணக்குப்படி, 1000-ல் 64-பேர் தத்தம் தேசபாஷைகளை எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள்.

| | | | |
|---|---|---|---|
| ,, | 119-புருஷர்கள் | ,, | ,, |
| ,, | 9-ஸ்திரீகள் | ,, | ,, |

ஜாதிபேதப்படி ஆராய்ந்து பார்க்குமிடத்தில்,

இந்துக்களில் 1000-புருஷர்களில், 116-பேர் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மகமதியரில் | ,, | ,, | 141 | ,, | ,, |
| கிறிஸ்தவர்களில் | ,, | ,, | 198 | ,, | ,, |
| இந்துக்களில் | ,, | ஸ்திரீகளில் | 7 | ,, | ,, |
| மகமதியர்களில் | ,, | ,, | 9 | ,, | ,, |
| கிறிஸ்தவர்களில் | ,, | ,, | 91 | ,, | ,, |

மேற்காட்டிய கணக்குப்படி மொத்த ஜனத்தொகையில் 100-க்கு 6-பேர் எழுதப்படிக்கத்தெரிந்தவர்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| புருஷர்களில் | ,, | 12 | ,, | ,, | ,, |
| ஸ்திரீகளில் | ,, | 1-க்கேகுறைவு | ,, | ,, | |

என்று ஏற்படுகிறது.

இந்துராஜாக்கள் காலத்திலும் மொகலாயசக்கரவர்த்திகள் காலத்திலுமிருந்ததைவிட நாளுக்குநாள் விருத்தியடைந்துவருகிற நாகரிகம்பெற்ற இந்த ப்ரிட்டிஷ் ராஜ்யத்தில் வித்தியாப்பியாஸம் இவ்வளவு ஈனஸ்திதியிலிருப்பது மிகவும் பரிபவமானதன்றோ?

## 10. நமது தேசத்துப் பழைமையான படிப்பு.

[ப்ரொபெஸர் ரங்காசாரியார் அவர்கள் சொல்லியது.]

"தற்காலத்திலுள்ளபடி இத்தேசத்து வித்யாப்பியாஸத்தை நன்றாக ஆலோசித்துப் பார்ப்போமானால், ஒன்றுக்கொன்று ஸம்பந்தமில்லாத இரண்டு வித்யாப்பியாஸமுறைகள் இங்கே வழங்கிவருபவைநன்றாகத்தெரிகின்றன. அவைகளிலொன்று, இத்தேசத்துப்பழைமையான படிப்புமுறை; மற்றொன்று, புதிதா யேற்பட்ட ஆங்கிலேயர் படிப்புமுறை. பழைமையானபடிப்புமுறையிலுள்ள குணதோஷங்களைக் கண்டறிய ராஜாங்கத்தார் சிறிதும் முயற்சிகொள்ளவேயில்லை; புதிய படிப்பு முறையோ, விசேஷமாக விருத்திசெய்து அதைப்பற்றின பலஸங்கதிகளையும் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். ஐரோப்பியருடைய நூதனமான நாகரிகம் இத்தேசத்திற்கு வருகிறவரையில், இங்கே தெருத்திண்ணைப் பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப்பட்ட பழைய படிப்புமுறை இத்தேசத்து ஸகலமான பிரஜைகளுக்கும் இவ்வுலகவாழ்க்கைக்கு அவசியமாய்வேண்டியவைகளுக்குப்போதுமானதாகவே யிருந்தது. அப்படியிருக்க இக்காலத்து நூதனமான பிரதமவித்யாப்பியாஸத்திலே, திண்ணைப்பள்ளிக்கூடத்துப் பழையபடிப்புமுறையிலுள்ள குணங்களை அனுசரிக்காமலிருப்பதைப் பார்க்க மிகவும் பரிதாபமாயிருக்கிறது." என்பதாம்.

1820-ம்௵ சென்னை கவர்னராயிருந்த ஸர். தாமஸ். மன்றோ பிரபு அவர்கள் இத்தேசத்து வித்தியா விஷயத்தை விசாரிக்கத் தொடங்கினார்கள். அவருக்குப் பிரதியுத்தரமாக ஜில்லாகலெக்ட்டர்கள் அனுப்பிய பத்திரிகைகளினால், இராஜதானியில் 12,498 பாடசாலைகளில் 1,88,650 பிள்ளைகள் படித்துவந்ததாகவும், அந்தப்பாடசாலைகளில் 740-கல்லாசாலைகளா யிருந்ததாகவும்; அவைகளில் தஞ்சாவூர்

ஜில்லாவிலே மாத்திரமிருந்த 993-பாடசாலைகளில் 109-கலாசாலைகளாயிருந்ததாகவும் அப்போது தெரிந்துகொள்ளப்பட்டன.

அக்காலத்து ஜனத்தொகை மொத்தம் 1,28,50,941. ஆகவே ஆயிரம் பிரஜைகளுக்கு ஒருபாடசாலை யிருந்ததாகத் தெரியவருகிறது. அநேகமாய் இப்பாடசாலைகளெல்லாம் அந்தப்பிள்ளைகளின் பெற்றோர்களாலேயே பரிபாலிக்கப்பட்டுவந்தன. பிராம்மணர்களே அப்பாடசாலைக்குத் தலைவர்களாயிருந்தார்கள். அவர்களுக்கு மானியங்கள் விடப்பட்டிருந்தன. அந்தமானியங்கள் பூர்வகாலத்து ஜமீன்தாரிகளாலும் நவாபுகளாலும் விடப்பட்டவை.

1828-ம் ௵ கிழக்கு இந்தியாவர்த்தகச் சங்கத்தாருடைய அத்யக்ஷஸபையார் அனுப்பிய ராஜாங்கவிஷயமான பத்திரிகையில், ஸர். தாமஸ் மன்ரோ செய்த ஏற்பாடுகளைப் பூர்ணமாய் அங்கீகரித்தார்களானலும், கிராமபாடசாலைகளில் இன்னவிதமான படிப்பு படிப்பித்துவந்தார்களென்பதையும், அந்தப் படிப்புக்கு இன்னவிதமான புஸ்தகங்களை உபயோகித்துவந்தார்களென்பதையும்பற்றி ஐயந்திரிபற விசாரித்துத் தெரிந்துகொள்ளவில்லையென்று மிகவும் துக்கித்திருக்கிறார்கள்.

1835-ம்௵த்திற்கு முன்னே இத்தேசத்தில் முக்கியமாய் சுதேச பாஷைகளே படிப்பிக்கப்பட்டு வந்தன. அப்போது சுதேசபாஷா ஞானத்தையும் அந்தப் பாஷையிலுள்ள சாஸ்திரங்களையுமே விருத்திசெய்விக்கவேண்டுமென்பது அவர்களுடைய உத்தேசமாயிருந்தது. மேனாட்டுப்படிப்பிலுள்ள விசேஷங்களையும் அவற்றுடன் சேர்த்துப் படிப்பித்துவந்தார்கள். பிறகு 1835-ம் ௵த்தில் பாஷையோடு சம்பந்தப்படாத விஷயங்களைச் சுதேசபாஷையாலா அல்லது ஆங்கிலேய பாஷையாலா போதிப்பது என்கிற விசாரம் வந்தபோது மெக்காலே பிரபு எழுதிவைத்த கியாதிபெற்ற ராஜாங்கக் குறிப்பை அனுசரித்து லார்டு வில்லியம் பென்டிங்கு ஆங்கிலேய பாஷையாலேயே போதிப்பிக்கவேண்டுமென்று தீர்மானித்துவிட்டார். அதனாலேயே இத்தேசத்தில் சுதேச பாஷைகள் மேன்மேலும் விருத்தியடைய வழியில்லாமற் போயிற்று.

இத்தேசத்தார் பிரதம சிக்ஷையை விருத்திசெய்யத் திறமை யற்றவர்களாயிருந்தபோது 1852-ம் வருஷத்தில் கிறிஸ்தவ பாதிரிமார் இத்தேசத்தில் 1885-பாடசாலைகள் ஸ்தாபித்தார்கள். அவைகளில் 38000 பிள்ளைகள் படித்தார்கள். அந்தப் பாடசாலைகள் வெகுவாய்த் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஜில்லாக் களிலேயே விசேஷமாயிருந்தன. அக்காலத்தில் கிறிஸ்தவ சங்கத் தார் பாடசாலைகளின் கட்டிடங்களுக்கு மாத்திரமே 1852-ம் வருஷத் தில் 40,000ரூ வரையிலும் 1853-ம் வருஷத்தில் 30,000ரூ வரையி லும் செலவுசெய்தார்கள். இதேவிதமாக நமது தேசத்தில் வைதிக மார்க்கத்தை விருத்திசெய்விப்பதற்காக ஏற்பட்டிருக்கும் மடாதிப திகள் ஸ்தாபித்த பாடசாலைகள் எங்கே? எங்கே என்றுகேட்டால் அதற்கு 'எங்கே?' என்கிற பிரதிதொனிமாத்திரம் மறுமொழி யாய் உண்டாகிறதேயொழிய மற்றொரு பிரதியுத்தரமு முண்டாகக் காணோம்.

(இன்னும் வரும்.)

சே. இராஜகோபாலாசாரி.

---

# பொன்னெறும்புகள்.

பண்டைக்காலமுதலே பல்லாற்றானும் பெயர்பெற்ற இப்பரத கண்டத்தின் அருமைபெருமைகளை எடுத்துரைத்துப் பாராட்டியவர் களில் மேற்றிசையோரும் பலராவர். அவருள்ளே சிலர் இங்குள்ள அதிசயங்களைக் கண்கூடாகக் கண்டுகளித்தவர். அவர்கள் கண்ட அதிசயங்களுள் ஒன்று பொன்னெறும்பாம். கி. மு. 400 முதல் கி. பி. 400 வரை இந்தியாவுக்கு வந்தவர்களுள்ளும் இத்தேசத்தைக் குறித்தெழுதியவர்களுள்ளும் இப்பொன்னெறும்புகளைப்பற்றிப் புக லாதவர் ஒருவருமில்லை. இவ்வெறும்புகளைக்குறித்த கதைகள் அக் காலத்தில் மிகவும் பெருவழக்காகவிருந்தன. இவைபோன்ற அதி சயங்களைக் காணவேண்டுமென்ற அவா, மேனாட்டார் பலரை இந்தி யயாத்திரை செய்யத்தூண்டிற்று. இவ்வெறும்புகளைப்பற்றிய செய்

திகள் கேட்டோர் மனதைப் பெரிதும் கவரக்கூடியனவாம். ஆனால், நம்முடைய நூல்களில் இவ்விதமான எறும்புகள் உண்டென்று கூறப்பட்டதாகத் தெரியவில்லை. இவற்றைப்பற்றிக் கூறுவனவெல்லாம் மேற்றிசையோரெழுதிவைத்த நூல்களே. அவர்களுள்முதன்முதல் இவ்வெறும்புகளைப்பற்றி எழுதியவர், இற்றைக்கு 2390 ஆண்டுகட்குமுன், சரிதவாசிரியர்க்கெல்லாந் திலகம் போலவிளங்கிய ஹிரோடோடஸ் என்ற மேதாவியார். இவர்காலத்தில் இந்தியாவின் வடமேற்குப்பாகம் பெர்சியாவுக்கு உட்பட்டிருந்தமையால், இந்தியாவைப்பற்றிய விஷயங்கள்பல அப்போது மேற்றிசையிற் பரவலாயின. ஆயினும், இவ்வாசிரியர் அறிந்தது சிலவே. இவ்வெறும்புகளைப்பற்றி இவர் கூறுவன அடியில் வருமாறு:—

"காஸ்பாடிரஸ்" என்ற நகரத்தையும் 'பாக்டைஸ்' என்ற நாட்டையும் சுற்றிவசிக்கும் இந்தியருக்கு வடக்கே மற்றோர் இந்தியவகுப்பினர் இருக்கிறார்கள். அவர் நடை யுடை பாவனைகளில் யவனரையொத்தவர்; இந்தியரில் மகாவீரராகக் கருதப்படுவோர்; பொன் கவர்ந்துவர அனுப்பப்படுவோர் இவர்களே; இவர் நாட்டின் பக்கந்தே ஒரு பாலை நிலம் உண்டு. இந்நிலத்தில் நாய்க்குச் சிறியதும் நரிக்குப்பெரியதுமான வடிவுள்ள எறும்புகள் பூமிக்குள் வசிக்கின்றன. இவற்றுட்சில பாரசீகத்துக்குக் கொண்டுபோகப்பட்டு, இப்பொழுது, அந்நாட்டரசன் கைக்குள் உள்ளன. இவ்வெறும்புகள் வளைகளைத் தம்மிருப்பிடமாகக் கொண்டு, கிரீஸில் எறும்புகள் செய்வது போலவே, மணலை வெளியே குவிக்கின்றன. உருவத்திலும் அக்கிரீஸ் எறும்புகள் போல உள்ளன. குவிக்கப்பட்டமணல் பொற்றூள்களோடு கலந்துள்ளது. இந்தியர்கள் இம்மணலைக்கவரச் செல்லுகையில், ஒவ்வொருவரும் மூன்று ஒட்டகங்களைக் கைக்கொண்டு, ஆணிரண்டையும் இருபக்கத்தும் பெண்ணொன்றை அவற்றின் மத்தியிலும் வைத்துப்பிணைத்துக்கொள்வார்கள். ஈன்றணிமையுடைய ஒட்டகையையே தகுதியுள்ளதாகத் தெரிந்தெடுத்து அதன் மேல் ஏறிச்செல்வார்கள். குதிரைக்கு ஓட்டத்திற் பிந்தாது, பாரத்தை அதனினும் நன்றாகச்சுமந்து செல்வதால் ஒட்டகைகள் உபயோகப்படுவனவாம். இவ்வித ஏற்பாட்டுடன் ஒட்டக

மூர்ந்து, தங்கள்கொள்ளையெல்லாம் நல்ல வெயிற்பொழுதில் நடக்கும்படி, காலத்தை யறிந்து பொன்கவரப்போவர். ஏனெனில், கடும்பகலில் (உஷ்ணத்தைப்பொறுக்காது) பூமியின் கீழ் அவ்வெறும்புகள் வசிப்பனவாகும்................இந்தியர் அவ்வெறும்புப்புற்றுக்களை அடைந்தவுடன், தாங்கள் கொணர்ந்த சாக்குகளில் அப்புற்றுக்களின் வெளியே கிடக்கும் பொற்றாள்கலந்தமணலைவாரி நிரப்பி அதிவிரைவில் திரும்பிவிடுவார்கள். ஏனெனில், பாரசீகர் சொல்லியபடி, ஓட்டத்தில் எதற்கும் இளைக்காத இவ்வெறும்புகள், மோப்பத்தால் மனிதர் வரவையறிந்து அவரைத் துரத்தும். இவை கூட்டமாகப் புற்றினின்று வெளியேறுவதற்குள் மனிதர் ஓடாவிடின், ஒருவரேனும் பிழைப்பது அருமையாய்விடும். ஓடுங்கால், பெண்ணொட்டகத்தினும் ஓட்டத்திற்குறைந்த ஆணொட்டகங்கள், தாங்களேறிச்செல்லும்போது முன்னும்பின்னுமாக இழுத்துக்கொண்டே தங்கள் நடையிற் சற்றுச் சலிக்க, ஈன்ற குட்டிகளை நினைந்து செல்லும் பெண்ணொட்டகம் சிறிதும் சலிப்பின்றி, தம்முடன் பிணைக்கப்பட்ட ஆண்களையும் இழுத்துச்செல்கின்றது. இவ்விதமாகத்தான், பாரசீகர்சொல்லியபடி, இந்தியர் பெரும்பான்மை பொன் பெறுகின்றார்கள். சிறுபான்மை நாட்டில் பொன் வெட்டியெடுக்கப்படுகின்றது" எனக் கண்டுகொள்க. இவ்வாசிரியரே, வேறோரிடத்தில், பொன், ஆற்றின் மணலோடுங் கலந்து காணப்படும் என்பர்.

இவ்விதமாகத் தமக்குத் தெரியவந்த விஷயங்களை எழுதிப்போக, இவர்க்கு ஒரு நூற்றாண்டுக்குப்பின் வந்த மெகஸ்தனிஸ் முதலியோர், இதே விஷயங்களைச் சிற்சிலமாறுபாடுகளுடன் கூறிப்போந்தார். மெகாஸ்தனிஸ் இவ்வெறும்பின் தோல்களைத் தாம்நேரிற் பார்த்ததாகவும் அவை சிவிங்கியின் தோலளவு பெரிதாகவிருந்ததாகவும் எழுதியிருத்தலோடு, மாரிக்காலத்தில் இவ்வெறும்புகள் பூமியைத்தொளைத்துத் தொளைவாயிலில் பொன்மணல்களைக் குவிக்குமென்று சொல்லுகின்றார். இற்றைக்கு 1800-வருஷங்கட்கு முற்பட்ட பிளினி என்னும் மற்றோர் ஆசிரியர் இவ்வெறும்பின் கொம்புகள் "எரித்திரா"வில் 'ஹெர்குலிஸ்' ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்ததாகவும், அவை பல்லோர்க்கும் ஆச்சரியம் விளைத்தனவென்றும்,

அவைகள் பூனையினிறமும் எகிப்துஓநாயின் பருமனும் கொண்டுள்ளனவென்றும், இந்தியாவில் எறும்புகளினாலும் 'ஸித்தியா'வில் ஒருவித மிருகபக்ஷி (கிம்புள்?) யாலும் பொன்வெட்டி யெடுக்கப்படுகின்றன வென்றும் சிற்சில வேறுபாட்டுடன், முன்னோர் எழுதிச்சென்றவற்றை உறுதிப்படுத்துகின்றார். ஆயினும் இக்கதைகளெல்லாம் அக்காலத்திலேயே ஆச்சரியத்தோடு அவநம்பிக்கையையும் விளைத்தன. இற்றைக்கு 2000 வருஷங்கட்கு முன்பிருந்த ஸ்டராபோ என்றயவனாசிரியர், "அறியாமையாலும், நீண்டதூரத்துள்ளமையாலும் இந்தியாவைப்பற்றிய விஷயங்களெல்லாம் விதந்தும் புனைந்தும்கூறப்படுகின்றன; உதாரணமாக:—பொன்னெறும்புகளைப்பற்றிய கதைகளும், வெவ்வேறு புதுத்தோற்றங் கொண்ட விலங்குகள் மனிதர்கள் இவைகளைப்பற்றிய கதைகளும், 200-வருஷத்திற்கும் மேலாக நீண்டஆயுளைப்பெறுவதாய்க் கூறப்படும், 'சீரிஸ்' ஜாதியாரைப் போன்ற, அருமைவாய்ந்த மதிநுட்பங்கொண்ட மக்களைப்பற்றிய கதைகளும் வழங்குகின்றன" எனவும், "இவ்வெறும்புகளிற் சில சிறகு பெற்றவையென்றும், இந்தியநதிகள் 'ஐபீரியா' நதியைப்போலவே பொற்றாள்களைக் கொணர்வன என்றுஞ் சொல்லுகிறார்கள்" எனவும் எழுதியுள்ளார். இற்றைக்கு 1700-ஆண்டுக்கு முன்னிருந்த ஏலியன் என்பவர், 'இப்பொன்னெறும்புகள் நதிகளைக்கடந்து செல்வன அல்ல' என்றார். இற்றைக்கு 1800-வருஷங்கட்கு முன்னிருந்த "ஆரியன்" என்பார், "இந்தியரைப்பற்றிய கட்டுரைகளின் பொய்ம்மையை எடுத்துக்காட்டுபவரில்லையாதலால், தங்கத்தைத் தமக்கு வெட்டியெடுத்துக்கொள்ளும் எறும்புகளையும் இதைக்காக்கும் கிம்புள்களையும், இன்னும் இவை போன்று பொருள்கருதாது விநோதம் பற்றியே எழுதப்பட்ட கதைகளையும் யான் கூறினேனல்லேன்" என்றார். ஆயினும்,மேனாட்டார்க்கு இவற்றில் நம்பிக்கை அதிகமாக விருந்தது. இந்தியாவில், பொன், ஆபரணங்களுக்கும் அலங்காரங்களுக்கும் விசேடமாக உபயோகப்பட்டமையாலும், அக்காலத்தில் இந்தியாவிலிருந்து மிகுதியான தங்கத்தூள்கள் கப்பமாகப் பிறநாட்டாராற் கவரப்பட்டமையாலும், இக்கதைகளை ஜனங்கள் உண்மை யென்றே கொண்டாடினர். கி. பி. 117 ல் இறந்த "கிரிஸாஸ்டம்" என்னும் யவனர், தம் நாட்டாரை நோக்கிக் கூறுவதன்மூலம் இந்தியரை

வாயாரப்புகழ்ந்துள்ளார். அவர் கூறுவன;—"இந்தியர் உங்களைவிட மஹாபாக்கியசாலிகள்; நீங்கள் பொன் கொழுத்த அச்சாதியாரொழிய ஏனையரினும் பாக்கியசாலிகள்; உங்களுடைய துணிபும் இதுவே; இப்பொன் இந்தியர்க்குக் கிடைக்கும் வழியைச் சொல்லுகிறேன்; அவர்கள், இப்பொன்னை, நரியினும் பெரியதும் மற்ற விஷயங்களில் அதனையொத்ததுமான எறும்புகளிலிருந்து பெறுகிறார்கள். இவ்வெறும்புகள், மற்ற எறும்புகள் போலவே, பூமியைத்தோளைக்கின்றன. அவை வெளியிற்குவிக்கும் பொற்றாள்கள், மற்றப்பொன்களைவிட, சுத்தமாகவும் பிரகாசமாகவும் உள்ளன. இக்குவியல்கள், பொற்குன்றுகள் போல அணியணியாய்நெருக்கிக் குவிக்கப்பட்டு நாற்புறமும் தம்மொளியை வீசுகின்றன. இதனால் சூரியனைப்பார்ப்பது கடினமாவதால், அவ்வாறு பார்க்க முயன்றோர் பலர் தங்கண்ணொளியை இழந்திருக்கிறார்கள். இவ்வெறும்புகளின் இருக்கைக்கு அடுத்துவாழும் மனிதர், இக்குவியல்களைக் கொள்ளைகொள்ளவேண்டி, அதிவேகமாகச்செல்லும் குதிரைகள் பூட்டிய இரதங்களிலேறி மத்தியிலுள்ள சிறுவனாந்தரத்தைத் தாண்டிச்செல்வர். நடுப்பகலில், அவை, வளைக்குட்சென்றிருக்கும் போது, ஆங்குச்சென்று குவியல்களை உடனே வாரிக்கொண்டு அதிவிரைவாக ஓட்டமெடுப்பர். இக்களவையறிந்த எறும்புகள் திருடர்களைத் துரத்திப்பிடித்து அவர்களுடன் வெற்றி யல்லது தோல்வி காணும் வரை முனைந்து போர் செய்யும். ஆண்மையில் மற்ற மிருகங்களெல்லாம் இவற்றுக்குப்பின்னே நிறுத்தற்குரியன" என்பதே.

மேற்கூறிய கதைகளினுண்மை இன்னதென்று கண்டுரைத்தற்குத் தக்கசான்றுகள் கிடைத்தில. இப்பொன்னெறும்புகளோ தற்காலத்தே இலவாயின. அவற்றைப்பற்றிய விஷயங்களும் வடமொழிதென்மொழி நூல்கள் ஒன்றிலேனும் கிடையா. இக்கதைகளை ஒருதலையாகத்துணிந்து விளக்க முயன்றோர் பலரும் இடர்ப்பாடேயுற்றனர். ஆயினும், தற்கால அறிஞரிற்பலர் இக்கதைகளெல்லாம் புனைந்துரையாவதோடு புரட்டுரையாகவுங்கருதி, இவ்விதவெறும்பு இருந்ததென்பதையே மறுக்கின்றனர். அவர்கள் தங்கள் ஆராய்ச்சியால், இவ்வெறும்புகள் திபத்து தேசத்து பழைய சுரங்கவேலைக்

*

காரரைக் குறிக்கவேண்டுமென்று அவ்விரண்டிற்குமுள்ள ஒற்றுமைகள் பலவற்றால் ஊகிக்கின்றார்கள். இவ்வூகம் தற்கால தீபத்தியர்களின் வழக்க ஒழுக்கங்களால் உறுதி பெறுகின்றது. இவர்கள் மாரிக்காலத்தில் சுரங்கவேலைசெய்வது வழக்கம். அப்போது பூமியிற் பனியுறைந்து இறுகியிருப்பதால், சுரங்கம் இடிந்து விழுந்து அபாயத்தை அதிகமாகத்தருவதில்லை. அவர்களிடத்தில் அதிக மூர்க்கமுள்ள ஒரு ஜாதிநாய் காவலின்பொருட்டு உண்டு. அவர்கள் பூமியைத்தோண்ட உபயோகப்படுத்துங்கருவி, கலையிற் செருகிய ஆடுகளின் கூரிய கொம்பாம். அவர்கள் உடையாவதும் மிருகங்களின் தோல்களே. இவ்விதவரலாறுகள் தெரியவும், பொன்னெறும்புக்கதைகளின் உண்மையை ஒரு விதமாகக் கருதற்கு இடந்தருகின்றது. மேனாட்டுப்பண்டிதர்கள் குறித்த எறும்புகள் தீபத்துதேசத்துச் சுரங்கவேலைக்காரர் ஆதல் வேண்டும். அவர்கள் கண்டதாகக்கூறும் எறும்புத்தோலுங் கொம்பும் முறையே, தீபத்தியரின் ஆடையும் தோண்டுங்கருவியுமாதல் வேண்டும். பொற்குவியலைக் காப்பதாகக் குறிக்கப்பட்ட மிருகபக்ஷி, தீபத்தியரின் நாயென்றே கருதத்தக்கது. மாரிக்காலத்தில் எறும்புகளீட்டிய பொன்னை வேனிற்காலத்தே கொள்ளை கொள்ளச் செய்யும் “டார்டை” ஜாதியார் இப்போது “டார்டிஸ்டான்” என்று வழங்குகிற இந்தியாவின் வடமேற்கு மாகாணங்களில் வசித்திருத்தல் கூடும். வடமொழியில் “பிபீலிகா” என்ற பதத்துக்குப் ‘பொன்னெறும்பு’ என்றும் ‘பொன்’ என்றும் இரண்டு பொருள்கள் உண்மையின், இவ்விரண்டையும் ஒன்றாகப் பாவித்தமையால் இவ்வித விநோத கதைகள் எழுந்தனவென்று கூறுவர். மேற்கூறிய ஊகம் எவ்வகைப் பொருத்தமுடையதென்பதை அறிவுடையோர் ஆராய வல்லர்.

ஸ்ரீவத்ஸன்.

---

# மகாபாரதச்செய்யுட் பாடாந்தரம்.

(கஉ௬-ம் பக்கத் தொடர்ச்சி.)

மேல்வருகருமமெண்ணுவெகுளியான்மிக்கவீரர்
நால்வருமெய்மனோர்களைவின்றனசிறிதுங்கேளார்
சேல்வரும்பழனநாடசெயலறிந்தெண்ணிவேத
நூல்வருமுறைசொல்லென்றானென்சிலைநூலின்மிக்கோன்.

என்னும் உ௱௭உ-ம் செய்யுளில் "வேதநூல் வருமுறை சொல்" என்பது "வேத்துநூல் வருமுறை சொல்" எனக் காணப்படுகின்றது. வேதங்களை யுணர்ந்த துரோணாசாரியர் வீடுமனை நோக்கி நீ சொல்லெனக் கூறலாலும் ஈண்டு அரசநீதிகூறு நூலிற் வருமுறையைக் கூறுவது மாபாதலாலும் "வேத்துநூல் வருமுறைசொல்" என்பதே பொருத்தமுடைத்தென்க.

---

## ஆரணியபருவம்.

### அருச்சுனன்றவநிலைச் சருக்கம்.

எனவிடைகொடுப்பமண்ணிலிணையிலாவியாதன்பாத
மனனுறவிறைஞ்சியாங்கோர்மந்திரமுறையிற்பெற்று
நனிமிகுதிதியுநாளுநல்லமோர்முகூர்த்தந்தன்னிற்
சனபதமியக்கர்காட்டத்தனஞ்சயன்சேறலுற்றான்.

என்னும் உஎ-ம் செய்யுளில் "சனபதமியக்கர் காட்ட" என்பது "தனிவழியியக்கர் காட்ட" எனக் காணப்படுகின்றது. சனபதம் - நாடு. வழி - வழி. வெள்ளிக்கிரிப்புற மெய்தித் தவஞ்செயச்செல்லு மருச்சுனனுக்கு வழி காட்டுவதே யியைபாகலால் "தனிவழி யியக்கர்காட்ட" என்பதே பொருத்தமுடைத்தென்க.

வானவர்பெருமானேவலால்வந்தவானவர்மகளிருந்தம்மா
லானனகிரீடையாவையும்புரிந்துமொருபயன்பெற்றிலரகன்றார்
கானகமுழுதும்பரிமளம்பரப்பிக்கானவண்டிமிர்தரப்புகுந்த
வேனிலுமகன்றதருக்கனுங்குடபால்வெண்டிரைவேலைவாய்வீழ்ந்
[தான்.

என்னும் சுஎ-ம் செய்யுளில் "தம்மாலானன கிரீடை" என்றது "தம்மாலான வக்கிரீடை" எனக் காணப்படுகின்றது. ஆனன கிரீடை யென்பதிற் சொற் களியைந்து பொருள்படாமையால் "ஆனவக்கிரீடை" என்பதே பொருத்த முடைத்தென்க.

ஒரேனந்தனைத்தேடவொளித்தருளுமிருபாதத்தொருவனந்தப், போரேனந்தனைத்தேடிக்கணங்களுடன்புறப்பட்டான்புனங்களெல் லாஞ், சீரேனல்விளைகிரிக்குத்தேவதையாங்குழவியையுஞ்செங்கை யேந்திப், பாரேனையுலகனைத்தும்பணிவுடனேபுகழ்ந்திடத்தன்பதி பின்வந்தாள்.

என்னும் அஎ-ம் செய்யுளில் "பணிவுடனே புகழ்ந்திடத்தன் பதிபின் வந் தாள்" என்பது "பரிவுடனேயின்றுடன் பதிபின் வந்தாள்" எனக்காணப் படுகின்றது. வந்தாள் என்பதற்கு எழுவாயின்றிக் கூறுவது சிறப்பின்மை யிற் "பரிவுடனேயின்றுடன் பதிபின் வந்தாள்" என்பதே பொருத்தமுடை த்தென்க.

மானே தருவிழியா டிருமாதேநிகரெழிலா
டேனே திகழ்மொழியாள் பொருசிலையே தருநுதலா
டானே தனைநிகர் வாள்பெயர் தருநாடகமெல்லாங்
கானே செறிதொடையா னிருகண்கண்டுகளித்தான்.

என்னும் கருக-ம் செய்யுளில் "தொடையானிருகண்கண்டுகளித்தான்" என்பது "தொடையாரிருகண் கண்டுகளித்தார்" எனக் காணப்படுகின்றது. மேற்கவியி லிந்திரனுமருச்சுனனும் நாடகம்பார்க்க ஓராசனத்திருந்தார் என க் கூறப்படுதலானும், வருங்கவியில் அருச்சுனன் விழிகளித்துருகிப் புகழ் ந்தான் எனக் கூறப்படுதலானும், ஈண்டு இருவருங்கண்டு களித்தாரெனக் கூறவேண்டுமாதலானும் "தொடையாரிருகண்கண்டு களித்தார்" என்ப தே பொருத்தமுடைத் தென்க.

---

## நிவாதகவசர் காலகேயர் வதைச்சருக்கம்.

"அற்றன குறைகளெல்லா மவயவத் தோடுமீண்டு முற்றன" என்னும் கூக-ம் செய்யுளில் "அவயவம் பொருந்தி மீண்டு முற்றன" எனக் காணப் படுகின்றது. அவயவத்தோடு மீண்டு முற்றன என்பதினும் அவயவம் பொரு ந்தி மீண்டு முற்றன் என்பதே சிறப்புடைமை காண்க.

'வென்றிகொள் வீரவாகை வீரவில் விசயகேளாய்' என்னும் கூஉ-ம் செய்யு ளில் 'வீரவாகை வீரவில் விசய' என்பது 'வீரவாகை வேகவில் விசய' எனக்

காணப்படுகின்றது. முன்னர்க்கூறிய வீரத்தைப் பின்னருங் கூறுதல் கூறியது கூறலாதலால் 'வீரவாகை வேகவில் விசய' என்பதே பொருத்த முடைத்தென்க.

தனிதமேகமன்னதேருமொன் றுதாவில்குன் றுபோற்
குனிதருங்கடுப்பின்மிக்ககொடியவில்லுமொன் றுமேற்
கனிவுறுஞ்சரக்குழாம்விசும்பினெல்லைகண்டுமோர்
மனிதன்வின்மைநன் றுநன்றெனமதித்துவஞ்சரே.

என்னும் கஙூ0-ம் செய்யுளில் 'விசும்பினெல்லை கண்டுமோர் மனிதன்' என்பது 'விசும்பினெல்லை காட்டுமோர் மனிதன்' எனக் காணப்படுகின்றது. கண்டுமோர் என்னுஞ் சொற்களியைந்து பொருட் சிறப்புக்கொள்ளாமையின் 'விசும்பினெல்லை காட்டுமோர் மனிதன்' என்பதே சிறப்புடைத் தென்க.

---

## புட்பயாத்திரைச் சருக்கம்.

அந்தமுமாதியுமற்றவருக்குஞ்
செந்தமிழ்செய்துதிரட்டினரைப்போ
லந்தரவானுமகண்டமுமொன்று
வந்தியமேனியொடுக்கினனம்மா.

என்னும் ஓர் செய்யுள் ருஎ-ம் செய்யுளாக வட்டிற்காணப்படுகின்றது.

ாயக-ம் செய்யுளில் 'மன்னுகுருகுலத்து மன்னர் மன்னன்' என்பது 'மன்னுகுருக்கள் குலத்து மன்னர் மன்னன்' எனக்காணப்படுதலால் இதுவே அசையுஞ் சந்தமுங் குறையாதிருப்பதனாற் பொருத்தமுடைத் தென்க.

மற்றவனவ்வுரை கூறமகிழ்வோடந்தண்
பொற்றருநண்பின்வழங்கிப்போகென்றருளி
வெற்றியுருத்திரசேனன்மீண்டுவந்தாங்
குற்றதுதாதைதனக்குரைத்திருந்தான்.

என்னும் கஉஙூ-ம் செய்யுளில் 'மகிழ்வோடந்தண் பொற்றரு நண்பின் வழங்கி' என்பது 'மலரோடந்தண் பொற்றரு நண்பின் வழங்கி' எனக் காணப்படுகின்றது. வனசமலர் வேண்டிவந்த வீமனுக்கு அதனைக் கொடாது பொற்றருவைக் கொடுத்தானென்றல் இயையாமையான் 'மலரோடந்தண் பொற்றரு நண்பின் வழங்கி' யென்பதே பொருத்தமுடைத்தென்க.

## மணிமான்வதைச்சருக்கம்.

அந்தரந்தரம்புகவனந்தரம்படைத்
தந்திரத்தலைவருந்தளர்ந்துசாய்ந்தன
ருந்தினகரிபரியிரதமூர்புக
முந்தினதமதுயிர்கொண்டுமுந்தினார்.

என்னும் சுஙு-ம் செய்யுளில் 'அந்தரந்தரம் புகவனந்தரம் படை' என்பது 'அந்தரனந்தரம் புகவனந்தரம்' எனக் காணப்படுகின்றது. அந்தரந்தரம் புக என்பதற்குப் பொருட்சிறப்பின்மையால், அந்தரனந்தரம் புக என்பதற்குக் கேட்டையடைந்தவனாகிய அம்மணிமான் அந்தரத்திற் செல்ல எனப் பொருடலால், 'அந்தரனந்தரம் புகவனந்தரம்' என்பதே பொருத்தமுடைத்தென்க.

---

## பழப்பொருந்து சருக்கம்.

இக்கனியெனக்குநீநல்கென்றுவில்லிறுத்துக்கொண்ட
மைக்கனிக்களவுமானும்வடிவுடைவிசயனோடு
மெய்க்கனிவுடைமைதோன்றவிளம்பினான்வீசுதென்றன்
முக்கனிநமழுஞ்சோலைமுகிறவழ்நாடன்பாவை.

என்னும் உ-ம் செய்யுளில் 'வில்லிறுத்துக்கொண்ட' என்பது 'வில்லெடுத்துக்கொண்ட' எனக் காணப்படுகின்றது. இறுத்தல் - ஒடித்தல். வில்லையொடிக்கவில்லை யாதலால் 'வில்லெடுத்துக்கொண்ட' என்பதே பொருத்தமுடைத்தென்க.

## நச்சுப்பொய்கைச்சருக்கம்.

என்றுதன்றந்தையோடியம்பத்தந்தையு
மன்றலந்தொடைமுடிமைந்தனுக்கபா
வென்றிடுமறைகளும்வில்லொடெஃகம்வே
லென்றபல்படைகளும்யாவுநல்கினான்.

என்னும் சுசு-ம் செய்யுளில் 'வில்லொடெஃகம்வேல்' என்பது "வில்லொடேவுவேல்" எனக்காணப்படுகின்றது. எஃகம் வேன்முதலிய எறியுமாயுதங்கள். வில்லுடன் பாணத்தைக்கூறுவது சிறப்பாதலால், 'வில்லொடேவுவேல்' என்பதே பொருத்தமுடைத்தென்க.

தீதறக்கானிடைச்செறிந்தவைவரும்
பேதுறத்தொடர்ந்தொருபிணைபின்போனது
மேதமுற்றிறந்ததுமிறந்துமீண்டது
மாழ்துயர்த்திரௌபதிக்கறியக்கூறினர்.

என்னும் கூகூ-ம் செய்யுளில் 'ஏதமுற்றிறந்ததுமிறந்துமீண்டதும்' என்பது 'ஏதமுற்றிறந்ததுமெழுந்துமீண்டதும்' எனக்காணப்படுகின்றது. இறந்ததுமிறந்து மீண்டதும் என்னுஞ் சொற்களியைந்து பொருடாரமையால் 'ஏதமுற்றிறந்ததுமெழுந்துமீண்டதும்' என்பதே பொருத்தமுடைத்தென்க.

## விராடபருவம்.

### மற்போர்ச்சருக்கம்.

உதைத்தனர்வீசிவன்போடுரங்கொடுகரங்களேற்றிப்
புதைத்தனர்விரல்கண்மெய்யிற்புருவமுமூக்கும்வாயிற்
சிதைத்தனர்புயங்களென்னுஞ்சிலம்புகடாக்கத்தாக்கப்
பதைத்தனரோடியோடிப்பற்றினர்மீளமீள.

என்னும் ௰க-ம் செய்யுளில் 'புருவமுமூக்கும்வாயிற்சிதைத்தனர்' என்பது 'புருவமுமூக்கும்வாயுஞ்சிதைத்தனர்' எனக்காணப்படுகின்றது. புருவமுமூக்கும்வாயிலேசிதைத்தல் கூடாமையால், 'புருவமுமூக்கும் வாயுஞ்சிதைத்தனர்' என்பதே பொருத்தமுடைத்தென்க.

### கீசகன்வதைச்சருக்கம்.

இந்திரன்னகர்ப்பாவைகொலோமடலேந்துபங்கயத்தேவிகொலோ வியற், சந்தாருந்தடவரைத்தையலோதாரணிக்குள்வருந்தனித்தெய் வமோ, முந்தராவுறைபாதலந்தன்னில்வாழ்மோகினிக்குயிலோமுரல் கின்றிடு, முந்துநீரமங்கைகொலோவெழிலோவியத்தொளியோவெ னவுன்னினன்.

என்னுமிச்செய்யுள் திரௌபதியைக்கண்ட கீசகன் ஐயமுற்றுக் கூறியதாக நான்காவது செய்யுளாயெழுதப்பட்டிருக்கிறது.

(இன்னும் வரும்.)

இங்ஙனம்,
சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

# தனிச்செய்யுட் கோவை.

(முன்றொடர்ச்சி.)

கண்ணாடி காட்டுங் களிறுஞ் சுரைப்பழத்தி
னுண்ணாடு புக்க வுறுபொருளு—மண்ணா
கனங்குறைந்த வாறென் கயவர்பாற் சென்று
தினந்தெரிந்த வாறெனவே செப்பு.

இஃது இரட்டையர்கள் கூறிய வெண்பா. தெரிந்தவாறாவது, கயவரை முன்காட்சியிற் கனமாகநினைத்துப் பின் இலேசாகத்தெரிந்தவாறாமென்க.

---

பாராத கல்வி ப்ரபந்தப் பொருளனைத்து
நேராக முன்வந்து நிற்குமே—தேராது
தேவீறு கொண்ட திருமாலை முத்தமிழ்சேர்
நாவீறனைத் துதித்த நாள்.

இது சடகோபர்மீது கூறிய வெண்பா. நாவீறன் என்றது சடகோபரை. இவர் திருவாய்மொழியருளிச்செய்த காரணத்தாலிப்பெயர் பெறுவர்.

---

பாடுவதெல் லாநம் பராங்குசனை நெஞ்சத்தாற்
றேடுவதெல் லாம்புளிக்கீழ்த் தேசிகனை—யோடிப்போய்க்
காண்பதெலா நங்கையிரு கண்மணியை யான்விரும்பிப்
பூண்பதெலா மாறனடிப் போது.

இதுவுஞ் சடகோபர்மீது கூறிய வெண்பா: நங்கை என்பது சடகோபர் தாயாகிய உடையநங்கையை.

---

விரிக்கின்ற திங்கண் முகத்தார் கலவியை விட்டுநெஞ்சந்
தரிக்கின்ற தில்லையிங் கேதுசெய் வேன்சங் கான்புரமூன்
றெரிக்கின்ற போதி லிடப்பாகந் தன்னி லிருந்துலகைப்
பரிக்கின்ற வேதக் கொழுந்தே குமரிப் பகவதியே.

இது கன்னியாகுமரிப் பகவதிமாலையிலுள்ளதென்று ஏட்டில் வரைந்திருக்கின்றது. இம்மாலை இப்போது கிடைக்கவில்லை.

தந்தி வராக மருப்பிப்பி பூகஞ் சனிவலத்தோ
ணந்து சலஞ்சல மீன்றலை கொக்கு நளினமின்னார்
கந்தரஞ் சாலி கழைகன்ன லாவின்பல் கட்செவிகா
ரிந்து வுடும்பு கராமுத்த மீனு மிருபதுமே.

இக்கவி முத்துப் பிறப்பிடங்களைக் கூறியது. இது பார்ப்பதி விலோசன நிகண்டிலுள்ளதென்று வரைந்திருக்கின்றது; இந்நிகண்டு இன்னுங் கிடைக்கவில்லை.

---

மேதிக் குலஞ்சொரி பால்கயன் மாந்தும் விரைப்பழன
மாதைப் பரமர் சடாடவி யோமணிப் பேரணியோ
வாதித் தனிவிழி யோசெங்கை யோசெங்கை யம்பினம்போ
போதுற்ற சேவடி யோவைய நீதந்த பூந்தழையே.

இக்கவி திருவாமாத்தூர்க் கோவையி லுள்ளதென்று வரைந்திருக்கின்றது; இக்கோவை இன்னுங் கிடைக்கவில்லை; இது தழை விருப்புரைத்தலாகக் கூறியிருக்கின்றது. பணி காற்றையுண்பது; விழி மதனையெரித்தது; செங்கை அபயங்கொடுப்பது; செங்கையம்பினம்பு-கையிற்கொண்ட பாணமாகிய திருமாலினுடையபாணம்; அது இராமாவதாரத்திலே கடல்வற்றும்படி விடுத்த அக்கினியாஸ்திரம்; சேவடி பேரின்பமாயுள்ளது; ஆதலால் எங்களுடைய தலைவிக்கு நீ கொடுத்த தழையானது தென்றலால் வருந்துன்பமும், மதனால்வருந்துன்பமும், கடலால்வருந்துன்பமும் நீக்கிப் பயந்தவிர்த்துப்பேரின்பமாயிருந்தது என்பது விளங்கப் பாங்கி கூறினாளென்க.

---

ஆவியெங் கேயென்னி லாவியெங் கேயென்னு மானகஞ்சத்
தேவியெங் கேயென்னிற் றேவியெங் கேயென்னுஞ் செல்விருந்தைக்
கூவியங் கேயழைக் குங்கரத் தான்கண்டன் கோழிவெற்பிற்
பாவியிங் கேகொண்ட மால்கொண்ட தோவிப் பனிவரையே.

இக்கவி கண்டன்கோவையிலுள்ளதென்று வரைந்திருக்கின்றது; இக்கோவை இன்னுங்கிடைக்கவில்லை. இது வறுங்களநாடி மறுகிய தலைவன் கூற்றாகவமையும். வறுங்களம் - ஈண்டுத் தலைவியில்லாத வெற்றிடம்.

வையம்பெறினும் பொய்யுரைக்க மாட்டார் தொண்டை நாட்டாரென்
றையன் களந்தைப் புகழேந்தி யுரைத்தா னவர்க ணீர்தாமோ
வெய்யுஞ் சிலைக்கை மதவேளே யெளியோர்ப் புரக்கு மெங்கோவே
யையந் தவிர்த்த பெருமாளே யாவோ மடியோ மாவோமே.

இக்கவி, ஓர் காலத்திற் றொண்டைநாட்டு வேளாளர்கள் சோழ ராசனைக் கண்டபோது, முன்னிரண்டடியும் சோழராசன் கூறியதாக வும் பின்னிரண்டடியும் வேளாளர்கள் கூறியதாகவும் வரைந்திருக் கின்றது.

---

வாழையிலை தெங்கு வளர்பலா மாப்புன்னை
தாழையிலை யூனையிலை தானுமே—வாழையிலை
தண்டுரித்தா லாகாது தார்வேந்தர்க் கானாலும்
பண்டுரைத்த நூலின் பயன்.

இவ்வெண்பா உண்ணுதற்காமிலைக ளிவையெனக் கூறியது.

சோணாட் டொருநூற்றுத் தொண்ணூற்று நாலு தளுவிலொன்று
மீணாட் டிரண்டு மலைநாட்டி லொன்றுகொங் கேழுவையை
வாணாட்டி லீரேழ் மகதத்தை யைந்து வடக்கிலைந்து
நாணாட் டியதொண்டை நன்னாட்டி லாறைந்து நன்னகரே.

இக்கவி ஒவ்வொரு நாட்டிலுமுள்ள திருப்பாடற்பெற்ற சிவஸ் தலத்தொகையினைக்கூறியது. இதனுள் மகதம் என்பது சோணாட் டுக்கும் தொண்டைநாட்டுக்கும் இடையிலுள்ள தேசமென்பர்.

(இன்னும் வரும்.)

இங்ஙனம்,

சேற்றூர்ச் சம்ஸ்தான வித்துவான்

இராமசாமிக்கவிராயர்.

---

உ

திருச்சிற்றம்பலம்.

# மதுரைத் தமிழ்ச்சங்கம்.

## இச்சங்கத்தார் 1906௵ விசுவாவசு௵ தைமீ 10, 11, 12-தேதிகளில் நடாத்திய தனித்தமிழ்ப் பரீக்ஷைகளிற்றேறிப் பரிசும் யோக்கியதா பத்திரமும் பெறும் மாணாக்கர்களின் விவரம்.

---

### பாலபண்டித பரீக்ஷை.

#### 1. வகுப்பு.

| | | | |
|---|---|---|---|
| 1 | 23. | மு. வெங்கடசாமி நாட்டார், நடுக்காவேரி, தஞ்சை ஜில்லா. | ரூ 70 பெறத்தக்க தங்கப் பதக்கப்பரிசு. |

---

### பிரவேசபண்டித பரீக்ஷை.

#### I. வகுப்பு.

| | | | |
|---|---|---|---|
| 1. | 12. | வி. திருஞானசம்பந்தன் சேர்வை, செந்தமிழ்க் கலாசாலை, மதுரை. | ரூ 50 பெறத்தக்க தங்கப்பதக்கம் (1-வது பரிசு) |
| 2. | 4. | அ. கந்தசாமி பிள்ளை, நல்லிப்பாளையம், நாமக்கல்தாலூகா, சேலம். | ரூ 30 (2-வது பரிசு.) |
| 3. | 9. | சு. ஸ்ரீநிவாஸையங்கார், செந்தமிழ்க் கலாசாலை, மதுரை. | ரூ 20 (3-வது பரிசு.) |

#### II-வகுப்பு.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | 7 | க. வெ. சங்கரநாராயணசர்மா, செந்தமிழ்க் கலாசாலை, மதுரை. | | யோக்கியதாபத்திர மட்டும். |
| 2. | 11. | ப. முத்துச்சாமிக்கவுண்டர் | ஷை | ,, |
| 3. | 8. | மு. கிருஷ்ணசர்மா | ஷை | ,, |
| 4. | 3. | சத்தியவாகீசுவரையர் | ஷை | ,, |
| 5. | 13, | தி. ஸ்ரீநிவாஸையங்கார் | ஷை | ,, |

| | | | |
|---|---|---|---|
| 6. | 39. | V. சேஷாசலநாயுடு, காங்கயம், கோயம் புத்தூர் ஜில்லா. | யோக்கியதாபத்திர மட்டும். |
| 7. | 35. | சி. மாணிக்கமுதலியார், நாய்க்கம்பட்டி, சேலம் ஜில்லா. | ,, |
| 8. | 38. | அ. முத்துச்சாமி செட்டி, உடுமலைப்பேட்டை, கோயம்புத்தூர் ஜில்லா. | ,, |
| 9. | 34. | பா. ஆ. குமரகுருபரசுவாமி முதலியார், வாழப் பாடி போஸ்ட், சேலம் ஜில்லா. | ,, |
| 10. | 20. | கு. இரேவணசித்தையர், வெண்ணெய்மங்கலம், பூதலூர் போஸ்ட், தஞ்சை ஜில்லா | ,, |
| 11. | 6. | மன்னார்குடி.-S. ஸ்ரீநிவாஸையங்கார், கண்டனூர், மதுரை ஜில்லா. | ,, |
| 12. | 2. | கோ. செல்லையங்கார், எழுத்தாளர், தமிழ்ச்சங்கம், மதுரை. | ,, |

23—3—06,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

இங்ஙனம்,
பொ. பாண்டித்துரை,
அக்கிராசனாதிபதி.

### இனியுயிரளபெடை வருமாறு.

" அசைச்சீர் நான்குரி முதற்சீ ரெட்டு, நந்தை யெனப்பதின் மூன்று மொழிந்தது, நேரேழ் நிரையே ழாகிய சீராற், பெற்ற வடிநூற் றறுபத் தெட்டனுள், மூவேழ் வழுவு நீக்கிய பின்ன, ரகவல் பெற்ற வளபெடைத் தொடைதா, நூற்றொரு நாற்பத் தேழென நுவல்ப" " கூறிய பதின்மூன் றொழித்த பின்னர், நேரொன் பானு நிரையொன் பானு, மாகிய சீராற் பெற்ற வடிதா, நூற்றோ டொருபத் தேழா மவற்றுள், வழுப்பதி னொன்று நீக்கி வெள்ளைக், களபெடை நூற்றா றாகு மென்ப." " உரிமுதற் சீரெட் டொழிந்த பின்னர், நேர்நிரை யீரொண் சீராற் றுள்ளற், களபெடை யெண்பஃ தாகு மென்ப." "மூவகை யாற்பெறு முயிரள பெடைதா, முந்நூற்று முப்பத்து மூன்றென மொழிப." ௩௱௩௰௩.

### இனி யொற்றளபெடை வருமாறு.

"தேமாப் புளிமா வெனுமிரண் டற்கும், வழுநில மூன்று களைய வகவ ற், கொற்றள பெடைதா மிருபத் தொன்றே." " மாசெல்வாய் தேமா வழு விரண்டு களைந்து, புளிமாப் புலிசெல்வாய் கூட்டநான் கானும், வெள்ளைக் கொற்றள பிருபத்து நான்கே" " முதற்பா விரண்டிற் கொற்றள பெடை தா, மைந்துதலை யிட்டநா லொருபஃ தாம்" ௪௰௫. ஆகவிரண்டு அள பெடையுங் கூட்ட ௩௱௭௰௮. இனி, யொற்றளபெடை துள்ளலோசை யைத் தள்ளி நிற்றலாற் கலிக்கு வாராதென்றுணர்க. " எட்டுத் தொடையா னியன்ற தொகைதா, மொருநூற் றெழுபத் திரண்டுதலை யிட்ட, வீரா யிர மே யாகு மென்ப"

### இனி யசையந்தாதி வருமாறு.

தேமா முதனின்றுறழ்ந்த வடிக்கு, நான்காஞ் சீருந் தேமாவெனநி ன்று மேல்வருமடியோ டந்தாதிக்க வேண்டுமென்றுணர்க. அது, "தே மா வண்டு வண்டு காமர்" எனநின்று மாவென மதித்தென வருமென்று கொள்க. இஃது ஒழிந்தவடிகட்கும் மேல்வருஞ் சீரந்தாதிக்குமென்றுகொ ள்க. இது, முதற்பாவிரண்டற்குமே கொள்க. அங்ஙனம் கொள்ளுங்காற் போது பூவுக்குப் போதுகளெனவும் விறகுதீக்கு விரிகாரெனவுங்கொள்க. ஒழிந்தனவற்றிற்கு மிவ்வாறே கூறவேண்டுவன கூறிக்கொள்க. " தேமா வாறு ஞாயிறு புளிமாப், போதுபூ வேழு பாதிரி பூமருது, நீடு கொடியெட் டுக்கா ருருமு, நாணுத்தளை யொன்பது முதலா வந்த, வசையந் தாதி யொ ரோவொன் றொன்ப, தொன்ப தாக வகவல் பெறுந்தொகை, நாலொரு பஃது மெட்டு மாகும்" ௪௮. இதற்குமேல் வருவனவற்றிற்கு " முதலா" வென்பதனை யெண்களோடுகூட்டிப் பொருளுரைக்க. " புளிமா வொன்

பான் வலியது விறகுதீப், பத்துக் கணவிரி யுராறுபுலி மழகளி, நீரா றுநரை யுருமு விரவுகொடி, யீரேழ் முதலா வந்தா தியொரோ, வொன்றே ழாக வ கவல் பெறுந்தொகை, யையொரு பஃது மாறு மாகும்'' ருசு. ஆக, ௱சு. 'போதுபூப் போரே றிருநான்கு மேவுசீர், நன்ஞணு மாசெல்வா யீரைந்து முதலா, வொரோவொன் றைந்து மாவரு வாய்பன், னிரண்டு முதலாக மூ ன்று நிலமாக, வெள்ளை பெற்ற வசையந் தாதி, நாலைந் ததனொ டெட்டு மா கும்'' உஅ. ''விறகுதீக் கடியா றொன்பான் பெருநா, ணுருமுத்தீப் புலி செல்வாய் பதினொன்று முதலா, வொரோவொன்று நான்காக வெள்ளை பெ ற்ற, வசையந் தாதி நாலைந் தாகும்'' உ௯. ஆக, சஅ. இனிக், கலிக்கசையந் தாதி வருங்காற் றனக்குரிய இருபத்துநான்குசீரு முறழ்ந்தவடிகளுக்கு வெ ண்சீர் நான்கு மீற்றின்கண்வருவதல்ல தொழிந்தவியற்சீர் பதினாறு முரிச் சீர் நான்கு மீற்றின்கண் வந்த அந்தாதித்தொடை கொள்ளாவென்றுணர்க. ''நேரீ ராறு நிரையீ ராறு, மாகிய சீர்கட் கொரோவொன் றைந்தாத், துள் ளல் பெற்ற வசையந் தாதி, நூற்றோ டிருபஃ தாகு மென்ப.'' ௱உ௰.

''மூவகைப் பாவிற்கு மசையந் தாதி, யிருநூற் றெழுபத் திரண்டா கும்மே.'' உ௱எ௰உ.

இனிச் சீரந்தாதி வருமாறு.

''வண்டு நுந்தை நான்கு தேமா, மின்னிரு மூன்றாறு முதலா வொரோ வொன், றவ்வா றாக வகவல் பெற்ற, சீரந் தாதியிருபத்து நான்கே'' உசு. ''வலியது விறகுதீக் கடியா றீரைந்து, கணவிரி யுராறுபுலி பெருநாணு வுருமு த்தீ, மழகளி நீராறும் விரவுகொடி நரையுருமு, வீரேழ் முதலா வொரோவொ ன் றேழாக, வகவல் பெற்ற சீரந் தாதி, யேழொரு பஃதே யாகு மென்ப'' எ௰, ஆக ௯சு. ''ஞாயிறு போதுபூப் போரே றெட்டுப், பாதிரி மேவுசீர் நன் ஞணுப் பூமருது, பத்து முதலாக வொரோவொன் றையைந், தாகியுங் காரு ருமு வீராறு முதலா, மூன்று மிரவு புளிமாப் பத்து, முதனான்கும் வரக்கெ ட்டு முதலா நான்கு, மாகியும் வெள்ளை பெற்றசீ ரந்தாதி, யையொரு பஃ தாமெட்டு மாகும்,'' ருஅ. ''மாசெல் வாயீ ரேழ்புலி செல்வாய், மாவரு வா யீரெட்டுப் புலிவரு, வாயீ ரொன்பது முதல வந்து, மும்மூன் றாகுஞ் சீரந் தாதி, துள்ளற் சீரா றாகு மென்ப'' இதற்கு வந்த சீர் வருதல் கொள்க. ௰உ.

''மூவகைப் பாவிற்குஞ் சீரந் தாதி, நூற்றோ டறுபத்து நான்கென நு வல்ப, நானூற்று முப்பத் தாறீ ரந்தாதி'' ஆகவிரண்டந்தாதியும் சா௱ங௰சு.

இனி யெழுத்துவிட்டிசையும் குறிப்புவிட்டிசையும் வருமாறு :—''தே மா வைந்து ஞாயிறு போரேறு, நன்ஞணுப் பாதிரி பூமரு தேழுகா, ருருமெ

ட்டு முதலா வந்தவை யொரோவொன், றைந்தா வகவல் பெற்ற விட்டிசை தா, மேலொரு பஃதே யாகு மென்ப' எ௰. "ஞாயிறு போரே திருநான்கு முதலேழ், பாதிரி தேமா நன்ஞணுப் பூமருது, மாசெல்வா யொன்பான் முதலா வாறு, காருருமு மாவருவாய் பத்துமுத லேந்தா, வெள்ளைக்கு வந்த விட்டிசை தாமே, யையொரு பஃது நான்கு மாகும்" ௱௪. "ஞாயிறு போரேறு பதின்மூன்று நன்ஞணுப், பாதிரி பூமருது மாசெல்வா யீரேழ், காருருமு மாவருவாய் மூவைந்து முதலா, வந்தவை யொரோவொன் றையைந்தாகத், துள்ளல் பெற்ற விட்டிசை தாமே, நாலொரு பஃதே யாகு மென்ப." ௪௦.

"மூவகைப் பாவிற்கு மெழுத்து விட்டிசை, நூற்றோ டறுபத்து நான்கே பின்னர்க், குறிப்பு விட்டிசையு மவ்வா றுகு, மிருதொகை முந்நூற் றிருபத் தெட்டே" ஆகவிருவகை விட்டிசையும் ௩௱உ௰அ.

"மோனை முதலா விட்டிசை யீறு, வீரடித் தொடைகொளு மிருபத் தைந்தின், றொகைநிலை பதினோ ராயிரத் திருநூற், றைம்பத் தாறெனவ றைந்தனர் புலவர்" ஆகவீரடித்தொடை யிருபத்தைந்தனுலும் பெற்றதொகை ௰௧௲உ௱௫௰௬.

இனி, யோரடித்தொடை கொள்ளுங்கால் அவையும் பின்வருமடியொடு தளைவழுவப்படாமற் கோடும்.

## அவற்றுட் பொழிப்பெதுகை வருமாறு.

"வண்டு நான்கு மின்னுத் தேமா, வைந்து ஞாயிறு போதுபூப் போரே, றாறு பாதிரி மேவுசீர் நன்ஞணுப், பூமருது நீடுகொடி யேழுகா ருருமு, நாணுத்தளை யெட்டு முதலா வந்தவை, யொரோவொன் றெவ்வேழ் நிலம் பெற வகவற்குத், தொக்க பொழிப்பெதுகை தொண்ணூற் றொன்றே, வரகிரு நான்கரவு புளிமா வொன்பான், வலியது விறகுதீக் கடியாறு பத்துக், கணவிரி யுருமுத்தீப் பெருநாணு வுரறுபுலி, மழகளிறு பதினொன்று நரையுருமு விரவுகொடி, யீராறு முதலா வந்தவை யொரோவொன், றொன்பது நிலம்பெற வகவற் பொழிப்பெதுகை, நூற்றோ டொருபத் தேழென நுவல்ப." இனி வருக்கப் பொழிப்பெதுகை வருமாறு :— "வண்டைந்து மின்னுத் தேமா வாறு, ஞாயிறு போதுபூப் போரே றேழு, பாதிரி நன்ஞணுப் பூமருது நீடுகொடி, மேவுசீ ரெட்டுக் காருருமு நாணுத், தளையொன்பான் முதலா வொரோவொன் றாறு, வகவல் பெற்ற பொழிப்பெது கைத்தொடை, யெழுபத் தெட்டே யாகு மென்ப" இனி நிரையாதி வருக்கப்பொழிப்பெதுகைக்கு முன்னர் நிரையாதிப் பொழிப்பெதுகைக்குக் கூறினவுரைச் சூத்திரத்தைக்கூறிக்கொண்டு அதன்றொகையே இதற்குங்கொள்க.

நேரீதி வல்லினப்பொழிப்பெதுகை வருமாறு :— "வண்டு நான்கு தேமா வைந்து, ஞாயிறு போதுபூப் போரே ருறு, நன்னுணுப் பாதிரி பூமருது நீடு கொடி, யேழு காருருமு வெட்டுமுதலா, வந்தவை யொரோவொன் றெவ்வேழ் நிலம்பெற, வகவல் பெறும்வல் லினப்பொழிப் பெதுகை, யேழொரு பஃதே யெய்து மென்ப" இனி நேராதி மெல்லினப்பொழிப்பெதுகைக்கு முன்னர் நேராதிப்பொழிப்பெதுகைக்குக் கூறிய உரைச்சூத்திரத்தைக் கூறிக் கொண்டு அதன்றொகையே யிதற்குங்கொள்க.

"நால்வகை யகவற் பொழிப்புத் தொகைதா, மைஞ்ஞூற் றெழுபத் தெட்டா கும்மே" ஆக ருாஎ௰அ.

இனி வெள்ளைக்குப் பொழிப்பெதுகை வருமாறு :— "வண்டு ஞாயிறு போதுபூப் போரே, றெட்டு முதலா வேழுந் தேமா, மின்னுப் பாதிரி மேவுசீர் நன்னுணுப், பூமருது மாசெல்வா யொன்பான் முதலாறுங், காருருமு மாவருவாய் பத்துமுத லைந்து, மாக வெள்ளைக்கு வந்தபொழிப் பெதுகை, யெண்ணொரு பஃதே யெய்து மென்ப" "வாகு வலியது கடியாறு விறகுதீ, யெட்டுக் கணவிரி பெருநாணுப் புலிசெல்வாய், மழகளி றுருமுத்தீ புளிமா விவை யொன்பது, நரையுரு முப்புலி வருவாய் பத்து, முதலா வந்தவை யெரோவொன் றைந்தா, வெள்ளை பெற்ற பொழிப்பெது கைத்தொடை, யாறொரு பஃது மைந்து மாகும்"

"இனி வருக்கப்பொழிப்பு வருமாறு :—" வண்டு ஞாயிறு போதுபூப் போரேறு, பாதிரி மாசெல்வா யொன்பான் முதலாறு, மின்னு நன்னுணுத் தேமா மேவுசீர், பூமருது பத்து முதலா வைந்து, மாவருவாய் காருருமுப் பதினொன்று முதலா, நான்கு மாக வந்த வாற்றான், வெள்ளை பெற்ற வருக்கப் பொழிப்பெதுகை, யாறொரு பஃது மொன்பது மாகும்" இனி நிரையாதி வருக்கப் பொழிப்பிற்கு முன்னர் நிரையாதிப் பொழிப்பெதுகைக்குக் கூறிய வுரைச்சூத்திரத்தைக் கூறி யதன்றொகையே இதற்குங்கொள்க.

இனி வல்லினப் பொழிப்பெதுகை வருமாறு ;— "வண்டு ஞாயிறு போதுபூப் போரே, றெட்டு முதலா வொரோவொன் றேழு, மாசெல் வாய் பூ மருது தேமாப், பாதிரி நன்னுணு வொன்பான் முதலாறுங், காருருமு மாவருவாய் பத்துமுத லைந்து, மாக வந்த வாற்றான் வெள்ளை, பெற்ற வல்லினப் பொழிப்பெது கைதா, மாறொரு பஃதோ டெட்டு மாகும்."

இனி மெல்லினப் பொழிப்பெதுகைக்கு முன்னர் நேராதிப்பொழிப் பெதுகைக்குக் கூறிய வுரைச்சூத்திரத்தையே கூறி அதன்றொகையே இதற்குக் கொள்க. "நால்வகை வெள்ளைப் பொழிப்பெது கைதா, நானூற்று நாற்பத் தொன்றென மொழிப" ஆக சாசமக.

வாறு நிறுத்திய தோர் புட்டியின்கீழ் ஓர் அங்குலமுழுதும் கலப்பற்ற மழைநீர்த்துளிகள் நிரம்புமாயின் பெய்த மழை ஓர்அங்குல மழையென் றுகூறுவர். நிரம்பியதோர் அங்குலம், அகன்ற பூமியின்கண் எவ்வாறு மழையினளவைக்காட்டுமென்ற கேள்விக்கு, அடியில் வருமாறு விடைதருவோம்.

நாமிருக்கு மிப்பூமியானது எங்கு மொரேமட்டத்திலில்லையென்பதாய் முன்னமேயே யறிந்தோம். மேலும் பூமியின்கண் மழைநீர் பட்ட மாத்திரத்தே பூமிக்குள் சற்று நீர் ஊறியதன்பின் மேல் நீர் ஒன்றுசேர்ந்து வெகு சிறிய அருவிகளாக வோடுவதுமன்றி அவ்வவ்விடங்களில் பூமியானது பள்ளமாயிருந்தால் நீர் தங்கவும் பார்த்து வருகிறோம். ஆதலால் பூமியெங்கும் ஒரேமட்டமாயிருப்பின் நீர்மட்டமு மெங்குமொன்றாக விருப்பது மன்றி அவ்வாறு தங்கும்நீர் ஆழத்திலே எங்கும் ஒரேயளவைக்காட்டவேண்டுமென்று மெளிதிலறியலாகும். நாம் வசிக்கும் இப்பூமியின் ஓர் பாங்கிற் பூமிமட்ட மொரேதன்மைத்தாயும் அவ்விடத்தில் மழைபெய்வதாயுங் கொள்வோம். அவ்விடத்திற் பெய்யும் மழைநீர் பக்கத்திற் செல்லாமற் றங்குமாயின், மட்டத்திலுயர்ந்து வரவேண்டும். எனெனில் ஓர் பாத்திரத்தில் நீரை வார்க்க வார்க்க நீர் மட்டமுயர்ந்து வருகிறது. அவ்விதம் பெய்த மழை நின்றக்கால் நாம் நீரின்மேன்மட்டத்தினின்று பூமியின்மட்டம் வரையில் அளப்போமாஞல், அவ்வளவு, மழைநீரின் ஆழத்தைக் காட்டத்தக்கதென்று கருதவல்லோம். அதுபோலவே அடிப்பாகத்தை சமமட்டமாகக்கொண்டதோர் கண்ணுடிப்புட்டியைப் பூமியினின்றுகிலுமல்லது மரஞ்செடிகளினின்றுகிலும் நீர்த்துளிகள் சிந்தப் பெருததோர் உயர்ந்தவிடத்தில் வைத்தால் அதனுள் விழும் நீர்த்துளிகள் ஒன்று சேர்ந்து முன்சொல்லி வந்ததற்கொப்பப் பூமியின் சமமட்டத்தின்மேற் சேர்ந்து வரவல்ல நீரின்ஆழத்தைக் காட்டவல்லதேயல்லது, புட்டியானது உயர்வுபெற்றதோரிடத்திற் றங்குவதால் அதனுள் விழக்கூடிய நீரின் ஆழம் பூமியின்கண்ணுள்ள நீரின் ஆழம் போலாகாதென்று சொல்ல இடங்கொடாது. ஆதலால் புட்டிக்குள்விழும் நீரின் தொகை 2-அங்குலமாஞல் பூமியின் மேல் பெய்யப்பெற்ற மழை 2-அங்குல மென்றே நினைக்கலாகும். ஆதலாற்றுன் மழையினளவை அங்குலங்களாகச்சொல்லி வருவது வழக்கம்.

சாதாரணமாய் மழையளக்குங் கருவியாக உபயோகித்து வரும் பொருள் ஓர் புட்டியும் அதன் வாயின்மேலிடத்துள்ளதோர் அகன்றவாயையுடைய குழாயுமாம். இவைகளைச் சாக்கிரதையின் பொருட்டு ஓர் நீண்ட தாம்பிரக்கிண்ணத்தில் வைத்து பூமியினின்று சுமார் 1-அடி உயரமுள்ள விடத்தில் நேராக நிறுத்துவார்கள். நாள்தோறுந் தவருமல் மழையினளவைப் பரீக்ஷி

க்கும் வண்ணம் ஒரே பொழுதில் புட்டிநீரை வெளிப்படுத்திப் பார்ப்பது வழக்கம். இன்று காலை 8-மணிக்கு எடுத்தால் மறுநாட் காலை அதே 8-மணிக்குத்தான் அக்கருவியை யெடுத்துப் பார்த்துச்சொல்லவேண்டும். இவ்வாறு தினப்படி மழையினளவைத்தேர்ந்து சொல்லுவதுமன்றி மாதவாரியிலும் வருஷவாரியிலும் சராசரியளவையு மெடுத்துச் சொல்லத்தகும். தினப்படி பெய்யவல்ல மழையானது காலத்திற்கேற்ற அளவில் மாறு மாறுலும் மொத்தமாக ஒரு மாதத்திற்பெய்த மழையினளவிவ்வளவென்றும், ஆதலால் தினப்படி சராசரியில் (அதாவது ஏற்றத்தாழ்வு நீக்கிச் சொல்லுங்கால்) பெய்தமழை இவ்வளவென்றும் நமது அநுகூலத்தின் பொருட்டும் காரியத்தின் பொருட்டும் தக்க உத்தேசத்துடன் சொல்லி வருவது மிக்க உபயோகமானதென்று தெளியவல்லோம். இவ்வாறே வருஷாந்தர எண்ணிக்கையையுங்கொண்டு பரிசோதித்து அவ்வவ்விடத்தின் வர்த்தமானத்தைத்தெரிந்துகொள்வது மிக்க பயனைத் தருவதோர் தொழிலாகுமே யல்லது பயனற்றதொழிலாகாதென்பது வெளிப்படையாயுள்ளது.

## மின்னலு மிடியும். (Lightning and Thunder.)

கோடைக்காலத்தில் கருநிறம்பொருந்திய மேகமானது திரண்டு பெருங்குவியலாய் அடிவானத்தை விட்டுமேலெழும்பும் பொழுது வானத்தின்கண் வெகு பளபளப்புடன் சற்று நேரம்வரை தோன்றும் ஒளியை மின்னலென்று கூறுகிறோம். மற்றுங் கார்காலத்திலும் கூடாரம் போட்டது போல் மேகமானது வானத்தை யளாவியிருக்க ஒவ்வோர் காலத்தில் திடீரென்று மின்னலொளி தோன்றி அதன் பின் பயங்கரமான ஒலியும் ஓர் வகை அதிர்ச்சியுங் கிளம்பப் பார்த்திருக்கிறோம். ஆதலால் **மின்னல்,** அதன்பின் காதுக்குப் புலப்படவல்ல ஒலி அதாவது **இடி,** மற்றும் அதனாலுண்டாகும் **அதிர்ச்சி** யாகிய இவைகளை ஒருவாறு தேர்ந்தறிய முயல்வோமாக.

கருங்கற்றுண்டுகளைப் பெற்ற பாதைகளில் வண்டியானது வேகமாயோடும் போது இராக்காலத்தில் கல்லுடன் வண்டிச்சக்கரம் வேகமாயுராய்ந்தால் தீப்பொறி கிளம்பப் பார்க்கிறோம். அவ்விதமே குதிரை வண்டியை யிழுத்துக்கொண்டு வேகமாயோடும் போதும் குதிரையின் காலடியில் அடித்துள்ள இருப்புலாடமானது கல்லுடன் உராச, அதனின்று நெருப்புப் பொறிமேலெழுகிறது. கத்தியைச் சாணைபிடிக்குங்காலத்திலும் தீப்பொறி பறக்கக் காணலாகும். மேலும் நமது கையின் ஓர் விரலை மற்றொரு கையின் மேல் வைத்து விரைவாகத் தேய்ப்பின் சூடுண்டாக உணர்கிறோம். இவ்வாறு பொருள்கள் ஒன்றுடன் ஒன்று தாக்கினுல் தாக்குதலின் வேகத்

திற் கேற்ப உஷ்ணமுண்டா மென்பது தெளிவாய்ப் புலப்படுகிறது. ஆதலால்நமது பூமியைச்சுற்றியுள்ள காற்றானது அதன் அணுக்களாலானதா ம்மேலும் காற்றானதுவீசுங்கால், காற்றணுக்கள் அசைவுபெற்று ஒன்றுடன் மற்றொன்றாகத் தாக்கிச் செல்லவேண்டுவதாதலாலும் எப்பொழுதும் காற் றில் சற்றுத் தீக்கு ஆதாரமாகியதோர் வேகமிருக்கவேண்டுமென்று அனு மானிக்கத்தக்கதாயுள்ளது. இவ்வகையான தீயின் ஆதாரத்தை இனி மின்சார மென்று (Electricity) சொல்லிவருவோம். ஏனெனில் மின் என்றால் ஒளி, சாரம் என்றால் சத்து. ஆகையால் மின்சாரமானது ஒளியுண்டாவதற்குரிய சத்து என்று பொருள் படும். அதாவது தீக்கு ஆதா மாகிய தோர் வேகமென்று கொள்ளத்தகும். இத்தகையமின்சாரமாகிய தோர் வேகத்தினால் ஒரே காலத்தில் பலவிளக்குகளில் ஒளி யெழும்ப அமைக்கிறார்கள். மற்றும்மின்சாரத்தைஉண்டுபண்ணி அதனால் பருத்த வைத்தியசாலைகளில் நோயாளிகளுக்கு ஆரோக்கியத்தைக்கொடுக்கப் பங்காக் களினால் தூயகாற்றை வீசி வருவர். ஓடும் வண்டிக்கு வேகத்தைக் கொடு க்கவல்லதோர் காரணம், சிறரும் கண்ணுக்குப் புலப்படாத டிராம்வண்டி (Tram cart) யோடுவதற்குக்கருவியான மின்சாரந்தான். மின்சாரவேகத்தி னால் இன்னும் பற்பல உபயோகமான செயல்களை செய்து வருகின்றனர். மின்சாரமென்பது ஓர் வேகமென்று படித்தோம். ஆதலால் வேகத்துடன் கூடிய எல்லாப்பொருள்களினாலும் மின்சாரம் சற்று வெளிப்படுமென்று விளங்குவதாயுள்ளது. இவ்விதம் அணுக்களாலாகிய பொருள்கள் பலவாறு வேகத்துடனசையுங்கால், அவ்வப்பொருளுக்கும் வேகத்துக்குந்தக்கபடி மின்சாரமுண்டாகு மியல்புடைத்து.

மின்சாரத்தில் இரண்டுவித முண்டு. ஒவ்வொருவிதத்தையுங் கூடிய வரையில் சரிவரத் தெளிந்தபிறகு அதற்குப் பெயர் கொடுத்துக்கூறுவோம். இயற்கையாக நமக்குண்டாகிய கைகள் இரண்டு. இவ்விரண்டு கைகளை யும் எதிர்க்கெதிராக வேகத்துடன் நெருங்கச் செய்யின் ஓர் உள்ளங்கை யானது மற்றோருள்ளங்கையுடன் தாக்கவல்லதேயாம். அவ்விதந் தா க்குங்கால் கைகள் அசைவற்று நிற்பதுமின்றி ஒலியையு முண்டாக்குகின் றன. வெற்றுக்கை யொன்றை மற்றோர்கையிற் படாமலிருக்க வீசினால் சத்தம் சிறிதுங் கிளம்புவதில்லை. மற்றோர் கையின்மேற் பட்டவுடனே சத்தத்தை யுண்டுபண்ணவல்லது. ஆதலால் காதிற்குப் புலப்படக்கூடிய சத்தமொன்றை யுண்டாக்குவதற்குப் பொருள்கள், இரண்டிற்குக் குறை வுபடாமலிருக்க வேண்டுமென்று புலப்படுகிறதல்லவா? இவ்விதமே கண் ணுக்குப் புலப்படுவதாகிய ஒளியை யுண்டாக்கக் குறைந்தது கந்தகமும் (Sulpher) பொக்கினியும் (Phosphorus) முனையில் தடவப்பெற்ற குச்சி

ஒருபொருளாகவும், அக்குச்சிகள் பலவற்றை வைத்துள்ள சிறுபெட்டியின் கறகறத்த விடம் மற்றொருபொருளாகவும் வேண்டுகிறோம். ஓர் நீண்ட பிரம்பைக் கையிலெடுத்துவீசுங்கால், பிரம்பானது வேகத்துடன் சுற்றுப் பக்கத்துள்ள காற்றின்மேல் தாக்க, ஓர்வித தொனியுண்டாகின்றது. இது காரணம்பற்றியே மின்னலொளிக்கும், இடிக்கும், அதனாலா மதிர்ச்சிக்குங் காரணம் இரண்டுவகை வேகங்கள் கலக்கவேண்டுமென்று விளங்குவதா யுள்ளது. அவ்வேகங்கள் யாவை? அவ்வேகங்களினாலுண்டாகும் மின்சார த்தின்றன்மை யாது? இத்தகைய கேள்விகளைப் பரிசோதித்துப் பார்த்தல் மிக்கபயனைத்தருவதாகும். ஓர் பந்தைக் கையிற்கொண்டு வெளியே எறிந் தால் அஃதோடுகின்றது. அவ்வேகம் பந்தின் ஓட்டமாகியவேகமாம். ஓடும்ப ந்தை ஓடவொட்டாமல் தடுப்பதும் ஓர் வேகந்தான். சுவர் ஒன்றின்மேல் பந்தை வீசினால் பந்தானது அதன் மேற்பட்டுத்திரும்புகின்றது. அதற்குக் காரணமென்னவெனில், நிலைபெற்ற சுவரானது அசையாவிட்டாலும் பந் தின் ஓட்டத்தாலாகும் வேகத்தைத்தாங்கித் தன்னை நீங்கும்படி பந்தைத்திரு ப்பவல்ல வேகத்தையுடையதென்று கருதுகிறோம். அத்தகைய வேகத்தை த் தங்குவேகமென்று சொல்வது சரியேயாகும். அவ்விதமே ஓர்வித மின் சாரம் மற்றோர்வித மின்சாரத்தை யணுகித்தாக்குங்கால், ஒளியும் ஓசையு முண்டாய்வருகின்றன. நமதுபுலனுக்குத் தோன்றாத தனிமின்சாரங்கள் ஒ ன்றுசேரும்போது கண்ணுக்கு ஒளியாகவும் காதுக்குச் சத்தமாகவும் மாறி வெளியாகின்றன. ஒருவன் சம்பாதித்த பணத்தை அவனது வரவாகவும் அப்பணத்தை முழுதும் செலவுசெய்தபின் அவனது செலவாகவும் கருதி வரவும்செலவும் ஓரளவாகவிருக்க எவ்விதமிரண்டும் நீங்கி சம்பாதித்தவ னும் செலவு செய்தவனுமாகிய அவன் தனாணங்களின்றி முன்போல வேயிருத்தல் கூடுமோ அவ்விதமே, அவ்வப்பொருளின் குணவிசேஷணங் களினாலாகும் வேகத்திற்கொத்த மின்சாரத்தை மேற்கண்டபடி வரவாக வும் செலவாகவும் பகுத்திட்டு வரவும் செலவும் ஒன்றுடன் ஒன்று பொரு ந்த இரண்டுவகையும் நீங்கி அவ்வப்பொருள் அதுவதுவாகவே தங்கவேண்டு வதாயுள்ளது.

காற்றானது அசைவதாகியவோர் பொருள். காலத்திற்குத் தக்கபடி காற்றினது அசைவுவேகம் மாறுதலடைகின்றது. இன்றைத்தினமடிக்குங் காற்று மறுதினம் வேகத்தில் அதிகப்படலாம் அல்லது குறையலாம். ஆதலால் காற்றின் வேகத்திற்கொத்தபடி அதனுள் மின்சாரம் உற்பத்தி யாகும். நாம் வசிக்குமிப்பூமியையே ஓர் பருத்த மின்சாரப்பொருளென்று கூறுவர். ஆதலால் இப்பூமியினோர்பாகமாகிய காற்றிலும் மின்சாரமுண்டு.

இஃதோர்வகை மின்சாரமாம். மேலும் ஆகாயத்தின்கண் பரவும் மேகமானது திரண்டு ஓடக்கூடியதாயுள்ளது. அதனது வேகத்தாலும் மின்சாரம் ஜனிக்கவல்லதேயாம். இது மற்றோர்வித மின்சாரமாம். இவ்விருவித மின்சாரங்களுங் கலக்குமாயின் அவை விரைவில் கூடி ஒளியை யுண்டாக்குகின்றன. அது தான் மின்னலாகும். விரைவிற்கேற்றபடி ஒளி பளபளப்பை யடையும். மிக்க விரைவினுல் மிக்க வொளியுண்டாம். விரைவு குறைந்தால் ஒளியும் குறையும். ஒளியுண்டாகுந்தக்ஷணமே ஓசையுமுண்டாகிறது. அதைத்தான் இடி என்பர். இதுவும் விரைவிற்கேற்றபடி யுண்டாக வல்லது. ஆதலால் மின்னலும் இடியும் ஒரே காலத்தி லுண்டாகின்றன வென்று தெளியக்கூடும். ரசாயனத்தோற்றங்கள் (Chemical phenomena) மின் சாரத்தை இரண்டு விதமாகப் பகுக்க வல்லன. இவ்விஷயத்தைப்பற்றி ரசாயன சாஸ்திரத்திலும் (Chemistry) தத்துவ ஞான சாஸ்திரத்திலும் (Natural philosophy) விஸ்தாரமாய்க்காணலாம். இப்பகுப்பென்னவெனில், ஓர்வித மின்சாரத்தை வரவுக்கு உவமானப்படுத்தி வரவு மின்சாரம், வருமின்சாரம், பெறுமின்சாரம், கவர்மின்சாரம் என்று யாதாயினும் ஓர் தகுந்த பெயர் கொடுத்துக் கூறவல்லது (Positive Electricity). மற்றோர்வித மின்சாரமாவது மேலதற் கெதிர்மொழியாய் செலவுமின்சாரம், போமின்சாரம், விடுமின்சாரம், கழிமின்சாரம் (Negative Electricity) என்று மற்றோர் தகுந்த பெயர் கொடுத்துக் கூறவல்லதாயுள்ளது. காற்றின்கண் உண்டாம் மின்சாரமானது சாதாரணமாய்க் கவர்மின் சாரமாயுள்ளது. ஓர் கண்ணுடிக் கொம்பை யாதாயினுமோர் பட்டினுற் றேய்த்தால், கண்ணுடியானது ஓர் வகை வேகத்தை யடைந்து அருகிலுள்ள காகிதத்தூள்கள் முதலிய இலேசான வஸ்துக்களை ஆகர்ஷிக்கத்தொடங்குகிறது. ஓர் சிறுசடைப்பந்தைப்பட்டுக்கயிற்ருல் தொங்கவிட்டு அதனருகில் வேகமடைந்ததோர் கண்ணுடிக் கொம்பைப் பிடித்தால் சடையானது கண்ணுடிக்கொம்புடன் சற்றுநேரந்தங்கப் பிறகு கண்ணுடியை விட்டு அகல்கிறது. அதாவது வேகத்தைப்பெற்றுள்ள கண்ணுடிக்கொம்பானது சடையை விலக்குகிறது. இத்தகைய சடைப்பந்தை, கம்பளத்தினுல் தேய்க்கப்பட்டு ஓர்வித வேகத்தை யடைந்துள்ள அரக்குத்துண்டினிடம் (rod of sealing wax) பிடித்தால் அரக்குத்துண்டானது சடையைக்கவர்கின்றது. ஆதலால் கண்ணுடிக்கொம்பினுல் விலக்கிய அல்லது கழித்த அல்லது விட்ட அல்லது போக்கிய சடைப்பந்தானது அரக்குத் துண்டினுல் கவர அல்லது பெற அல்லது வரப்பெறுகின்றது. ஆனுல், கண்ணுடியின் மின்சார வேகத்தையும் அதுபோன்ற மற்றெந்த வேகத்தையும் கவர்மின்சாரமென்றே கூறுவர். அரக்குத்துண்டு மின் சார வேகத்தையும் அது போன்ற மற்றெந்த வேகத்தையும் கழிமின்சாரமெ

ன்றே சொல்லி வருவர். காற்றின்கண்ணுண்டாம் மின்சாரமானது எப்பொழுதும் சாதாரணமாய் கவர்மின் சாரமாயுள்ளது. இவ்வகை மின்சாரம் கிளம்புவதற்குக் காரணம் காற்றில் நீராவியுண்டாவதுதான் என்பர் சிலர். இம்மின்சாரத்தை நீராவியானது செலுத்த வல்லதென்பாருமுளர். எவ்விதமானாலும் காற்றின்கண் உண்டாம் மின்சாரம் கவர்மின்சாரமாம்.

மேலும் ஆகாயத்திற் றங்கும் மேகமானது சிறுநீர்த்துளிகளாலானது. இத்துளிகள் அடர்ந்து பரவினால் மேகம் விசாலித்துப் பரவுவதாகும். ஆதலால் மேகத்தின்கண் உண்டாகக்கூடிய மின்சாரம் நேரஞ்செல்லச் செல்ல வலியடையுமென்பதை எளிதில் அறியலாம். இத்தகைய மின்சாரம் பொருட்டன்மைக்குத்தக்கபடி சிற்சில காலங்களில் கவர்மின்சாரமும் கழிமின்சாரமுமாக உண்டாவதியல்பு. ஆதலால் ஆகாயத்திற் பரவியுள்ள மேகவடர்ச்சியின் ஓர் பாங்கில் கவர்மின்சாரமும், மற்றோர் பாங்கில் கழிமின்சாரமுமுண்டாய் ஒன்றுடன் ஒன்று நெருங்குங்கால், முன்கண்டபடி மின்சாரங்கள் நிலைகுலைவதனால் ஓர்வித ஒளியும், ஒலியுடன் சத்தமுமுண்டாகும். சத்தமுண்டாவதற்குக் காரணமென்னவெனில், திடீரென்றுண்டாம் காற்றின் அசைவு தான். ஓர் சிறு கல்லை வெகு வேகமாக வெறிந்தால் சற்று நேரம் கல்லுடன் ஓர்வித ஓசையுமோடுவது போல் காண்கிறோம். அதன் காரணம் யாது? கல்லானது அதிவேகத்துடன் காற்றைத்தள்ளிக்கொண்டு செல்வது, ஒருவன் தண்ணீரில் நீந்துங்கால் அவனது இருகைகளினாலும் நீரைப்பக்கங்களிற் றள்ளிக்கொண்டு செல்வது போன்றதேயாம். காற்றைவிடத்தண்ணீர் கனத்ததாகையால் அதைத்தள்ளும் போது அதிக ஓசையுண்டாகின்றது. அவ்விதமே கல்லானது காற்றில் நீந்திச்செல்வதுபோல் அதிகவேகத்துடன் சென்றால், கல்லின் பருமனுக்கும் காற்றிற்குந் தக்கபடி ஓசையுண்டாகற்பாலது. இது காரணமாகவே மின்சாரங்கள் நிலைகுலையும் போதும் காற்றில் அசைவு திடீரென்று உண்டாவதனால் அதற்குத்தக்க ஓசையும் எழும்பவல்லது. ஆதலால் மேகங்கள் இருவித மின்சாரங்களைக்கொண்டு சந்திப்பின் ஒளியுடன் ஒலியும் கிளம்புவதை அறிய வல்லோம். அவ்வித ஒளியை மின்னலென்றும், ஒலியை இடியென்றுங் கூறிவருகிறோம்.

மற்றும், மேகத்தின்கணுண்டாம் மின்சாரமானது கழிமின்சாரமாய்க் காற்றின்கணுண்டாம் கவர்மின்சாரத்துடன் கலப்பின் மின்னலும் இடியும் கிளம்பவல்லன. ஆதலால் இஃதோர் காரணமாகவுங் காணலாம்.

இடியுண்டாகுங்கால் அதன்ஓசையை நானாவிதமாகக்கேட்கலாகிறோம். சில வேளை இடியானது மிக்க வேகத்துடனே அறைவது போலவும் உடைப்பது போலவும், கிழித்துச்செல்வதுபோலவும் மற்றும் ஓரிடத்திருந்து

மற்றோரிடமாக நோக்கிப்பாய்வது போலவும் கேட்டு வருகிறோம். சிலகாலங்களில் ஆகாயத்திற் பரவியுள்ள மேகத்தின் மேற்றட்டில் மாத்திரம் இடியுண்டாய்க் கீழ்த்தட்டில் யாதுமில்லது போலவுந் தோன்றுவதாயுள்ளது. இத்தகையதோற்றங்களுக்குக் காரணம் என்னவென்று நிச்சயிக்க ஒருவாறு முயல்வோமாக.

மின்னலுக்கும் இடிக்குங் காரணம் இருவகைமின்சாரங்களின் தாக்கென்று முன்னமேயே படித்தோம். இவ்வகைத்தாக்குந் திடீரென்றுண்டாவதால் ஆங்குப்பரவியுள்ள காற்றின்கண் ஓர் பருத்த அசைவுண்டாய் அதனால் அவ்வசைவின் வேகம் சுற்றும்பரவுவதாயுள்ளது. சாமானியவேகத்துடனே காற்றில் வீசப்பட்டதோர் கோலினின்று கிளம்பவல்ல ஓசை காதிற்குப் புலப்படுவதாயிருக்க, மிக்கவேகத்துடன் மின்சாரத்தாக்கினால் (Electric discharge) உண்டாம் காற்றினசைவு ஓர் பருத்த ஓசையாகிய இடியை நமது காதுக்கு வந்து பொருந்துமாறு உண்டாக்க வல்லது. சிற்சிலசமயங்களில் இடியானது திடீரென்று வெகு ஓசையுடன் கிளம்புங்கால், நாம் ஓசை பொறுக்காது மயக்கத்தைக்கொள்ளவுங்கூடும். ஆதலால், காற்றின்கண் மின்சாரத்தாக்கினாலுண்டாம் பருத்த வேகத்தை இடியாகக்கூறுகிறோம். இடியென்பது ஓர் தனிப்பொருளல்ல. ஒருவன் சற்றுத்தூரமிருந்து கைகளைத் தட்டியக்கால் அதனது வேகமானது ஒலியாய்க் கிளம்பி அவ்விடத்தைச்சுற்றியுள்ள காற்றில், அலை போன்ற அசைவையுண்டாக்கக் கண்டால் காற்றினதலை நமது காதில் பொருந்துவதாயுள்ளது. ஆதலாற்றான் நாம் ஓசையைக் கேட்கக்கூடும். காற்றின்கணுண்டாம் இடியோசையானது பூமியின் மேலுள்ள மலை, பருத்த கட்டிடங்கள் போன்ற பொருள்களின் மேல் தாக்கப் பிரதிபலிப்பதாயுள்ளது. அதாவது திரும்பவும் கேட்பதாயுள்ளது. எவ்விதமெனில், கடலோரத்திலடிக்கும் அலையானது பூமியைத்தொட்டுப் பின் திரும்பும்போது அலையாகவே திரும்பக்கூடியது. அதுபோலவே காற்றின்கணுண்டாம் அலையாகிய ஓசையானது ஓர் மலையைத்தாக்க அவ்வலைஅதாவது அவ்வோசைபின் செல்லுமியல்புடையது. ஆதலால் இடியானது வெகு நேரம் கேட்குமாத் தக்கதென்று துணியவல்லோம். சிற்சில சமயங்களில் இடியொலியானது மேகங்களைத்தாக்க அவ்வோசை பின் திரும்புவது முண்டு. இடியோசை வெகு நேரமிருக்க, இதுவுமோர் காரணமாகும். பலவிதமாக இடியொலி பரவுவதற்குக்காரணம் மின்சாரத்தாக்கின் வேகத்தினது அளவும் அவ்விடத்தைச்சுற்றியுள்ள மேகம், அதனருகில் பூமியின்மேலுள்ள மலை, குன்று முதலியவுமேயாம்.

மின்னலின் வகை பலவாம். ஓர் வகை மின்னல் பாம்புபோல வளைந்து வெகு பளபளப்பாயும் மெலியதாயும் சற்று நேரந்தானிருக்கவும் பார்க்கின்றோம். இவ்வகை மின்னல், மேகத்தின்மின்சாரமானது பூமியினது மின்சாரத்துடன் கலக்கவுண்டாகியது. இவ்வகை மின்னலை கோடிமின்னலென்று (Zigzag lightning) கூறவல்லோம். மற்றோர்வகை யாகாயத்தையளாவி மேகத்தை விளக்குவதாகும். அது மேகத்தின் கணுண்டாய மின்சாரத்தாக்கினாலானது. அது யாதோர் உருவமுமற்றது. அதைப் பரப்புமின்னலென்னத்தகும் (Horizon sheet lightning). மற்றும் அடிவாரத்தின்கீழுண்டாய், மின்னலின் ஒளி, ஆகாயத்தின் மேலிடத்தில் மேகங்களில் பரவக்காணலாம். இம்மின்னலி னொலிகேட்கக்கூடியதல்ல. ஏனெனில் அடிவாரத்தின்கீழுண்டாம் ஓசை வெகுதூரமிருந்து கேட்கும் நமக்குப்புலப்படக்கூடியதல்ல. இதைத் தீமின்னலென்று சொல்வர் (heat lightning). மற்றும் தீயானது இரண்டு கும்பலாகக் கிளம்பினதுபோல் மின்னல் காணக்கூடியது. அதன் ஓசை பலபீரங்கிக் குண்டுகள் வெடிப்பது போற்கேட்கும். அதை கோளமின்னலென்று கூறத்தகும். (Globe lightning.)

## வானவில் (Rain bow).

மழைக்காலத்தில் சிலவேளைகளில் வானத்தின்கண் காலையில் அல்லது மாலையில் பல நிறங்கள் பெற்றதோர் பெருவில்லினுருவத் தோற்றத்தைக்காணப்பெறுகிறோம். அத்தோற்ற மெப்போதுஞ் சூரியகிரணங்களுக்கெதிராகவேயுள்ளது. சூரியன் வானஉச்சியிலிருப்பின் இத்தகையவான வில் புலப்படுவதில்லை. இவ்வானவில் யாது? மேகம் வானத்தை யளாவியிருப்பின் இது எப்பொழுதும் தோன்றக்கூடியதா?

பல ஓரங்களையும் மூலைகளையுங் கொண்டுள்ள கண்ணாடிக் கட்டியொன்றின் மூலமாக சூரியன் ஒளியைச்காணின், அவ்வொளி பலவகை நிறங்கொண்டு தோன்றுதலுடையது. சில பருத்த விலையுயர்ந்த கண்ணாடி விளக்குகளின்கீழ் அழகின்பொருட்டுத் தொங்கவிட்டிருக்கும் கண்ணாடிக்கட்டியொன்றின் மூலமாகப்பார்த்தக்கால் அவ்வாறே பார்க்கலாகும். மற்றும் காலைவேளையில் சூரியனது இரேகை சாய்வாக பூமியின்மேல் விழும்போது நீரைக்கையிற் கொண்டு கையினின்றும் நீரைச் சொட்டவிட்டு ஒரு நீர்த்துளியின் மூலமாகச்சூரியகாந்தியைப் பார்ப்பின் அத்துளி பலவித நிறங்களை மேற்கொண்டு அழகுடன் விளங்குகின்றது. வசந்த காலத்தோர்

# T. R. Tawker & Sons,

## MOUNT ROAD, MADRAS.

வைரம், பச்சை, கெம்பு முதலிய ரத்தினங்களும், நகைகளும், எங்களிடம் சரசமாய் விலைக்கு தரப்படும். தவிர நூதனமாய் வேண்டிய நகைகள் உத்திரவின்பேரில் செய்யப்படும். எங்களிடம் தயாராயிருக்கும் நகைகளுக்கு அற்புதமான காட்லாக்கு லெட்டரின் பேரில் அனுப்பப்படும். உயர்ந்த வேலைக்காரர்களைக்கொண்டு வேலைத்திறமாயும் உத்திரவாதமாயும் செய்தனுப்பப்படும். ஒரு முறை பார்த்தால் அனுபோகம் தெரியவரும்.



B. 106 செடியார கொலுசு சவரன் பொன்னல் செய்தது ரூ 165, 138, 118 வரையில். ... வெள்ளி ரூ 8.



B. 510. பொன் கைகெடியாரம் ஹன்டிங் முக்கால் மூடியுடையதும் (லீவர்) தலையில் சாவியுடையதும் சரியான காலங்காட்டுவதுமானது ரூ 140. ... வெள்ளி கெடியாரம் ரூ 25 முதல் 60 - வரையில்.



B. 107 கெடியார கொலுசு சவரன் பொன் ரூ 170. 8-மாத்துப் பொன் 145. 6-மாத்துப் பொன் ரூ 125. ... வெள்ளிக்கொலுசு ரூ 10.



J. 1053. காசிமாலை. பலவிதமான காசுகள்வைத்த காசிமாலை மாதிரிகள் எங்களிடம் தயாராயிருக்கிறது. அதின் விலையும் மாதிரியும் தேவையானவர்களுக்கு மனுவின்பேரில் தெரிவிக்கப்படும். மாதிரி பிளானும் அனுப்பப்படும்.

# THE CHILDREN'S FRIEND

is the other name given to

# SCOTT'S EMULSION

by millions of loving parents for what it has done to build up their baby's health and strengthen his body.

It is so very palatable that children actually relish it.

It make sick babies well and week babies strong.

---



**Always get the Emulsion with this mark—the Fishman—the mark of the "Scott" process!**

NOT TOUCHED BY HAND.

*FOR SALE AT ALL CHEMISTS.*

SCOTT & BOWNE, LTD.,
MANUFACTURING
CHEMISTS,
LONDON, ENGLAND.

---

# வி. ஷேக்பரீத் அண்டு கோ.

## மவுண்டுரோட், சென்னை.

### முன்விலை 18 ரூபாய், தற்காலம் ரூபாய் 6.



நெ. 1. 6 ரூபாய் கிரயத்துக்கு விஸ்டம் ரூஸ்கோப்பேடண்டு லீவர்ஜர்மன் வெள்ளி கெடியாரம் 7-வருஷம் உத்திரவாத ஸ்டாம்பு கியாரண்டியுடன் 24 வித இனாம் சாமான்களும் சேர்த்துக் கொடுக்கப்படும்.

மிக இலட்சணமும், நாணயமும், சரியான காலத்தைக் காட்டக்கூடியதும் விஸ்டம் ராஸ்கோப் பேடண்டு லீவர் சுவிஸ்மேட் கெடியாரமானது ஒருபக்கம் அதிக கனத்த கண்ணாடியால் மூடி போட்டது மேல்சாவியுள்ளது. 4 கெம்பு செதுக்கியது. பார்ப்பவர் ஆச்சரியப் படும்படியானது. எந்தக்கம்பேனியிலும் கிடைக்கப்படமாட்டாது. பெயர்போன கம்பேனியாரால் செய்யப்பட்டது. 24 விதமான விநோத சாமான்களும் சேர்த்து ரூபா 6.

**இனாம் சாமான்களின் விபரம்.**

கெடியாரம் வைக்கும்படியான வில்வெட்பெட்டி 1, கண்ணாடி 1, வில் 1, சீமையில்செய்த வெகு நேர்த்தியான கொலுசு 1, சீமையில் செய்த ஒருபக்கம் எட்வர்ட் சக்கரவர்த்தியும் மற்றொருபக்கம் ராணி அலக்சாண்டிரிணாவுமாகிய இவர்களின் பொட்டகிராப்வைத்த லாக்கெட் தொங்கடம் 1, சைணா பேணா 1, கத்தி 1, பூபோட்ட சைணா குட்டை 1, சீமை செண்ட் என்னும் வாசனைபுட்டி 1, ஆஸ்டிரேலியாவில் செய்த மனவுல்லாச பரிமளம் வீசும் ரோஸ் சோப்பு 1, ஷர்ட்டுபட்டன் செட் 1, பூணா சாவிவளையம் 1, குளிர்ச்சிபொருந்திய மூக்குக்கண்ணாடி 1, ஜெர்மன் மணிபாக்ஸ் 1, சீமை தோல்பை எலக்டிரிக் தங்க ஷோக் மோதிரம் 1, ஆஸ்டிரியாவில் செய்த முன்பார்வையில் கண்ணாடிவைத்து உட்புறத்தில் 2 வருஷத்திய காலண்டர் வைத்து 80 பேஜுகள் அடங்கிய வாய்ப்புறத்தில் பென்சல் வைத்த நோட்புக் 1, பென்சல் 1, குழந்தைகள் வாத்தியம் 1, ஜெர்மன் தேசத்தில் செய்த மன்னாதிமன்னர்களாகிய சக்கரவர்த்திகளின் உருவங்களடங்கியதும் நகைகள் வைத்துக்கொள்ளும்படியான டப்பாக்கள் 6, ஆக மொத்தம் 24 வித சாமான்கள் இனாம்.

**V. SHAIK FAREED & Co,**

*Mount Road,* **Madras.**

# மதுரைத் தமிழ்ச்சங்கத்தில்

## விற்கப்பெறும் புத்தகங்கள்.

"செந்தமிழ்" இரண்டு, மூன்றுந் தொகுதிகள் பைண்ட் செய்யப்பெற்று இப்போது விலைக்குத்தயாராகவுள்ளன. கையிருப்பிற் சிலபிரதிகளேயிருத்தலால், வேண்டியோர் உரியபோதே எழுதி வி. பி-தபால் வாயிலாகப் பெற்றுக்கொள்ளக்கடவர். ஒருதொகுதி விலை ரூ 5. 'பைண்ட்' இல்லாதது ரூ 4—8—0.

### சங்கப்பதிப்பு.

| | | ரூ | அ | பை |
|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்தமூலமும்உரையும் ... ... ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி ... ... ... | 1 | 8 | 0 |
| 3. | ஐந்திணையைம்பதுரை ... ... ... | 0 | 3 | 0 |
| 4. | இனியது நாற்பதுரை, களநூல் ... ... ... | 0 | 3 | 0 |
| 5. | புலவராற்றுப்படை (பழையது) ... ... ... | 0 | 3 | 0 |
| 6. | நேமிநாதம் உரையுடன் ... ... ... | 0 | 10 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி உரையுடன் ... ... ... | 0 | 4 | 0 |
| 8. | பன்னிரு பாட்டியல் ... ... ... | 0 | 4 | 0 |
| 9. | அநுமான விளக்கம் ... ... ... | 0 | 4 | 0 |
| 10. | சங்கப்புலவராற்றுப்படையுரை ... ... ... | 0 | 4 | 0 |
| 11. | விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம் ... ... | 0 | 6 | 0 |
| 12. | திணைமாலை நூற்றைம்பது உரை ... ... ... | 0 | 4 | 0 |
| 13. | அட்டாங்க யோகக்குறள் ... ... ... | 0 | 1 | 0 |
| 14. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 3 | 0 |
| 15. | யாப்பு அணியிலக்கணங்கள் [விசாகப்பெருமாளையரது பஞ்சலக்ஷண வினாவிடையினின்று எடுத்தது.] ... ... | 0 | 8 | 0 |
| 16. | இயற்கைப்பொருட்பாடம் | 0 | 4 | 0 |
| 17. | திருச்செந்திற்கலம்பகம் ... ... ... | 0 | 3 | 0 |
| 18. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் (௧0௫) ... ... | 0 | 1 | 0 |

### மற்றப்பதிப்பு.

| | | | | |
|---|---|---|---|---|
| 19. | தருக்காமிர்தம் ... ... ... | 0 | 8 | 0 |
| 20. | அத்துவித வாக்கியத் தெளிவுரை (ஸ்ரீசிவஞானசுவாமிகள் செய்தது.) ... ... ... | 0 | 4 | 0 |
| 21. | விதானமாலை [சோதிடம்] ... ... ... | 0 | 8 | 0 |

---

☞ **விலாசம்:—மதுரைத்தமிழ்ச்சங்கம் மானேஜ்மெண்டு ஆபீஸ், மதுரை.**